தொகுதி 6, இதழ் 06

செப்டம்பர் 16– 30, 2025

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்




Pradhan Mantri Jan Arogya Yojana
Ayushman Bharat
PM-JAY

## நாடு எதிரொலிக்கிறது ஆயுஷ்மான் பவ

ஆயுஷ்மான் பாரத் திட்டம், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு ஒரு சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது உலகளாவிய, அனைவரையும் உள்ளடக்கிய, சுகாதார மாதிரித் திட்டத்தை உருவாக்குவதால் நாட்டில் இயல்பாகவே 'ஆயுஷ்மான் பவ' என்பது எதிரொலிக்கிறது.



மின் பதிப்புக்கு



# ஒரே மந்திரம் : ‘உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவு’

# ஒரே வழி : தற்சார்பு இந்தியா

நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அனைத்து வயதினரும் ‘மனதின் குரல்’ நிகழ்ச்சியின் மூலம் இணைக்கப்பட்டுள்ளனர். பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டம் அல்லது தூய்மை இந்தியா, காதி அல்லது இயற்கையின் மீதான அன்பு, சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழா அல்லது அமிர்த நீர்நிலை என, பிரதமர் தமது ‘மனதின் குரல்’ நிகழ்ச்சியில் அழைப்பு விடுத்த அனைத்துத் திட்டங்களும் மக்கள் இயக்கமாக மாறியுள்ளன. அந்த உணர்விலேயே, பிரதமர் மோடி, தன்னம்பிக்கைப் பாதையின் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவின் இலக்கை நோக்கி முன்னேறும் அதே வேளையில், உள்ளூர் பொருட்களுக்கான ஆதரவு என்ற தாரக மந்திரத்தை அளித்துள்ளார். மனதின் குரல் நிகழ்ச்சியின் குறிப்பிட்ட பகுதிகள் இங்கே இடம்பெற்றுள்ளன....

- **என்.டி.ஆர்.எஃப் - எஸ்.டி.ஆர்.எஃப் :** மழைக்காலத்தில் இயற்கைப் பேரழிவுகள் நாட்டை சோதிக்கின்றன. வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பெரும் அழிவை நாம் சந்தித்திக்கிறோம். எங்கெல்லாம் பேரிடரால் நெருக்கடி ஏற்பட்டதோ, அங்கெல்லாம், நமது தேசியப் பேரிடர் மீட்புப்படை — மாநிலப் பேரிடர் மீட்புப்படை (என்.டி.ஆர்.எஃப் - எஸ்.டி.ஆர்.எஃப்) வீரர்கள் மற்றும் இதர பாதுகாப்புப் படையினர் உயிர்களைக் காப்பாற்ற இரவும் பகலும் உழைக்கின்றனர்.

- **பேரிடரில் உதவியதற்கு மனமார்ந்த நன்றி :** பேரிடர் நேரத்தில் உதவ ராணுவம் முன் வந்தது. உள்ளூர் மக்கள், சமூகசேவை செய்வோர், மருத்துவர்கள், அரசு நிர்வாகம் மற்றும் அனைவரும் இந்த நெருக்கடியான தருணத்தில் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். இந்தச் சோதனையான நேரத்தில் எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதநேயத்தைக் கொண்டிருந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- **எனது நாடு மாறிக்கொண்டிருக்கிறது:** ஜம்மு-காஷ்மீரின் புல்வாமாவில் உள்ள ஒரு மைதானத்தில் சாதனை எண்ணிக்கையிலான மக்கள் கூடியிருந்தனர். புல்வாமாவின் முதலாவது பகல்-இரவு கிரிக்கெட் போட்டி இங்குதான் நடைபெற்றது. முன்பு, இது சாத்தியமற்றது. ஆனால் இப்போது என் நாடு மாறிக் கொண்டிருக்கிறது. புல்வாமாவில் இரவில் ஆயிரக்கணக்கான மக்கள் கிரிக்கெட்டை ரசிக்கும் காட்சி உண்மையில் மெச்சத்தகுந்தது.

- **விளையாடுபவர் செழிக்கிறார் :** ‘ஒரே பாரதம் - உன்னத பாரதம்’ என்ற உணர்வு, நாட்டின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. அதில் நிச்சயமாக, விளையாட்டு பெரும் பங்கு வகிக்கிறது. அதனால்தான், விளையாடுபவன் செழித்து வளர்கிறான் என்று நான் சொல்கிறேன். நம் நாடு எவ்வளவு விளையாட்டுப் போட்டிகளில் விளையாடுகிறதோ, அவ்வளவு அதிகமாக அது செழித்து வளரும்.

- **இளைஞர்களின் தரவுவங்கி:** ‘பிரதிபா சேது’ என்ற பெயரில் டிஜிட்டல் தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது, இது இந்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையமான யுபிஎஸ்சி தேர்வின் இறுதி தகுதிப் பட்டியலில் இடம்பெற முடியாத 10 ஆயிரத்திற்கும் அதிகமான, திறமையான இளைஞர்களின் தரவுத்தளத்தைக் கொண்டுள்ளது.

- **சூரிய சக்தி அரிசி ஆலை:** சூரிய சக்தி, விவசாயிகளின் வாழ்க்கையையும் மாற்றியமைத்து வருகிறது. அதே வயல்கள், அதே கடின உழைப்பு, அதே விவசாயிகள் ஆனால் இப்போது கடின உழைப்பின் பலன்கள் மிக அதிகம். இந்த மாற்றம் சூரிய சக்தி பம்புகள் மற்றும் சூரிய சக்தி அரிசி ஆலைகளிலிருந்து ஏற்படுகிறது. இன்று, நாட்டின் பல மாநிலங்களில் நூற்றுக்கணக்கான சூரிய சக்தி அரிசி ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சூரிய சக்தி அரிசி ஆலைகள் விவசாயிகளின் வருமானத்தையும் அவர்களின் முகத்தில் பிரகாசத்தையும் அதிகரித்துள்ளன.

- **விஸ்வ கர்மா சகோதரர்கள்:** விஸ்வ கர்மா ஜெயந்தி செப்டம்பர் 17 அன்று கொண்டாடப்படுகிறது. பாரம்பரிய கைவினைப் பொருட்கள், திறன்கள் மற்றும் அறிவுசார் விஞ்ஞானத்தை ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குத் தொடர்ந்து கடத்தும் நமது விஸ்வகர்மா சகோதரர்களுக்கு இந்த தினம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நமது தச்சர்கள், கொல்லர்கள், பொற்கொல்லர்கள், குயவர்கள், சிற்பிகள், கொத்தனார்கள் எப்போதும் இந்தியாவின் செழிப்பான வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்து வருகின்றனர். நமது விஸ்வகர்மா சகோதரர்களுக்கு உதவ, அரசு விஸ்வ கர்மா திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- **இந்தியக் கலாச்சாரம்:** கனடாவின் மிஸ்ஸிசாகாவில் 51 அடி உயரத்தில் பகவான் ஸ்ரீராமரின் சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ராமாயணம் மற்றும் இந்திய கலாச்சாரத்தின் மீதான ஈர்ப்பு, இப்போது உலகின் ஒவ்வொரு பகுதியையும் சென்றடைகிறது.

- **உள்ளூர் பொருட்களுக்கான ஆதரவு:** சுதேசி விஷயத்தை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். பரிசுப் பொருட்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட வேண்டும், உடைகள் இந்தியாவில் நெய்யப்பட்டதாக இருக்க வேண்டும், அலங்காரப் பொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களால் செய்யப்பட வேண்டும், ஒளிரும் பொருட்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருட்களால் செய்யப்பட வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு தேவையிலும் உள்ள அனைத்தும் சுதேசியாக இருக்க வேண்டும். ‘இது சுதேசி’ என்று பெருமையுடன் சொல்லுங்கள். இந்த உணர்வுடன் நாம் முன்னேற வேண்டும். ஒரு மந்திரம் - ‘உள்ளூர் பொருட்களுக்கான ஆதரவு’, ஒரு பாதை- ‘தற்சார்பு இந்தியா’, ஒரு குறிக்கோள்- ‘வளர்ச்சியடைந்த இந்தியா’.

“மனதின் குரல்” ஒலிபரப்பைக் கேட்க, க்யூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

# NEW INDIA SAMACHAR

**VOLUME 6, ISSUE 06 | SEPTEMBER 16-30, 2025**



**EDITOR IN CHIEF**
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**CHIEF CONSULTING EDITOR**
SANTOSH KUMAR

**CONSULTING EDITOR**
VIBHOR SHARMA

**SENIOR ASST. CONSULTING EDITOR**
PAWAN KUMAR

**ASST. CONSULTING EDITORS**
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

**LANGUAGE EDITORS**
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

**CHIEF DESIGNER**
SHYAM TIWARI

**SENIOR DESIGNER**
PHOOL CHAND TIWARI

**DESIGNERS**
ABHAY GUPTA
SATYAM SINGH




**CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES**
https://newindiasamachar.pib.gov.in/news.aspx

TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

**Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'**

## உள் பக்கங்களில்....




ஆயுஷ்மான் பாரத் 7 ஆண்டுகள்

### ஆரோக்கியமான இந்தியா

**வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை வலுப்படுத்துதல்**

உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத், கடந்த 2018 செப்டம்பர் 23 அன்று தொடங்கப்பட்டு, 7 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்தத் தருணத்தில், சுகாதாரத் துறையில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள முன்முயற்சிகள், எவ்வாறு வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு வலுவான உந்து சக்தியாக மாறி வருகிறது என்பதை அறிந்து கொள்வோம்... |10–27

நாடாளுமன்றம் : மழைக்காலக் கூட்டத்தொடர் – 2025

**மழைக்கால கூட்டத்தொடர் தேசிய பெருமை மற்றும் வெற்றிக் கொண்டாட்டத்தின் அடையாளமாக மாறியது**



நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மொத்தம் 15 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன |6-7

கயாஜிக்குப் பிரதமரின் பயணம்

**வளர்ச்சியின் சங்கமமும், பீகாரின் மகத்துவமும்**



பீகார் மாநிலத்திற்கு 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள திட்டங்கள் கிடைத்தன | 28–30


செய்திச் சுருக்கம் | 4-5

சாலையோர வியாபாரிகளின் கனவுகளை நனவாக்கும் பிரதமரின் ஸ்வநிதி, 2030 வரை மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பல முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. | 8-9

**குஜராத்தில் தற்சார்பு இந்தியா திட்டம் வேகப்படுத்தப்பட்டுள்ளது**
பிரதமரின் இரண்டுநாள் பயணத்தின்போது அறிவிக்கப்பட்ட 5,400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் |31-33

**கொல்கத்தாவின் வளர்ச்சிக்கு மெட்ரோ புதிய உத்வேகத்தை அளிக்கிறது.**
பிரதமர் மோடி 5,200 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டங்களை வழங்கினார். | 34-35

**தற்சார்பு இந்தியா என்பது வளர்ச்சியடைந்த தேசத்தின் அடித்தளம்.**
எகனாமிக் டைம்ஸ் உலகத் தலைவர்கள் மன்றத்தில் பிரதமர் மோடியின் உரை | 36-37

**இந்தியாவில் சொகுசுக்கப்பல் சுற்றுலாவின் புதிய தொடக்கம்**
நீர்வழிப் பாதைகள் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான 'சொகுசுக்கப்பல் பாரத இயக்கம்' தொடங்கி ஓராண்டு நிறைவடைந்தது. | 38-39

**வறுமையிலிருந்து விடுபட்டவர்களுக்கு அதிகாரம் அளித்தல்**
பிரதமரின் மக்கள் நிதி திட்டத்தின் 11–து ஆண்டு நிறைவு சிறப்பு அறிக்கையாக | 40-41

**மிகப்பெரிய அணுஆற்றல் சக்தியாக இந்தியா வளர்ந்து வருகிறது**
அணுசக்தித் துறையின் நிலையை மாற்றிய கடந்த 11 ஆண்டுகளின் முக்கியமானபடிகள் | 42-45

**போலா பாஸ்வான் சாஸ்திரி: பீகார் அரசியலின் ஒரு சிறந்த முன்னுதாரணம்**
மாநிலத்தின் முதலாவது தலித் முதலமைச்சர், அவரது பிறந்தநாளில் நினைவுகூரப்பட்டார். | 48




**மக்களவை ஜனநாயகத்தின் என்ஜினாக உள்ளது**

மத்திய சட்டமன்றத்தின் முதல் இந்திய அவைத்தலைவராக விட்டல்பாய் படேல் தேர்ந்தெடுக்கப்பட்டதன் 100 ஆண்டுகள் | 46-47


**Published & Printed By:** Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau Of Communication.
**Printed At:** Kaveri Print Process Pvt. Ltd. A-104, Sec-65, Noida-201301 U.P.
**Communication Address:** Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi-110003.
**e-mail:** response-nis@pib.gov.in, **RNI No.:** DELTAM/2020/78809

## ஆசிரியரின் மேசையிலிருந்து...

# மருத்துவ சிகிச்சை வசதியை ஒவ்வொரு இந்தியருக்கும் கிடைக்கக்கூடியதாக மாற்றுதல்

வாழ்த்துகள்,

சமஸ்கிருதக் கவிஞர் காளிதாசர் இயற்றிய குமார சம்பவத்தில், “शरीरमाद्यं खलु धर्मसाधनम्।” என எழுதப்பட்டுள்ளது. அதாவது, அனைத்துப் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கான முதல்வழி உடல்தான். நாட்டு மக்கள் ஆரோக்கியமாக இருக்கும்போதுதான், நாடும் வலிமையாகவும் திறமையாகவும் மாறும். இந்தச் சிந்தனை, தற்போது இந்திய சுகாதாரப் புரட்சியின் அடிப்படையாக மாறியுள்ளது. இந்தியாவில் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு என்ற கனவு நனவாகி வருகிறது. ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டம் இந்தத் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இன்று, ஏழை-எளிய மக்கள், இலவச சிகிச்சை வசதியைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். முன்பு, சிகிச்சைக்கான செலவு காரணமாக, கோடிக்கணக்கான குடும்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் வறுமைக்கோட்டிற்குக் கீழே சென்று கொண்டிருந்தன. நிலத்தை, சொத்துக்களை அவர்கள் விற்க வேண்டியிருந்தது. ஆனால் இப்போது ஆயுஷ்மான் பாரத் போன்றதொரு திட்டம் ஏழை-நடுத்தர குடும்பங்களுக்கு பலத்தை அளித்திருப்பது மட்டுமின்றி, அவர்களை நம்பிக்கைகளாலும் நிரப்பியுள்ளது.

மேலும், சுகாதாரத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மாவட்டஅளவில் தரமான சுகாதார வசதிகள் கிடைப்பது, மருத்துவக்கல்லூரிகள் மற்றும் மருத்துவ இடங்களின் விரிவாக்கம், தடுப்பூசி மற்றும் மிக முக்கியமாக, முன்கூட்டியே சுகாதாரப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்றவை சுகாதாரத்துறைக்கு ஒரு புதிய திசையை வழங்கியிருப்பது மட்டுமின்றி, வளர்ச்சியடைந்த இந்தியாவில் அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பை வழங்குவதற்கான அடித்தளத்தையும் தயார் செய்துள்ளது. வரும் செப்டம்பர் 23 அன்று ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்தச் சூழலில், இந்தியாவின் சுகாதாரப் புரட்சி இந்த இதழின் அட்டைப்படக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

ஆளுமைப் பிரிவில், பீகாரின் முதலாவது தலித் முதலமைச்சர் போலா பாஸ்வான் சாஸ்திரி பற்றி அறிந்து கொள்ளலாம். முன்னோடித் திட்டங்களில் கடல்வழி சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் திட்டமான ‘சொகுசுக்கப்பல் இந்தியா’ திட்டத்தின் ஓராண்டு நிறைவு, மத்திய அமைச்சரவை முடிவுகள், நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரம், கடந்த 15 நாட்களில் பிரதமர் நரேந்திர மோடியின் நிகழ்ச்சிகள் ஆகியவை இதழின் மற்ற சிறப்பம்சங்களாக இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன், மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்திய அவைத்தலைவர் விட்டல்பாய் படேல் பதவியேற்று 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, தில்லி சட்டமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் சிறப்புக் கட்டுரை இதழில் சேர்க்கப்பட்டுள்ளது. அணுசக்தித் துறையில் இந்தியாவின் முக்கியப் பங்களிப்பாளராக மாறுவதற்கான இலக்கு குறித்த சிறப்புத் தகவல் மற்றும் மனதின் குரல் இதழின் உள்பக்க அட்டையிலும் சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10% குறைக்க வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கோரிக்கை பின்பக்க அட்டையிலும் இடம்பெற்றுள்ளன.

உங்கள் கருத்துகளைத் தொடர்ந்து எங்களுக்கு அனுப்புங்கள்...

(திரேந்திர ஓஜா)

இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 மொழிகளில் படிக்க/பதிவிறக்கம் செய்ய
*https://newindiasamachar.pib.gov.in/*

# மின்னஞ்சல் பெட்டி




## அரசின் திட்டங்களை அறிந்து புரிந்துகொள்ள சரியான பத்திரிகை

அரசின் திட்டங்களை அறிந்து புரிந்துகொள்ள நியூ இந்தியா சமாச்சார் பத்திரிகை சரியான தகவல்களைத் தருகிறது. பத்திரிகையில் புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்கள் முற்றிலும் துல்லியமாக உள்ளன. வாசகர்களிடமிருந்து அதிகமான யோசனைகள் மற்றும் கருத்துகளைப் பெறவேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்

profgvramana@gmail.com

## தகவலை உள்ளடக்கத்துடன் இணைப்பது இளைஞர்களுக்கு உதவியாக இருக்கும்

நான் நியூ இந்தியா சமாச்சார் பத்திரிகையின் தொடர்ச்சியான வாசகர். சமூக ஊடக யுகத்தில், தகவல் உள்ளடக்கத்துடன் இளைஞர்கள் இணைவதற்கு நியூ இந்தியா சமாச்சார் உதவுவதாக நான் உணர்கிறேன். பத்திரிகை மூலம், நாட்டின் வளர்ச்சியில் ஒரு புதிய பயணத்தை நாம் பார்க்க முடிகிறது. உங்களின் ஒவ்வொரு இதழும் எங்களின் விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

yshrivastava2008@gmail.com

## மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது, நான் நிச்சயமாக இந்தப் பத்திரிகையைப் படிப்பேன்

எனது கிராமப் பஞ்சாயத்துக்கு வரும் நியூ இந்தியா சமாச்சார் இதழில் வெளியாகும் ஒவ்வொரு கட்டுரையையும் நான் நிச்சயமாகப் படிப்பேன். இந்த இதழ் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த இதழில், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றிப் படிக்க முடிந்தது. பிரிவு 370 ரத்து செய்யப்பட்ட பின், ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்கில் சாலைகள், நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெற்றேன்.

prasadpagadala631@gmail.com

## நியு இந்தியா சமாச்சார் இதழுக்கு நன்றி

அறிவு மற்றும் சுய வளர்ச்சிக்கான வாசிப்பு எனது வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாகும். வேலைவாய்ப்பு இதழ் போன்ற எந்த ஒரு அரசு பத்திரிகை மற்றும் அரசு செய்தித்தாளையும் நான் தொடர்ந்து படிக்க விரும்புகிறேன். நியூ இந்தியா சமாச்சார் இதழ் அரசின் திட்டங்கள் மற்றும் பல முக்கியமான விஷயங்கள் குறித்த தகவல்களை வழங்குகிறது. நியூ இந்தியா சமாச்சார் இதழில் வெளியிடப்பட்ட தகவல்கள் விரிவானவை, முழுமையானவை. இதனால் நியூ இந்தியா சமாச்சார் இதழுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**maheshwarisocietyms@gmail.com**

## மாணவர்கள், முத்தக் குடிமக்கள் மற்றும் அறிவார்ந்தவர்களுக்குப் பயனுள்ள இதழ்.

நியு இந்தியா சமாச்சார் பத்திரிகை, மாணவர்கள், முதியவர்கள் மற்றும் அறிவார்ந்தவர்களுக்கு விரிவான, தகவல்கள் அடங்கிய உள்ளடக்கத்தை வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இது நாட்டிற்கு ஒரு சிறந்த பணி. ஒரு மாணவனாக, நான் நியு இந்தியா சமாச்சார் பத்திரிகையை மிகவும் விரும்புகிறேன்.

rahulsuthar2580@gmail.com


தொடர்பு முகவரி: அறை எண்-1077,
சூச்னா பவன், சிஜிஓ வளாகம், புது தில்லி -110003.
மின்னஞ்சல்: response-nis@pib.gov.in



आकाशवाणी समाचार
Akashvani

சனி-ஞாயிற்றுக்கிழமை தோறும் பிற்பகல் 3:10 மணி முதல் 3:25 மணி வரை அகில இந்திய வானொலி எஃப்எம் கோல்டில் நியூ இந்தியா சமாச்சாரைக் கேட்க க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பதிவு செய்யுங்கள்

# 3.5 கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் அரசு ஊக்கத்தொகைகளை வழங்கும்

செங்கோட்டை கொத்தளத்திலிருந்து அறிவிக்கப்பட்ட அறிவிப்பாக இருந்தாலும் சரி, பொது பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, மத்திய அரசின் மாறுபட்ட பணிக் கலாச்சாரம் காரணமாக நாடு அதை நனவாக்கியுள்து. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தில் பதிவுசெய்வது தொடர்பான அறிவிப்பை கடந்த ஆகஸ்ட் 15 அன்று பிரதமர் மோடி வெளியிட்டார். மூன்றாவது நாளான ஆகஸ்ட் 18 அன்று இதற்கான வலைத்தளம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 3.5 கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அரசால் ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் நோக்கம் அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதும், வேலைவாய்ப்பு திறன் மற்றும் சமூகப் பாதுகாப்பை அதிகரிப்பதும் ஆகும். இதற்காக, வேலை தேடுபவர்களை மட்டுமின்றி, வேலை வழங்குவோரையும் பொருளாதார ரீதியாக அரசு ஊக்குவிக்கும்.

2025 ஆகஸ்ட் 1 முதல் 2027 ஜூலை 31 வரை உருவாக்கப்படவுள்ள வேலைகள் வாயிலாக இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்கும். இதற்கு



(https://pmvbry.epfindia.gov.in வலைத்தளத்தில் பதிவு செய்யலாம் அல்லது https://pmvbry.labour.gov.in) என்ற இந்தத் திட்டத்தின் கீழ், புதிதாக வேலை செய்யும் இளைஞர்களுக்கு இரண்டு தவணைகளில் ரூ.15,000 வரை ஊக்கத்தொகை வழங்கப்படும். அதே நேரத்தில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக தொழில் உரிமையாளர்களுக்கு ஒரு புதிய ஊழியருக்கு மாதத்திற்கு ரூ.3,000 வரை ஊக்கத்தொகை வழங்கப்படும்.

## ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டியது. இடைநிற்றல் விகிதம் குறைந்தது.

ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும், மாணவர்-ஆசிரியர் விகிதத்தைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் தரமான கல்விச் சூழலை உருவாக்குவதற்கான முயற்சியின் விளைவாக, 2024-25 கல்வியாண்டில் முதல் முறையாக ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டியுள்ளது.

இது 2022-23 உடன் ஒப்பிடும்போது சுமார் 7 சதவீதம் அதிகமாகும். கல்விக்கான ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்டத் தகவல் அமைப்பு (யுடிஐஎஸ்இ) பிளஸ் அறிமுகப்பட்டதற்குப்பின், ஒரு கல்வியாண்டில் முதல் முறையாக இந்த எண்ணிக்கையை கடந்துள்ளதாக கல்வி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. இதன் காரணமாக, மாணவர்-ஆசிரியர் விகிதம் இப்போது அடிப்படை நிலையில் 10 ஆகவும், ஆயத்த நிலையில் 13 ஆகவும், நடுத்தர நிலையில் 17 ஆகவும், இடைநிலை நிலையில் 21 ஆகவும் மாறியுள்ளது. இது புதிய தேசிய கல்விக் கொள்கை (என்இபி) பரிந்துரைத்த 1:30 என்ற விகிதத்தை விட மிகவும் சிறந்தது. அதே நேரத்தில், 2024-25 கல்வியாண்டில், கடந்த இரண்டு ஆண்டுகளான 2022-23 மற்றும் 2023-24 உடன் ஒப்பிடும்போது, தொடக்க நிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் படிப்பை இடைநிறுத்துவோர் விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. தொடக்கப் பள்ளியில், இந்த விகிதம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 3.7% என்பதிலிருந்து 2.3% ஆகவும், நடுத்தர நிலையில் 5.2% என்பதிலிருந்து 3.5% ஆகவும், இரண்டாம் நிலையில் 10.9% என்பதிலிருந்து 8.2% ஆகவும் குறைந்துள்ளது.



# பெண்களுக்கான வேலைவாய்ப்பு விகிதம் 7 ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது



பெண்களுக்கு அதிகாரமளித்தல் மட்டுமின்றி, பெண்கள் தலைமையிலான வளர்ச்சியின் அணுகுமுறை காரணமாகவும், கடந்த 11 ஆண்டுகளில் பெண்கள் தொடர்பான ஒவ்வொரு துறையிலும் புரட்சிகரமான மாற்றங்களை நாடு கண்டுள்ளது. வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான விழிப்புணர்வு பிரச்சாரப் பயணத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடி 2047-ம் ஆண்டுக்குள் நாட்டின் பணியாளர்களில் 70 சதவீத பெண்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கான இலக்கை நிர்ணயித்துள்ளார். தற்போது, தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் இரட்டிப்பாகியுள்ளது. தொழிலாளர் அமைச்சகத்தின் காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பின்படி, 2017-18 நிதியாண்டில் பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் 22% ஆக இருந்தது, இது 2023-24-ல் 40.3% ஆக அதிகரித்துள்ளது.

இந்த விகிதம் வெறும் 7 ஆண்டுகளில் சுமார் இரு மடங்காக அதிகரித்துள்ளது. மேலும் பெண்களின் வேலைவாய்ப்பு கிராமப்புறங்களில் 96% ஆகவும், நகர்ப்புறங்களில் 43% ஆகவும் அதிகரித்துள்ளது. பட்டதாரி பெண்களின் வேலைவாய்ப்புத் திறன் 2013-ல் 42% என்பதிலிருந்து 2024-ல் 47.53% ஆக அதிகரித்துள்ளது. முதுநிலை மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி பெற்ற பெண்களிடையே வேலைவாய்ப்பு விகிதம் 2017-18-ல் 34.5% ஆக இருந்தது.

2023-24-ம் ஆண்டில் 40% வரை அதிகரித்துள்ளது. இது மட்டுமின்றி, 15 அமைச்சகங்களின் 70 மத்திய திட்டங்கள் மற்றும் தேசிய அளவில் 400-க்கும் அதிகமான மாநில அளவிலான திட்டங்கள் மூலம் பெண்களின் தொழில்முனைவு மிகவும் நேர்மறையான முடிவுகளைக் காட்டியுள்ளது. 2017-18 சுயதொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் விகிதம் 51.9% ஆக இருந்த நிலையில், 2023-24 இது 67.4% ஆக அதிகரித்துள்ளது.

**பெண்களின் வேலைவாய்ப்பு அதிகரிப்பு**

கிராமப்புறம்
**96%**

நகர்ப்புறம்
**43%**

பட்டதாரிப் பெண்களின் வேலைவாய்ப்புத் திறன் 2013-ல் 42% ஆக இருந்தது. இது 2024-ல் 47.53% ஆக அதிகரித்துள்ளது.

# மாணவர்களின் ஆதார் அட்டைகள் இனி பள்ளிகளில் புதுப்பிக்கப்படும்



போட்டித் தேர்வுகள் மற்றும் உயர்கல்வி சேர்க்கைக்கான மாணவர்களின் வசதியை எளிதாக்கும் வகையில், ஆதார் அட்டைகளை வழங்கும் அமைப்பான இந்திய தனித்துவ அடையாள ஆணையம் ஒரு முக்கியமான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

நாட்டில் 5 முதல் 15 வயதுக்குட்பட்ட 17 கோடி குழந்தைகளின் ஆதார் பயோமெட்ரிக் புதுப்பித்தல் நிலுவையில் உள்ளது. இத்தகைய சூழலில் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் பள்ளி எழுத்தறிவுத் துறையுடன் இணைந்து ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. குழந்தைகளுக்கான ஆதார் புதுப்பித்தலில் உள்ள தடையைக் களைய, கட்டாய பயோமெட்ரிக் புதுப்பிப்பு குறித்த தற்போதைய நிலை கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் அமைப்பு பிளஸ் பயன்பாட்டில் கிடைக்கும். இது கோடிக்கணக்கான மாணவர்களுக்கு கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தல் வசதியை வழங்கும். இந்தப் புதுப்பித்தலுக்காக பள்ளிகளில் முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்படும். ஆதார் அட்டையில் பயோமெட்ரிக் புதுப்பித்தல் மூலம், நீட், ஜேஇஇ போன்ற போட்டித் தேர்வுகள் மற்றும் கியூட் போன்ற பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குப் பதிவு செய்வதற்கும் அரசின் பல்வேறு திட்டங்களின் பலன்களைப் பெறுவதற்கும் மாணவர்கள் இனி சிரமப்படத்தேவையில்லை.

# பழங்குடியினருக்கான திறன் மேம்பாட்டு திட்டத்தால் புத்துயிர் பெறும் பழங்குடியினப் பகுதிகள்

இந்தியாவின் பழங்குடி சமூகங்கள் நீண்ட காலமாக நாட்டின் நாகரிக மரபின் அமைதியான பாதுகாவலர்களாக செயல்பட்டு வருகின்றன, வளமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்கின்றன. கடந்த 11 ஆண்டுகளில் கொள்கையில் கவனம் இருந்தபோது, பல பழங்குடிப் பகுதிகளுக்கு இன்னும் சிறப்பு கவனம் தேவைப்படுகிறது. 2047-ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இலக்கை எட்ட, மத்திய அரசு இப்போது வேகமாக பழங்குடி சமூகங்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கி முன்னேறிச் செல்கிறது. இந்த திசையில் மத்திய பழங்குடியினர் நல அமைச்சகம் பழங்குடியினருக்கான திறன் மேம்பாட்டு இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

பழங்குடியினருக்கு அடிப்படைத் தலைமைத்துவம் குறித்துப் பயிற்சி அளிக்கும் இத்திட்டம் உலகின் மிகப்பெரிய திட்டமாகும். பயிற்சியும் ஊக்கமும் பெற்ற நோக்கத்தால் இயக்கப்படும் 20 லட்சம் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு படையை உருவாக்குவது இந்த திட்டத்தின் லட்சியமாகும். இது 30 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள 1 லட்சத்திற்கும் அதிகமான பழங்குடியினர் வசிக்கும் கிராமங்களில் 10.5 கோடிக்கும் அதிகமான பழங்குடி குடிமக்களைச் சென்றடைந்து அவர்களை மேம்படுத்தும். இந்த திட்டத்தின் கீழ், மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் முதன்மைப் பயிற்சியாளர்களுக்கான ஒரு சூழல் அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் மாநில அளவிலான முதன்மைப் பயிற்சியாளர்களுக்கான தரப்படுத்தப்பட்ட ஆய்வகமும் உருவாக்கப்படுகிறது. சமூகங்களை ஒழுங்கமைப்பதைத் தவிர, இந்தப் பயிற்சியாளர்கள் பிரதமரின் ஜன்மன்,மண்ணின் மைந்தன் பழங்குடியினர் கிராம மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தேசிய அரிவாள் செல் ரத்த சோகை ஒழிப்பு இயக்கம் போன்ற முன்முயற்சிகளை மேற்கொள்வார்கள், இவை தொடர்பான தரவுகளையும் சேகரிப்பார்கள்.

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் விண்வெளியில் சாதனைகள் பற்றிய விவாதம்

# மழைக்கால கூட்டத்தொடர் தேசிய பெருமையையும், வெற்றிக் கொண்டாட்டத்தையும் குறிக்கிறது

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றி மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் முதல்முறையாக மூவண்ணக் கொடியை ஏற்றிய சுபான்ஷு சுக்லாவின் பயணத்தின் ஊடாக நடைபெற்ற நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், தேசத்திற்கான வெற்றிவிழாவாக மாறியது. ஜூலை 21 அன்று தொடங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆகஸ்ட் 21 அன்று முடிவடைந்தது. இது, இந்த இரண்டு சாதனைகளின் வெற்றியை அடிக்கோடிட்டுக் காட்டியது. இந்தக் கூட்டத்தொடரின் போது, மக்களவையில் 14 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. 12 மசோதாக்கள் மக்களவையிலும், 15 மசோதாக்கள் மாநிலங்களவையிலும், 15 மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டன.



நாடாளுமன்றம் ஜனநாயகத்தின் மிக உயர்ந்த கோயில். ஒவ்வொரு ஆண்டும், மூன்று கூட்டத்தொடர் (பட்ஜெட், மழைக்காலம் மற்றும் குளிர்காலம்) நடத்தப்படுகின்றன. ஆனால் இந்த முறை, ஒரு மாதம் நீடித்த நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர், நாட்டின் பெருமை, இந்தியாவின் ராணுவ வலிமை, இந்தியாவின் புதிய பாதுகாப்புக் கொள்கை, இந்தியாவின் தற்சார்பு ஆகியவற்றால் நிரம்பியிருந்தது. பாகிஸ்தான் ஆதரவு பெற்ற பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் துணிச்சல், வீரம் மற்றும் வலிமையின் அடையாளமாக மாறிய ஆபரேஷன் சிந்தூரின் வெற்றி, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இந்தியாவின் மூவண்ணக் கொடியை ஏற்றிய பின் சுபான்ஷு சுக்லா பாதுகாப்பாக பூமி திரும்பியது குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடைபெற்ற சிறப்பு விவாதம், நாட்டின்முன் எதிர்காலத்திற்கான பொற்கால இந்தியாவை எடுத்துக்காட்டியது.

புதிய இந்தியாவின் வெற்றிவிழா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் ராணுவ சக்தி மற்றும் திறனை உலகம் கண்டது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் கீழ், ராணுவம் தனது இலக்கை 100% அடைந்தது. பயங்கரவாதிகளின் எஜமானர்கள் தங்கும் இடத்தை வெறும் 22 நிமிடங்களில் தரைமட்டமாக்கியது. இந்த நடவடிக்கையில், இந்தியா பாதுகாப்புத்துறையில் அடைந்துள்ள தற்சார்பு இந்தியத் தன்மையுடன் கூடிய புதிய வடிவத்திலான ராணுவத் திறனையும் உலகம் கண்டது. மக்களவையில் நடந்த இந்த சிறப்பு விவாதத்திற்கு பதிலளித்த பிரதமர் மோடி, 'இந்தியாவின் சாதனையை எடுத்துரைக்க நான் எழுந்து நிற்கிறேன்' என்று கூறினார். உறுதியை வெளிப்படுத்தும் அவரது வார்த்தைகள், 140 கோடி மக்களின் அடையாளமாக மாறின. இது மட்டுமின்றி, இந்தியாவின் புதிய விண்வெளி லட்சியங்களின்

சின்னமாக மாறி இருக்கும் சுபான்ஷு சுக்லா பூமிக்குத் திரும்பியதும், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் மேலோங்கி இருந்தது. அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை நோக்கிய புதிய எழுச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்திய இந்த வெற்றிகரமான பயணத்தை ஒட்டுமொத்த நாடும் கொண்டாடியது.

எனினும், மழைக்காலக் கூட்டத் தொடரின் போது, ஆளும் கட்சிக்கும் எதிர்கட்சிகளுக்கும் இடையே சில விஷயங்களில் கருத்து வேறுபாடு நிலவியது; இதன் காரணமாக, ஒதுக்கப்பட்ட 120 மணி நேரத்தில் மக்களவையில் 37 மணி நேரமும் மாநிலங்களவையில் 41 மணி நேரம் 15 நிமிடங்களும் விவாதம் நடைபெற்றது. 'சர்வதேச விண்வெளி நிலையத்தில் முதலாவது இந்திய விண்வெளி வீரர்- '2047-ல் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான' விண்வெளிப் பயணத்தின் முக்கியப் பங்கு' என்ற தலைப்பில் ஆகஸ்ட் 18 அன்று மக்களவையில் சிறப்பு விவாதம் நடைபெற்றது. ஆனால் அவையில் எழுந்த தொடர்ச்சியான அமளியின் காரணமாக விவாதம் முழுமை அடையவில்லை. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, கூட்டத்தொடரின் கடைசி நாளில் தனது நிறைவுரையின்போது, அவையில் நிலவும் இடையூறுகள் குறித்து வேதனையை வெளிப்படுத்தினார். ஜனநாயகத்தில் தங்கள் பிரதிநிதிகளிடமிருந்து மக்களின் எதிர்பார்ப்புகள் பற்றி குறிப்பிட்ட அவர், குடிமக்களின் விருப்பங்களை நிறைவேற்ற, உறுப்பினர்கள் அவையில் மக்கள் நலன் சார்ந்த முக்கிய மசோதாக்கள், விஷயங்கள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான விவாதத்தை மேற்கொள்ள தங்கள் நேரத்தை செலவிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றிக் கொண்டாட்டம் மற்றும் விண்வெளித் துறையில் இந்தியாவின் அபாரமான சாதனை ஆகியவற்றைக் குறிக்கும் வகையில் மழைக்கால கூட்டத்தொடர் அமைந்திருந்தது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கூட்டத் தொடரின் போது நாட்டின் வளர்ச்சிப் பயணத்திற்கு ஊக்கமளிக்கும், குடிமக்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஏராளமான மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன, அவற்றில் சில நிறைவேற்றப்பட்டு, சில நாடாளுமன்ற குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இருந்தபோதும் வேறு சில பிரச்சனைகள் தொடர்பாக அமளி ஏற்பட்டது. எனவே மக்களவைத் தலைவர் கீழ்க்காணும் அறிவிப்பை வெளியிட்டார்: உடன்படுவதும், வேறுபடுவதும் ஜனநாயகத்தின் இயற்கையான நடைமுறைகள்.

## இடையூறுகளுக்கு இடையிலும், சாதனைகளுடன் கொள்கைகள் எதிரொலித்ததைக் கேட்க முடிந்தது

### 18-வது மக்களவை ஐந்தாவது கூட்டத்தொடர்

*ஆபரேஷன் சிந்தூர் பற்றியும், இந்திய விண்வெளிப் பயணத்தின் சாதனைகள் பற்றியும் அவையில் ஒரு சிறப்பு விவாதம் நடைபெற்றது*

- மாநிலங்களவையில் மொத்தம் 15 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மொத்தம் 15 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
- மக்களவையில் 14 அரசு மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு, 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
- 120 மணி நேரம் ஒதுக்கப்பட்ட போதும், கூட்டத்தை 37 மணி நேரம் மட்டுமே நடத்த முடிந்தது.
- மக்களவையின் நிகழ்ச்சி நிரலில் 419 கேள்விகள் சேர்க்கப்பட்ட போதும் இடையூறுகளால் 5 நட்சத்திர குறியிட்ட கேள்விகளுக்கு மட்டுமே வாய்மொழியாக பதிலளிக்க முடிந்தது.

### மக்களவையில் பிரதமர் மோடி கூறியபோது

விவாதம் - மேலும் விவாதம்,
எதிரி பயத்தில் நடுங்கும் அளவுக்கு,
ஒரே ஒரு எண்ணத்தை மனதில் கொள்ளுங்கள் -
சிந்தூரின் கௌரவமும், நமது ராணுவத்தின் வீரமும் கேள்விகளில் கூட அசைக்க முடியாததாக இருக்க வேண்டும்.
பாரதத்தாய் தாக்கப்பட்டால், கடுமையான பதிலடி கொடுக்கப்பட வேண்டும்,
எதிரி எங்கு மறைந்திருந்தாலும், நாம் பாரதத்திற்காக மட்டுமே வாழ வேண்டும்.

### மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா கூறியபோது

'சர்வதேச விண்வெளி நிலையத்தில் முதலாவது இந்திய விண்வெளி வீரர்- '2047-ல் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான' விண்வெளித் திட்டத்தின் முக்கியப் பங்கு' என்ற தலைப்பில் இன்று அவையில் நாம் விவாதிக்கிறோம். வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுக்காக இந்திய விமானப்படையின் குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவிற்கு அவை மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. விண்வெளிக்கான அவரது பயணமும், வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியதும், ஒரு பயணத்திற்குக் கிடைத்த வெற்றி மட்டுமின்றி, 140 கோடி இந்தியர்களின் பெருமிதம் மற்றும் எழுச்சியின் ஆதாரமாகவும் விளங்குகிறது. குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவின் இந்த சாதனை நம் இளைஞர்களுக்குப் பெரிதும் ஊக்கமளிக்கிறது. அறிவியல் மேன்மை, தனித்துவம் மற்றும் நம்பகத்தன்மையுடன் இந்தியாவின் விண்வெளித் திட்டம் தனக்கான ஒரு சிறப்பு அடையாளத்தை உலகின் முன் வைத்துள்ளது.

எனினும் கூட்டு முயற்சியின் வாயிலாக கண்ணியம், நல்லொழுக்கம் மற்றும் நற்பண்புகளுடன் அவை இயங்க வேண்டும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மிக உயரிய ஜனநாயக அமைப்பு அதன் குடிமக்களுக்கு என்ன செய்தியை அளிக்கிறது என்பதை அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுயபரிசோதனை செய்ய வேண்டும்.



மத்திய அமைச்சரவை முடிவுகள்

# சாலையோர வியாபாரிகளின் கனவுகளை வலுப்படுத்துதல்

## 2030 வரை பிரதமரின் ஸ்வநிதித் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது

*உலகளாவிய கொவிட்–19 சவாலின் போது சுமார் 1 கோடி சாலையோர வியாபாரிகளுக்கு சுய தொழிலுக்கான புதிய பாதையை வகுத்துத் தந்து அவர்களின் வாழ்வாதாரத்தில் உயிர்நாடியாக விளங்கியது, பிரதமரின் ஸ்வநிதித் திட்டம். இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நன்மையையும் ஊக்கத்தையும் கருத்தில் கொண்டு, இந்தப் புரட்சிகரமான திட்டத்தை மறுசீரமைத்து, 2030 மார்ச் வரை நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரின் நலனுக்கும் உறுதி பூண்டுள்ள மத்திய அரசின் இந்த முன்முயற்சி, சாலையோர வியாபாரிகளுக்கு நிதி ஆதரவு வழங்குவது மட்டுமின்றி, அவர்களின் மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் கணிசமாக ஊக்குவித்துள்ளது. இத்துடன் ஏராளமான இதர முக்கிய முன்மொழிவுகளுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது...*

**முடிவு:** பிரதமரின் சாலையோர வியாபாரிகள் தற்சார்பு நிதித் (பிரதமரின் ஸ்வநிதி) திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, 2030 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**தாக்கம்:** இத்திட்டத்திற்கான மொத்த செலவு 7,332 கோடி ரூபாய். மறுசீரமைக்கப்பட்ட திட்டம், புதிதாக 50 லட்சம் பயனாளிகள் உட்பட 1.15 கோடி பேர் பயனடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாலையோர வியாபாரிகளின் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும் என்பதை இது நிரூபிக்கும்.

- இந்தத் திட்டம் சாலையோர வியாபாரிகளை டிஜிட்டல் மயமாக்கப்பட்டவர்களாகவும், சமூக ரீதியாகப் பாதுகாப்பானவர்களாகவும், வணிக ரீதியாகத் தற்சார்பு உடையவர்களாகவும் மாற்றும்.
- மறுசீரமைக்கப்பட்ட திட்டத்தின் முக்கிய அம்சங்களாக, முதல் தவணைக் கடன் 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தப்படும். இரண்டாவது தவணைக் கடன் 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக அதிகரிக்கப்படும். மூன்றாவது தவணைக் கடன், முன்பு போலவே 50,000 ரூபாயாகத் தொடரும்.
- 2025 ஜூலை 30 நிலவரப்படி சுமார் 68 லட்சம் சாலையோர வியாபாரிகளுக்கு 13,797 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 13,797 கோடி ரூபாய் மதிப்புக்கு 96 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- டிஜிட்டல் செயல்பாடுகளில் அதிகம் ஈடுபடும் சுமார் 47 லட்சம் பயனாளிகள், 6.09 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 557 கோடிக்கும் அதிகமான டிஜிட்டல்

பரிமாற்றங்களை மேற்கொண்டு, மொத்தம் 241 கோடி ரூபாய் கேஷ்பேக் சலுகைகளைப் பெற்றுள்ளனர்.

- ‘ஸ்வநிதி மூலம் செழிப்பு’ முன்முயற்சியின் கீழ், 3,564 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து 46 லட்சம் பயனாளிகளின் சுய விவரக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளன.

**முடிவு: கர்நாடகா, தெலங்கானா, பீகார் மற்றும் அசாம் மாநிலங்களுக்குப் பயனளிக்கும் 3 ரயில்வே திட்டங்களுக்கும், குஜராத் மாநிலம் கட்ச்–ன் தொலைதூரப் பகுதிகளை இணைக்கும் ஒரு புதிய ரயில் பாதை திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**தாக்கம்:** 12,328 கோடி ரூபாய் மதிப்பில் ரயில்வே அமைச்சகத்தின் நான்கு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது- 1: தேஷால்பர்-ஹாஜிபிர்-லூனா மற்றும் வாயோர்-லக்பட் புதிய பாதை. 2: செகந்திராபாத் (சனத்நகர்)- வாடி, 3: பகல்பூர் - ஜமால்பூர் 3-வது பாதை 4: ஃபர்கேட்டிங் - நியூ தின்சுகியா இரட்டை ரயில் பாதை.

- பயணிகள் மற்றும் சரக்குகளின் தடையற்ற, விரைவான போக்குவரத்தை உறுதி செய்வதை இந்தத் திட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த முன்முயற்சி, இணைப்பை வழங்கி, வசதியை மேம்படுத்துவதுடன், சரக்குப் போக்குவரத்து செலவையும் குறைக்கும்.
- இந்த முடிவு, எண்ணெய் இறக்குமதி மீதான சார்பையும், கரியமில வாயு வெளியீடுகளையும் குறைக்கும்.
- இந்தத் திட்டங்களின் கட்டுமானத்தின் போது சுமார் 2.51 கோடி மனித நாட்கள் நேரடி வேலைவாய்ப்பை உருவாக்கும்.
- குஜராத், கர்நாடகா, தெலங்கானா, பீகார் மற்றும் அசாம் மாநிலங்களின் 13 மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த நான்கு திட்டங்கள், இந்திய ரயில்வேயின் பயன்பாட்டில் உள்ள வலையமைப்பில் கூடுதலாக சுமார் 565 கிலோ மீட்டரை சேர்க்கும்.

**முடிவு: ஒடிசாவில் மொத்தம் 8307.74 கோடி ரூபாய் மூலதனச் செலவில் அரசு–தனியார் பங்களிப்பு முறையில் தலைநகர் பிராந்திய சுற்றுவட்டச் சாலையை அணுக (புவனேஸ்வர் புறவழிச்சாலை 110.875 கி.மீ தூரத்திற்கு) ஆறு வழிச் சாலை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.**

**தாக்கம்:** கட்டாக், புவனேஸ்வர் கோர்தா போன்ற நகரங்களில் இருந்து அதிகப்படியான வணிகப் போக்குவரத்து மாற்றி அமைக்கப்பட்டு, ஒடிசா மற்றும் இதர கிழக்கு மாநிலங்களுக்கு இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க பயன்களை அளிக்கும்.

- இது சரக்குகளைக் கையாளும் செயல்திறனை அதிகரிக்கும், போக்குவரத்து செலவைக் குறைக்கும், இந்தப் பகுதியில் சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும். திட்டம் நிறைவடைந்ததும், பிராந்திய பொருளாதார மேம்பாட்டில் இந்த புறவழிச் சாலை முக்கியப் பங்கு வகிக்கும்.
- முக்கியமான சமயத் தலங்கள் மற்றும் பொருளாதார மையங்களுக்கு இடையே இந்தத் திட்டம் இணைப்பை வலுப்படுத்தும். வர்த்தகம் மற்றும் தொழில்துறை மேம்பாட்டிற்கான புதிய வாய்ப்புகளுக்கு இது வித்திடும்.



**முடிவு: ராஜஸ்தான் மாநிலம் கோட்டா–பண்டியில் 1507 கோடி ரூபாய் செலவில் பசுமை விமான நிலையம் அமைக்க ஒப்புதல்**

**தாக்கம்:** கல்வியோடு சேர்ந்து தொழில் மையமாக விளங்கும் கோட்டாவில் நவீன விமான நிலையத்திற்கான கோரிக்கை நீண்ட காலமாக எழுப்பப்பட்டு வருகிறது.

- தற்போதுள்ள சிறிய விமான நிலையம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது, இப்போது புதிதாக பசுமை விமான நிலையம் ஒன்று கட்டமைக்கப்படும்.
- இந்த முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டம், இந்தப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் போக்குவரத்து அதிகரிப்புக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் இரண்டு ஆண்டுகளில் நிறைவுபெறும்.
- இந்தத் திட்டத்தில் 20,000 சதுர மீட்டர் பரப்பளவில் முனையக் கட்டிடம் ஒன்று உருவாக்கப்படும். போக்குவரத்து அதிகம் உள்ள நேரங்களில் 1000 பயணிகளை இது கையாளும். ஆண்டுக்கு 20 லட்சம் பயணிகளைக் கையாளும் திறனை இந்த முனையம் பெற்றிருக்கும்.

**முடிவு: 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏல விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க ஒப்புதல்.**

**தாக்கம்:** காமன்வெல்த் போட்டிகளால் உள்ளூர் வர்த்தகங்கள் பயனடைவதுடன், வருவாயும் அதிகரிக்கும். வேலைவாய்ப்புகள் பெருகுவதுடன், லட்சக்கணக்கான இளம் இந்திய விளையாட்டு வீரர்கள் எழுச்சி பெறுவார்கள்.

- உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உள்கட்டமைப்புடன், போட்டிகளை நடத்தும் நகரமாக அகமதாபாத் முன்மொழியப்பட்டுள்ளது.
- காமன்வெல்த் போட்டிகளில் 72 நாடுகள் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சுற்றுலா, முதலீடு மற்றும் உலகளாவிய விளையாட்டுகளை நடத்துவதில் இந்தியாவின் நிலை வலுப்பெறும். ●

*அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண க்யூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்*

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் 7ஆண்டுகள்

# ஆரோக்கியமான இந்தியா

## வளர்ச்சியடைந்த இந்தியா தொலைநோக்குப் பார்வையை வலுப்படுத்துதல்



வளர்ச்சியடைந்த இந்தியா 2047 என்ற தீர்மானத்திற்கு ஆரோக்கியமான இந்தியா முக்கிய அங்கமாகும். இந்தியா, ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்கு வருங்கால தலைமுறை ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்கு சுகாதார சேவைகள் பெருமளவில் அணுகக் கூடியதாக இருப்பதும் சம அளவு முக்கியமானது. நவீன மருத்துவமனைகளையும், சிகிச்சை வசதிகளையும் இந்திய மக்கள் பெறும்போது, அவர்களின் ஆரோக்கியம் மேம்படுவதுடன், அவர்களின் ஆற்றல் சரியான திசையில் பயன்படுத்தப்பட்டு, செயல்பாட்டுத் திறனும் அதிகமாக இருக்கும். புதிய இந்தியாவின் சுகாதார சீர்திருத்தங்களில் அனைவரையும் உள்ளடக்குதல் வேரூன்றி இருப்பதால், ஏழை எளிய மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், கடந்த 11 ஆண்டுகளில் சுகாதாரத் துறையில் இது போன்ற நவீன முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஆரோக்கியமான இந்தியாவிலிருந்து இணக்கமான இந்தியா, இணக்கமான இந்தியாவிலிருந்து வலுவான இந்தியா, வலுவான இந்தியாவிலிருந்து வளமான இந்தியாவாக, அமிர்த காலத்தில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் துடிப்பான பயணத்தின் மைல்கல்லாக சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சி இப்போது மாறியுள்ளது'

'உங்கள் ஆரோக்கியம், எங்கள் தீர்மானம்', என்ற குறிக்கோளுடன், 2018 செப்டம்பர் 23 அன்று தொடங்கப்பட்ட உலகின் மிகப்பெரிய சுகாதாரத திட்டமான ஆயுஷ்மான் பாரத், 7 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்தத் தருணத்தில், வளர்ச்சியடைந்த பாரதத்தை அடைவதற்கு சுகாதாரத் துறையில் மத்திய அரசின் இந்த முன்முயற்சி எவ்வாறு வலுவான உந்துசக்தியாக உள்ளது என்பதைத் தெரிந்து கொள்வோம்...



national health authority
नाम/NAME
ADITI YADAV
जन्म वर्ष/YOB: 2014
ABHA Number :
91-2505-0481-8775
लिंग/GENDER: FEMALE
₹5 लाख का मुफ़्त उपचार



ஆயுஷ்மான் பாரத்...

# மக்கள் ஆரோக்கியத்தின் பாதுகாப்புக் கவசம்

உலகளாவிய சுகாதாரக் காப்பீட்டை நோக்கிய முன்முயற்சியான ஆயுஷ்மான் பாரத்– பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் வாயிலாக, உலகின் மிகப்பெரிய சுகாதாரப் பராமரிப்பு நல்வாழ்வுத் திட்டத்தை இந்தியா அறிமுகம் செய்தது. நாடு முழுவதும் சுமார் 60 கோடி மக்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவ சிகிச்சையை இலவசமாக வழங்குவது வெறும் திட்டமல்ல; இது புதிய இந்தியாவின் தன்னம்பிக்கை. ‘இனி சிகிச்சை செலவால் துவண்டு போவதற்கு பதிலாக, அவர்கள் வலிமையுடன் முன்னேறுவார்கள்’ என்ற ஒரு வலுவான செய்தியை இத்திட்டம் முன்வைக்கிறது. 2018 செப்டம்பர் 23 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் அறிமுகம் செய்யப்பட்ட உலகின் மிகப்பெரிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், ஏழைகள் மற்றும் நலிவடைந்த மக்களுக்குத் தரமான சுகாதார சேவை வழங்குவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது’

## தில்லியில் ரூ. 5 லட்சத்திற்கான கூடுதல் சலுகை




**35வது** ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துவதில் நாட்டிலேயே 35வது இடமாக, ஏப்ரல் 2025–ல் இந்தத் திட்டத்தில் தில்லி சேர்ந்தது.

தில்லியின் பயனாளிகள்

**6.54** லட்சம் குடும்பங்கள்

**30** லட்சம் மக்கள்



மூத்த குடிமக்கள் **06** லட்சம்

- மத்திய அரசு வழங்கும் 5 லட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையுடன், கூடுதலாக 5 லட்சம் ரூபாய் வழங்க தில்லி அரசு முடிவு செய்துள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினால் பயனடையும் ஜம்மு காஷ்மீர்

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தால் நாட்டிலேயே 100% மக்கள் தொகை பயனடையும் ஒரே மாநிலமாக ஜம்மு காஷ்மீர் திகழ்கிறது. கடந்த 2020 டிசம்பரில் பிரதமர் மோடி இத்திட்டத்தை அறிமுகம் செய்தார். தொடக்கத்தில், மாநிலத்தின் 6 லட்சம் குடும்பங்கள் மட்டுமே திட்டத்தால் பயனடைந்து வந்தன. தற்போது மாநிலத்தில் உள்ள 21 லட்சம் குடும்பங்களும் பயனடைகின்றன.

## ஒடிசாவில் பெண்கள் உள்ள குடும்பங்களுக்குக் கூடுதலாக 5 லட்சம் ரூபாய் காப்பீடு




**34வது** ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துவதில் நாட்டிலேயே 34வது இடமாக, ஒடிசா இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

- ஒடிசாவில் கோபபந்து மக்கள் ஆரோக்கிய திட்டத்துடன் இணைந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையுடன், பெண் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்குக் கூடுதலாக 5 லட்சம் ரூபாய் காப்பீடும் வழங்கப்படுகிறது.

பத்தொன்பது வயதான பார்த் சவாலியாவுக்கு சிறு வயது முதலே இருந்து வந்த தொடர் இருமல் பிரச்சனை பொறியாளராகும் அவரது முயற்சிகளை நீர்த்துப் போகச் செய்தது. அகமதாபாத் அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவரது நாசி எலும்பு வளைந்திருந்தது (செப்டம்) தெரியவந்தது. இதற்கு சிகிச்சையளிக்க (செப்டோபிளாஸ்டி) 15,000 ரூபாய் செலவாகும் என்று கூறப்பட்டது. அவரது குடும்பத்திற்கு இது மிகப்பெரிய தொகை. அவரது தந்தை ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் உதவியை நாடினார். மொத்த செலவையும் இத்திட்டம் ஏற்றுக் கொண்டதால் காரணமாக அந்தக் குடும்பத்தின் ஒரு மாத வருவாய் சேமிக்கப்பட்டதுடன், ஒரு சில



*இப்போது, மருத்துவ சிகிச்சைக்கு வருவாயை மீறிய செலவு இல்லை; ஆயுஷ்மான் பாரத், குடும்பங்களுக்கு வாழ்நாள் முழுவதும் நிம்மதியையும் சுகாதாரப் பாதுகாப்பையும் வழங்கியுள்ளது.*



## ஆயுஷ்மான் பாரத்
### பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

आयुष्मान कार्ड/AYUSHMAN CARD

₹5 लाख का मुफ़्त उपचार

**41.91+** கோடி

சுமார் 41.91 கோடி ஆயுஷ்மான் அட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன

ஆண்கள் **21.21+** கோடி

பெண்கள் **20.65+** கோடி

2025 செப்டெம்பர் 1 வரை

**9.42+** கோடி நோயாளிகள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

**4.29+** கோடி

**4.16+** கோடி

**32,912** பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகள்

**17,666** அரசு மருத்துவமனைகள் | **15,246** தனியார் மருத்துவமனைகள்

- பொருளாதார ரீதியாக நலிவடைந்த 40% மக்கள், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஆண்டுதோறும் 5 லட்சம் ரூபாய் வரையிலான சுகாதாரக் காப்பீட்டின் பலனைப் பெறுகிறார்கள். இதன் அடிப்படை, சமூக-பொருளாதார சாதிக் கணக்கெடுப்பு-2011 ஆகும்.
- சமூக பொருளாதார மற்றும் சாதிக் கணக்கெடுப்பு அல்லாத தரவுகளைப் பயன்படுத்தி மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள், திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கையைத் தங்கள் சொந்த செலவில் அதிகரித்துள்ளன.
- சுமார் 1.25 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள 9.42 கோடிக்கும் அதிகமான நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.
- இந்தத் திட்டத்தின் கீழ் 27 மருத்துவ சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த 1,960-க்கும் அதிகமான சிகிச்சைகளுக்கு காப்பீடு அளிக்கப்படுகிறது

### ஆயுஷ்மான் அட்டையை உருவாக்குவதும், தகுதியை சரி பார்ப்பதும் எளிதாக்கப்பட்டுள்ளது

நீங்கள் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயனாளியாக இருந்து, ஆயுஷ்மான் அட்டை உங்களுக்கு வேண்டுமானால், அருகில் இருக்கும் யுடிஐ உள்கட்டமைப்பு தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் மையத்திற்குச் சென்று அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் திட்டத்தால் பயனடைய நீங்கள் தகுதியுடையவரா என்பதைத் தெரிந்து கொள்ளவும், யுடிஐ உள்கட்டமைப்பு தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் மையத்தை அணுகலாம்.

**14555** என்ற எண்ணினைத் தொடர்பு கொண்டு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்

**1800110770** என்ற எண்ணிற்கு மிஸ்டு கால் கொடுத்து, 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆயுஷ்மான் வய வந்தனா அட்டையை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த தகவல்களைப் பெறலாம்.

வாரங்களிலேயே பார்த் மீண்டும் பள்ளிக்கு செல்லத் தொடங்கினார்.

'ஆயுஷ்மான் பாரத் திட்டத்தால் பயனடைந்துள்ள லட்சக்கணக்கான மக்களில் நானும் ஒருவன். சிறுநீரகப் பிரச்சனையால் நான் அவதிப்பட்டு வந்த வேளையில், இந்தத் திட்டத்தின் கீழ் பீகார் மாநிலம் பாட்னாவில் சிகிச்சை பெற்றுக் கொண்டேன். இந்தத் திட்டத்தினால், நாட்டில் உள்ள ஏழை மற்றும் நடுத்தர வகுப்பினர் அதிக அளவில் பயனடைகிறார்கள். ஆயுஷ்மான் பாரத் திட்டம், குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் அதிகப் பயன்களை வழங்குகிறது.' சுகாதார காப்பீட்டின் பலன்களை எளிதில் பெறுவது மற்றும் எந்தச் செலவுமின்றி சிகிச்சை பெறுவது குறித்த இந்த மனநிறைவான வார்த்தைகள்

### ஆயுஷ்மான் ஆரோக்கிய மையம்

வீடுகளின் அருகில் ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, இந்தத் திட்டத்தின் கீழ் ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2025 ஜூலை 15 வரை, நாடு முழுவதும் 178,154 ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. துணை சுகாதார மையம் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள் வாயிலாக விரிவான ஆரம்ப சுகாதார சேவை வலுப்படுத்தப்படுகிறது. இந்த மையங்களில், தொற்று மற்றும் தொற்று அல்லாத நோய்கள், இனப்பெருக்க மற்றும் குழந்தை மருத்துவ சேவைகள் உட்பட மொத்தம் 12 வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# …..இல்லையென்றால், காப்பீடு இல்லாத குடும்பம் தங்களின் சொந்தப் பணத்தை செலவிட வேண்டியிருக்கும்




ஆயுஷ்மான் திட்டத்தின்மூலம், கட்டணமின்றி அளிக்கப்பட்ட சிகிச்சைக்குப் பின், பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதிய ஞானேந்திரா, தனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொண்டார். இந்த மாற்றமிகு திட்டத்தின்மூலம், ஞானேந்திரா போன்ற லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கை எளிதானதாக மாறியுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன், சிகிச்சைக்கான செலவு காரணமாக, ஏராளமானோர் வறுமைக்கோட்டுக்குக் கீழே செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை அளிக்கும் இந்தப் புரட்சிகர திட்டம், நாட்டில் உள்ள 60 கோடிக்கும் அதிகமான ஏழைகள், நடுத்தர வகுப்பினர், வயதானவர்களுக்கு வரமாக மாறியுள்ளது.

பீகாரைச் சேர்ந்த ஞானேந்திர குமார் குப்தாவிடமிருந்து வந்துள்ளன. அவரது சிறுநீரக நோய்க்கு கிராமப்புறங்களைச் சேர்ந்த 85.9% குடும்பத்தினரும், நகர்ப்பகுதிகளைச் சேர்ந்த 82% குடும்பத்தினரும் சுகாதார காப்பீட்டை பெறாமல் இருந்ததாக தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் 71-வது ஆய்வில் தெரியவந்தது. இந்திய மக்களில் 17%-க்கும் அதிகமானோர், தங்களது குடும்ப பட்ஜெட்டில் குறைந்தபட்சம் 10% தொகையை மருத்துவத்துக்காக செலவிட்டனர். மருத்துவத்துக்கு அதிக அளவில் செலவு செய்ததால், பல குடும்பங்கள் கடனில் சிக்கின. இந்தியாவின் கிராமப்பகுதிகளில் உள்ள 24%-க்கும் அதிகமான மக்களும், நகர்ப்பகுதிகளைச் சேர்ந்த 18%



**ஆயுஷ்மான் பாரத், அனைவருக்குமான உயிர்க் கவசமாக இருப்பதால்,** இது பெண்கள், முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நம்பத்தகுந்த மருத்துவப் பாதுகாப்பாக உள்ளது. இதன்மூலம், அனைத்து வயதினரும், ஒவ்வொரு குடும்பமும் கவலையின்றி வாழ முடிகிறது.

மக்களும் கடன் வாங்கியே தங்களது மருத்துவச் செலவுகளை மேற்கொண்டனர். தற்போது ஆயுஷ்மான் திட்டத்தின்மூலம், 60 கோடி மக்களுக்கு பலன் கிடைப்பதால், அவர்கள் தங்களின் மருத்துவ செலவு குறித்த கவலையிலிருந்து விடுபட்டுள்ளனர்.

முன்னர், அனைவருக்கும் சுகாதாரப் பராமரிப்பு என்ற பேச்சு, வெறும் முழக்கமாகவே இருந்தது. ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை அளிக்கும் உலகின் மிகப்பெரும் சுகாதார வசதியை முதல்முறையாக அரசு வழங்கியது. பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்து தனது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்த பிகாரின் பாட்னாவைச் சேர்ந்த ஞானேந்திரா, மக்களுடன் தான் இணைந்திருப்பதாக உணர்வதாக தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, ஞானேந்திராவுக்கு பிரதமர் மோடி எழுதிய கடிதம் மூலம், அவர் நாட்டு மக்களின் நலன் குறித்து எவ்வாறு சிந்தித்து வருகிறார் என்பது தெரியவந்துள்ளது. பிரதமர் மோடி தனது கடிதத்தில், ‘உங்களது உடல்நலன் மேம்பட்டு வருவதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம், கடந்த சில நாட்களில் வெற்றிகரமாக சிறுநீரக சிகிச்சை பெற்றிருப்பதை நீங்கள் பகிர்ந்துகொண்டிருப்பது, என் மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது’ என்று தெரிவித்துள்ளார். முன்னதாக ஞானேந்திரா எழுதிய கடிதத்தில், ‘உங்களது (பிரதமர் மோடி) வீரம் மற்றும் தனிஆளுமையால் நாட்டு மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் மற்றும் வழிகாட்டுதல் கிடைக்கும்’ என்று தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளித்த பிரதமர் மோடி, வார்த்தைகளால் மட்டும் தனது உணர்வுகளை வெளிப்படுத்தி முடிக்கவில்லை. அவர் எழுதிய கடிதத்தில், ‘மருத்துவச் செலவுகள் காரணமாக, குடும்பத்தினர் தங்களது சேமிப்பை ஒரே நேரத்தில் இழந்துவந்ததை பார்த்துள்ளோம். பல நேரங்களில், செலவு காரணமாக மக்கள் சிகிச்சை பெறாமலேயே இருந்துவந்தனர். இன்று, ஆயுஷ்மான் பாரத் திட்டம், எந்தவொரு இந்தியருக்கும் சிகிச்சை கிடைக்காமல் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. உரிய சிகிச்சை கிடைக்கும்போது, ஒருவரின் வாழ்க்கையில் புதிய நம்பிக்கையும், வழியும் கிடைக்கிறது என்பதை இந்தத் திட்டம் உறுதிப்படுத்துகிறது,’ என்று தெரிவித்துள்ளார்.

ஆரோக்கியமான நபரால், அவரது குடும்பத்தினருக்கு சுமை இருக்காது. நாட்டை கட்டமைக்கும் பணியில் அவர் தனது பங்களிப்பை வழங்குவார். இந்த உண்மையைக் கொள்கைகள் மற்றும் திட்டங்களுடன் இணைக்கும் வகையில், கடந்த 11 ஆண்டுகளாக சுகாதாரத் துறையில் புதிய புரட்சியை மத்திய அரசு நடத்தி வருகிறது. இன்று, நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் சிறந்த சுகாதார வசதிகளை வழங்கும் இயக்கம் அதிவேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக, சுகாதாரக் கல்வியில் மிகப்பெரும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், நாட்டில் மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் தரமான சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. மக்கள் மருந்தகத் திட்டத்தின்மூலம், ஏழைகள் மற்றும் நடுத்தர வகுப்பினருக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. கருவுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதைக் கண்காணிக்க டிஜிட்டல் தளம் செயல்பாட்டில் உள்ளது. கோடிக்கணக்கான மக்களுக்கு தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. தொலை மருத்துவம் மூலம், மருத்துவரை சந்திக்க முடியாத யாரும் இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின்

*நாட்டில் சுகாதாரத் துறையை மாற்றியமைக்கும் வகையில், தேசிய நோக்கத்துடன் செயல்பட்டு, ஒரு புதிய தேசிய சுகாதாரக் கொள்கையைக் கொண்டுவந்துள்ளோம். தூய்மை இந்தியா இயக்கம் முதல் ஆயுஷ்மான் பாரத் வரை, தற்போது, ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம், இதுபோன்று, இந்த முயற்சியில் பல்வேறு திட்டங்கள் உள்ளன.*

*நரேந்திர மோடி,* பிரதமர்.





# மருத்துவ வசதிகள் மேம்படும்போது, நேர்மறையான பலன்கள் கிடைக்கின்றன

### மருத்துவக் கல்வியின் நிலையில் மாற்றம்




* இவற்றில் 19 பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன

**13,86,157**

அலோபதி மருத்துவர்கள் பதிவுசெய்துள்ளனர். இதனை தேசிய மருத்துவ ஆணையம் தெரிவித்துள்ளது.

**811** மக்களுக்கு ஒரு மருத்துவர் சேவையாற்றுகின்றார்.

**157**

மாவட்ட/கீழ்நிலை மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டு, மருத்துவக் கல்லூரிகளாக மாற்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 131-ல் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**75**

திட்டங்களுக்கு பிரதமரின் ஸ்வஸ்த்யா சுரக்ஷா திட்டத்தின்கீழ், உயர் சிறப்புப் பிரிவு அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 71 திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

### சுகாதாரத்திற்கான செலவு அதிகரிப்பால் மக்களின் பணம் சேமிக்கப்பட்டது

கடந்த 10 ஆண்டுகளில் சுகாதாரம் தொடர்பான பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்வதில் பெருமளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தனது மக்கள் நலத் திட்டங்கள் மூலம், சாதாரண மக்களின் சிகிச்சைக்கான சுமையை மத்திய அரசு குறைத்துள்ளது. 2013-14-ம் ஆண்டிலிருந்து 2021-22-ம் ஆண்டு வரை மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டது. 2013-14-ல் ஒட்டுமொத்த செலவினத்தில் சுகாதாரத்துக்கான பங்கு 28.6 சதவீதமாகவும், பொதுமக்களின் பங்கு 64.2% ஆகவும் இருந்தது. இது 2021-22-ல் சிகிச்சைக்காக பொதுமக்கள் மேற்கொள்ளும் செலவு, 39.4% ஆக குறைந்தது. அதேநேரம், அரசின் செலவினம், 48% ஆக அதிகரித்தது.

- ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின்மூலம், மக்களின் செலவு குறைந்து, ரூ.1.25 லட்சம் கோடிக்கும் அதிகமாக சேமிக்கப் பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வறிக்கை 2024-25-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.





நடவடிக்கைகள் மூலம், ஊக்கமளிக்கும்வகையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மருத்துவத்துக்காக மேற்கொள்ளப்படும் ஒட்டுமொத்த செலவு சதவீதத்தில், தனிநபர்கள் அடிப்படையிலான செலவு சதவீதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. அதேநேரம், சுகாதாரத்துக்கான அரசின் செலவு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. இதுவரை, 2 லட்சம் சுகாதார நல மையங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது வட்ட அளவில் சிறந்த மருத்துவமனைகள் மற்றும் நவீன ஆய்வகங்களின் வலையமைப்பைக் கட்டமைக்கும் சிறப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுதந்திரமடைந்து 60-70 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படாத பணிகள், கடந்த 11 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு புதிதாக எய்ம்ஸ் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும், அதேவேகத்தில், மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களும் அதிகரித்துள்ளதைக் காணலாம். இதன்மூலம், ஏழைக் குழந்தைகளின் மருத்துவக் கனவுகள் எளிதாக நிறைவேறுகின்றன. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள், நிர்பந்தம் காரணமாக, மருத்துவப் படிப்புக்காக வெளிநாடு செல்ல வேண்டிய அவசியமில்லை. மருத்துவப் படிப்பு இடங்களை அதிகரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு

## தாய்– சேய் இறப்பு விகிதம் குறைந்துள்ளது




பேறுகால இறப்பு குறித்த ஐநா-வின் மதிப்பீட்டு உள் முகமைக் குழு அறிக்கையின்படி, இந்தியாவில் பேறுகால இறப்பு விகிதம் 1990-க்கும் 2023-க்கும் இடைப்பட்ட காலத்தில் 86% குறைந்துள்ளது.

தாய் இறப்பு விகிதம் (லட்சம் பிறப்புகளுக்கு)




### மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுகாதாரத்துக்கான செலவினத்தின் பங்கு படிப்படியாக அதிகரிப்பு




### அரசின் பொதுச் செலவினத்தில் சுகாதாரத்திற்கான செலவினப் பங்கு அதிகரிப்பு




* குறிப்பு: அனைத்து விவரங்களும் சதவீத அடிப்படையில்




### சிசு இறப்பு விகிதம் (1,000 பிறப்புகளுக்கு)

- உலகளவில் 58% குறைந்த நிலையில் இந்தியாவில் 1990-க்கும், 2023-க்கும் இடைப்பட்ட காலத்தில் 71% அளவுக்கு குறைந்தது.

### பிறந்த சில நாட்களிலேயே இறப்பு விகிதம் (1,000 பிறப்புகளுக்கு)




### 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் (1,000 பிறப்புகளுக்கு)




* மாதிரி பதிவு அமைப்பு புள்ளியியல் அறிக்கை 2021 தரவுகள் அடிப்படையில்

வருகின்றன. கடந்த 11 ஆண்டுகளில், எம்பிபிஎஸ் மற்றும் எம்டி படிப்புகளில் புதிதாக ஒரு லட்சத்துக்கும் அதிகமான இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

உண்மையில், சுகாதார வசதிகளைப் பெறுவது அதிகாரத்தைச் சார்ந்து இருந்தது. அதனை மாற்றி மருத்துவ வசதிகள் பெறுவதில் எந்தவொரு இந்தியரும் விடுபடக் கூடாது என்பதை உறுதிசெய்து பொது சுகாதார வசதிகளை பிரதமர் நரேந்திர மோடி மறுவடிவமைப்பு செய்துள்ளார்.

2014-ம் ஆண்டுக்கு முன், இந்தியாவில் சுகாதாரம் என்பது புறக்கணிக்கப்பட்ட துறையாக இருந்தது. நாடு சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளுக்குப் பிறகும், ஒருங்கிணைந்த மருத்துவ வசதிகள் காகித வடிவிலேயே இருந்தன. ஆனால், தற்போதைய மத்திய அரசு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம், இதனை நனவாக்கியுள்ளது. சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடு 85% அதிகரிக்கப்பட்டு, நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் வளங்கள் சென்று சேர்வது உறுதிசெய்யப்பட்டுள்ளது. 2014-ம் ஆண்டில் பிரதமர் மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன், இந்தியாவில் சுகாதார வசதியைப் பெறுவது ஏழைகளுக்கு சுமையாக இருந்தது. மருத்துவ சிகிச்சையா அல்லது மற்ற அத்தியாவசியத் தேவைகளா என்பதை தேர்வுசெய்ய வேண்டிய நிலையில் மக்கள் இருந்தனர். இந்த நிலை அதிவேகமாக மாற்றம் பெற்றுள்ளது.



### 11 ஆண்டுகளில் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பணிகள்

# இந்தியாவில் சுகாதாரப் புரட்சிக்கான அடித்தளம்

## தேசிய சுகாதாரக் கொள்கை-2017

இந்தியாவில் உள்ள அனைவருக்கும் சமமான, குறைந்த செலவிலான மற்றும் தரமான மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம் கிடைக்கும் நோக்கில், புதிய தேசிய சுகாதாரக் கொள்கைக்கு மார்ச் 15, 2017-ல் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

அமிர்த மருந்தகம்

## தீவிரமான நோய்களுக்கான மருந்துகள் மற்றும் உடலுக்குள் பொருத்தும் கருவிகளை பாதி விலையில் வழங்குதல்

தீவிர நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், பல்வேறு அரசு மருத்துவமனைகளில் அமிர்த மருந்தகங்களை தொடங்கும் பணியை மத்திய அரசு தொடங்கியது. இங்கு மருந்துகள், உடலில் பொருத்தும் கருவிகள், ஒரு முறை பயன்படுத்தும் மருத்துவ சிகிச்சைப் பொருட்கள், அறுவை சிகிச்சை உபகரணங்கள் ஆகியவை சந்தை விலையைவிட 50 சதவீதம் வரை தள்ளுபடியில் கிடைக்கும். புற்றுநோய் மற்றும் இதய நோய்களுக்கான அதிக விலைகொண்ட மருந்துகள், குறைந்த விலையில் கிடைக்கும்.

**6** கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இதுவரை பலனடைந்துள்ளனர்






பிரதமரின் மக்கள் மருந்தக மையங்கள்

## குறைந்த விலையில் தரமான மருந்துகள்

அதிக விலைகொண்ட மருந்துகள், 50% முதல் 90% வரை குறைந்த விலையில், சாதாரண மக்களுக்கு கிடைக்கும் வகையில், பிரதமரின் மக்கள் மருந்தக மையங்களைத் தொடங்கும் பணியை மத்திய அரசு தொடங்கியது. இந்த ஆண்டு ஜூன் 30 வரை, 17,000 மருந்தக மையங்கள் திறக்கப்பட்டன. இந்த எண்ணிக்கையை மார்ச் 2027-க்குள் 25,000-ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பலன்

**2,110** வகையான மருந்துகள், 315 அறுவை சிகிச்சை உபகரணங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.



**₹38,000** கோடி அளவுக்கு சாதாரண மக்கள், கடந்த 11 ஆண்டுகளில் சேமித்துள்ளதாக மதிப்பீடு

## இதய நோயாளிகளுக்கு நிவாரணம்

உலோக ஸ்டென்ட்களின் விலையை வெறும் ரூ. 7,260 என பிப்ரவரி 2017-ல் மத்திய அரசு நிர்ணயித்து, இதய நோயாளிகளுக்கு மிகப்பெரும் நிவாரணத்தை அளித்தது. மருந்துகளை செலுத்தும் வகையிலான மற்றும் மட்டும் தன்மைகொண்ட ஸ்டென்ட்களின் விலை ரூ.29,600 என நிர்ணயிக்கப்பட்டது. இது சந்தை விலையைவிட 85% குறைவு ஆகும்.

## முழங்கால் மூட்டு மாற்று சிகிச்சை மிகவும் எளிதாகியுள்ளது

ஆகஸ்ட் 2017-ல், செயற்கை முழங்கால் மூட்டுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி, பெரும்பாலும் பயன்படுத்தப்படும் கோபால்ட் குரோமியம் முழங்கால் மூட்டு விலை 65% அளவுக்கு குறைந்தது. அதிகபட்ச விலையாக ரூ.54,720 என நிர்ணயிக்கப்பட்டது. டைட்டானியம், அயோடைஸ்டு ஜிர்கோனியம் போன்ற சிறப்பு உலோகங்களால் தயாரிக்கப்பட்ட செயற்கை முழங்கால் மூட்டு விலை 69% குறைக்கப்பட்டது. அதிகபட்ச விலை ரூ.76,600 என நிர்ணயிக்கப்பட்டது.



*எந்தவொரு நாட்டுக்கும் மக்களின் நலனுக்காக மட்டுமின்றி, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நிலைத்தன்மைக்கு பங்களிப்பு செய்ய வலுவான சுகாதாரக் கட்டமைப்பு அவசியமாகிறது. இந்தச் சிந்தனையுடன், கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது இந்தியாவின் சுகாதாரத் துறையில் புதிய புரட்சிக்கான அடித்தளமாக அமைந்துள்ளது.*

மகப்பேறு சுகாதாரத் திட்டங்கள்

## வாழ்வது மற்றும் வலுவான எதிர்காலத்துக்கான அடித்தளம்

இந்தியாவில் பேறு கால இறப்புகள் நீண்டகாலமாகவே பொது சுகாதார பிரச்சனையாக இருந்து வருகிறது. இதனை சரிசெய்ய முக்கியமான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மகப்பேறு பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், இலவசமாக மருத்துவமனை பிரசவங்களை ஊக்குவிக்கவும், புதிதாக பிறந்த குழந்தைகளின் நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம், 2014-15-ம் ஆண்டு முதல் 16.60 கோடிக்கும் அதிகமான பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். அதேநேரத்தில், மகப்பேறு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், நிபந்தனையுடன் பணம் வழங்குவதன் மூலம், மருத்துவமனையில் பிரசவம் ஊக்குவிக்கப்படுகிறது. இதன்மூலம், மார்ச் 2025 முதல் 11.07 கோடிக்கும் அதிகமான பெண்கள் பயனடைந்துள்ளனர். மறுமுனையில், கருவுற்ற பெண்களை மரியாதையுடனும், தரமாகவும் கவனிப்பதை பாதுகாப்பான தாய்மை உறுதித் திட்டம் வலுப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், மார்ச் 2025 வரை நாடு முழுவதும் 90,015 பாதுகாப்பான தாய்மை உறுதித்திட்டம் சுகாதார நிலையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.



பிரதமரின் தாய்மை போற்றுவோம் திட்டம்: முதல் பிரசவத்தின்போது ரூ.5,000.

இரண்டாவது பிரசவத்தில் பெண் குழந்தையை பெற்றெடுத்தால் ரூ.6,000

## பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கட்டமைப்பு இயக்கம்

கொவிட்-19 பரவலிலிருந்து கிடைத்த பாடத்தின் மூலம், அடிப்படை சுகாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் வகையில், அக்டோபர் 25, 2021-ல் நாட்டின் மிகப்பெரும் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இதன் பெயர் பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கட்டமைப்பு இயக்கம். ரூ.64,180 கோடி செலவில், 2025-26-க்குள் தொடக்க நிலை, மேல்நிலை மற்றும் மூன்றாம் நிலைகளில் வலுவான சுகாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இதன்மூலம், தற்காலத்திலும், எதிர்காலத்திலும் தொற்றுப் பரவல்கள், பொது சுகாதார அவசரநிலைகள், பேரிடர் காலங்கள் ஆகிய சூழல்களில் அதனை சிறப்பான முறையில் எதிர்கொள்ள முடியும்.

## மருத்துவமனைகளில் பகல் நேர புற்றுநோயாளிகள் கவனிப்பு மையங்கள்

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் ஆய்வின்படி, நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2020-விட 2025-ல் 13 சதவீதம் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நாட்டில் 2025-26-ல் 200 புற்றுநோய் சிகிச்சை மையங்களை ஏற்படுத்த மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. அது மட்டுமின்றி, அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் புற்றுநோயாளிகளைப் பகல் நேரத்தில் கவனித்துக் கொள்வதற்கான மையங்களை அடுத்த 3 ஆண்டுகளுக்குள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. உயிர்காக்கும் 36 வகையான மருந்துகளுக்கு, அடிப்படை சுங்க வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நோயாளிகளுக்குக் குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கும்.

தற்போது, குறைந்த செலவிலான, எளிதான, சரியான மருத்துவ சேவைகள், ஒவ்வொரு வீட்டுக்கும் சென்றடைகின்றன. கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பெரும் செலவிலான மருத்துவ சிகிச்சையில் ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், 2018-ம் ஆண்டில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டது. இன்று, இந்தத் திட்டத்தால் சுமார் 41 கோடி மக்கள் பயனடைந்து வருகின்றனர். இது காப்பீடு, நோய்த் தடுப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. இதன்மூலம், தேவையான மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் எளிதான சிகிச்சையை வழங்குகிறது. இது தொடங்கப்பட்டது முதலே, கிராமப்புறங்களில் போதிய அளவு மருத்துவ சிகிச்சை இல்லாதது, ஏழைக் குடும்பங்களுக்கு சிகிச்சைக்கான அதிகச் செலவு ஆகிய இரண்டு பெரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2018-ம் ஆண்டுக்கு முன், கிராமப்புறங்களில் வசித்த மக்கள், இந்த நெருக்கடிகளை சந்தித்து வந்தனர். இந்தப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் வகையில், பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தை (PM JAY) மத்திய அரசு தொடங்கியது. இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. வெறும் 7 ஆண்டுகளில், ஆயுஷ்மான் அட்டைகள் பெற்ற மக்களின் எண்ணிக்கை 41 கோடியைத் தாண்டியுள்ளது. இது வெறும் ஆயுஷ்மான் அட்டை அல்ல; இது ஏழை மக்களின் வாழ்க்கைக்கான உத்தரவாதம்.

### குடிமக்கள் மருத்துவ சிகிச்சைக்கு தாங்களே செலவுசெய்யும் தொகை குறைந்தது

இதற்கு முன் இருந்ததைப் போன்று அல்லாமல், மருத்துவ சிகிச்சைக்கு பொதுமக்கள் தாங்களே செலவு செய்யும் அளவு குறைந்ததால், மருத்துவத் துறையில் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. 2014-ம் ஆண்டில், ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்படாதபோது, பொதுமக்கள் தங்களுக்கான மருத்துவ செலவுகளில் 62% அளவுக்கு தாங்களே செய்ய வேண்டியிருந்தது. இது தற்போது வெறும் 38% ஆகக் குறைந்துள்ளது. பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் உள்ள மக்கள், ரூ.1.25 லட்சம் கோடிக்கும் அதிமான தொகையை சேமித்துள்ளனர். இத்துடன், மக்கள் மருந்தக மையங்கள் மூலம், குறைந்த விலையில் மருந்துகளை வாங்கி, பொதுமக்கள் ரூ.38,000 கோடிக்கும் மேல்

சேமித்துள்ளனர்.

ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் திட்டத்தின்கீழ், சுமார் 2 லட்சம் உடல்நல மையங்கள் திறக்கப்பட்டன. கிராமப்புறங்கள் மற்றும் மாவட்டங்களில் இந்த மையங்கள் மூலம், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கு மக்களுக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் காரணமாக, இதுவரை 200 கோடிக்கும் அதிகமான பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இது நோய்களை முன்கூட்டியே கண்டறிய உதவுவதுடன், அதிகம் செலவாகும் சிகிச்சையின் தேவையைக் குறைக்கிறது. மேலும், 2021 அக்டோபரில் தொடங்கப்பட்ட 'பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கத்தின்' கீழ், நாட்டில் உள்ள மருத்துவமனைகள் 64,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து மேம்படுத்தப்பட்டுள்ளன. முன்னர் பின்தங்கியிருந்தப் பகுதிகளில் இப்போது அபாய கட்ட நோயாளிகளுக்குக் கண்காணிப்பு மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதாரப் பிரிவுகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### சுகாதாரக் கவலைகளிலிருந்து முதியவர்கள் நிவாரணம் பெறுகின்றனர்

இந்தியாவின் வயது முதிர்ந்தோர் மக்கள் தொகை சீராக அதிகரித்து வருகிறது. 2026-ம் ஆண்டுக்குள் முதியோர் எண்ணிக்கை 17 கோடியாகவும், 2036-ம் ஆண்டுக்குள் சுமார் 23 கோடியாகவும், 2050-ம் ஆண்டுக்குள் 35 கோடியாகவும் அதாவது மொத்த மக்கள் தொகையில் 20 சதவீதம் அளவுக்கு அதிகரிக்கும் என்று ஓர் அறிக்கை கூறுகிறது. கடந்த சில ஆண்டுகளில், மூத்தக் குடிமக்களின் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதற்கான முக்கிய காரணம், மத்திய அரசு அவர்களுக்காக செயல்படுத்தி வரும் சுகாதாரம், ஓய்வூதியம், சுயதொழில் மற்றும் சுயசார்பு தொடர்பான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களாகும். மூத்தக் குடிமக்கள் நீண்ட காலம் வாழ்வது மட்டுமின்றி, பாதுகாப்பான, மரியாதைக்குரிய, ஆக்கப்பூர்வமான மற்றும் கண்ணியமான வாழ்க்கையையும் வாழ வேண்டும். இதற்காக, 2024-ம் ஆண்டின் இறுதியில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் ஒரு புரட்சிகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது 70 வயது மற்றும் அதற்கும் அதிக வயதுள்ள ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், அவர்களின் வருவாய் அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல், இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், சுமார் 6 கோடி முதியோர் சிகிச்சை வசதிகளைப் பெறத் தொடங்கினர். உடல்நலக் கவலைகள் அதிகமாக இருக்கும் இந்த வயதில், அதிலிருந்து விடுபடுவது ஓர் உணர்திறன் மிக்க முயற்சியாக மாறிவிட்டது. இப்போது பெரிய மருத்துவமனைகளில் கூட முதியவர்கள் இலவச சிகிச்சை பெற முடியும். 2025 ஜனவரி வாக்கில், 40 லட்சத்திற்கும் அதிகமான முதியவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இதனால் அவர்கள் தற்போது உடல்நலப் பிரச்சினைகள் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை.

### பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக மாறிய திட்டம்

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் முக்கிய பலமாகவும் பயனாளிகளாகவும் பெண்களும் முன்கள சுகாதாரப் பணியாளர்களும் உள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்ட ஆயுஷ்மான் அட்டைகளில் சுமார் 49 சதவீதம் பெண்களுக்குச் சொந்தமானவை. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 48 சதவீதம் பேர் பெண்கள். 2024 பிப்ரவரியில், அரசு 37



## ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம்

**80.47** கோடிக்கும் அதிகமான ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன

**71.44** கோடி மின்னணு சுகாதார ஆவணங்கள் பல்வேறு சுகாதார இணையதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன

**4.21** லட்சத்துக்கும் அதிகமான சுகாதார வசதி மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**6.93** லட்சத்துக்கும் அதிகமான சரிபார்க்கப்பட்ட சுகாதாரத் தொழில் வல்லுநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

*(குறிப்பு: 2025 செப்டம்பர் 1 வரையிலான தரவு)

## தொலை மருத்துவ சேவை இ–சஞ்சீவன இப்போது வீட்டிலேயே சிகிச்சை அளிக்கிறது

2020-ம் ஆண்டில், கொவிட் காலத்தில், சிறு நோய்களுக்குக் கூட மக்கள் மருத்துவர்களை அணுகுவது கடினமாக இருந்தபோது, இலவச மற்றும் தொலைதூர மருத்துவ ஆலோசனையை நோக்கமாகக் கொண்டு இ-சஞ்சீவனி வடிவத்தில் இலவச தொலை மருத்துவ ஆலோசனை தொடங்கப்பட்டது.

**36+** கோடி மக்கள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

**130** இ-சஞ்சீவனியில் சிறப்பு மருத்துவர்கள் உள்ளனர்.

**2,32,291** சுகாதார சேவை வழங்குநர்கள் இதுவரை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.



## டிஜிட்டல் சுகாதார இயக்கம்

# சுகாதார சேவை வசதிகளின் புதிய அத்தியாயம்

140 கோடி மக்கள்தொகை மற்றும் புவியியல் சவால்களைக் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில், சுகாதார சேவைகளின் நன்மைகளைக் கடைசி நபருக்கும் வழங்குவது ஒரு சவாலுக்குக் குறைவில்லாததாகும். எனவே, சுகாதார சேவைகளில் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதன் மூலம் சாமானிய மக்களுக்கும் அணுகக்கூடியதாக அதை மாற்றும் நோக்கத்துடன், தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் 2020-ல் தொடங்கப்பட்டது. இந்த முன்னோடித் திட்டத்தின் வெற்றிக்குப் பின், இது ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் என நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டது. இதன் கீழ், ஒவ்வொரு இந்தியருக்கும் ஒரு சுகாதார அடையாளம் வழங்கப்படுகிறது. இந்த சுகாதாரக் கணக்கில் ஒவ்வொரு ஆய்வு, ஒவ்வொரு நோய், மருத்துவர் வருகைகள், உட்கொண்ட மருந்துகள் மற்றும் நோயறிதல் பற்றிய விவரங்கள் உள்ளன. நோயாளி ஒரு புதிய இடத்திற்கு மாறினாலும் அல்லது ஒரு புதிய மருத்துவரைச் சந்தித்தாலும், இது ஓர் எளிதான சேவையாக மாறியுள்ளது. அவர் ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டையின் (தனித்துவ எண்ணினை) தொடர்பு கொண்டால் போதும். அவரது உடல்நலம் தொடர்பான அனைத்துத் தகவல்களும் உடனடியாகக் கிடைக்கும்.

இதனுடன், பதிவுசெய்யப்பட்ட சுகாதார நிபுணர்களின் விரிவான தரவுத்தளத்திற்கான சுகாதார நிபுணர்கள் பதிவேடு, இந்தியா முழுவதும் உள்ள சுகாதார மையங்களின் டிஜிட்டல் களஞ்சியத்திற்கான சுகாதார வசதி பதிவேடு மற்றும் திறந்த கட்டமைப்பின் கீழ் மருத்துவமனைகள், மருத்துவர்கள், ஆய்வகங்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார இணைப்புத் தளம் ஆகியவையும் தொடங்கப்பட்டன.



### உங்களுக்கு முக்கியமானவை ...

**உங்கள் ‘ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டையை’ எப்படி உருவாக்குவது என்பதை இங்கே காணலாம்**

அதிகாரப்பூர்வ வலைத்தளமான https://abha.abdm.gov in/abha/v3/ மூலம் உங்கள் ஆயுஷ்மான் பாரத் சுகாதார அட்டையை (ஏபிஎச்ஏ) உருவாக்கலாம்.

- வலைத்தளத்தைப் பார்வையிட்ட பின், நீங்கள் ‘ஏபிஎச்ஏ எண்ணினை உருவாக்கு’ என்பதைக் கிளிக் செய்ய வேண்டும். இதற்குப் பின்னர், நீங்கள் ஆதார் அல்லது ஓட்டுநர் உரிமம் என்ற தெரிவைக் கிளிக் செய்ய வேண்டும்.
- நீங்கள் எந்த விருப்பத்தைத் தெரிவுசெய்தாலும், அதன் பின் உங்கள் விவரங்களை நிரப்ப வேண்டும். உதாரணமாக, ஆதார் எண்ணினைப் பதிவு செய்தால் , அதன் பிறகு மொபைலில் ஒரு ஓடிபி வரும்.அதை உள்ளிடவும்.
- உங்கள் மின்னஞ்சல் முகவரியையும் உள்ளிடவும்.
- இதற்குப் பின்னர், பக்கத்தில் உள்ள ‘அடுத்து’ என்ற விருப்பத்தைக் கிளிக் செய்து தொடரவும். உங்கள் ஏபிஎச்ஏ அட்டை தயாராக இருக்கும்.

### யு-வின்

தடுப்பூசி விநியோகத்தில் செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வை மேலும் மேம்படுத்துவதற்காக, அனைவருக்குமான தடுப்பூசித் திட்டத்தின் கீழ் ஒரு டிஜிட்டல் முயற்சியான யு —வின் (U-WIN) தளத்தை அரசு அறிமுகம் செய்தது. இது கருவுற்றப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு (0-16 வயது) தடுப்பூசியை நெறிப்படுத்தி கண்காணிக்கும் ஒரு டிஜிட்டல் தளமாகும்.

**10.48** கோடி பயனாளிகள் 2025 மே வரை யு-வின்னில் பதிவு செய்துள்ளனர்.



**93.91** லட்சம் மகப்பேறு

**1.88** கோடி தடுப்பூசி டோஸ்கள்

**41.73** கோடி தடுப்பூசி டோஸ்கள் பதிவு செய்யப்பட்டன

லட்சம் ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களை இந்தத் திட்டத்தில் சேர்த்ததுடன், அவர்களின் முக்கியப் பங்களிப்பையும் அங்கீகரித்தது. இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதன் மூலம், இந்தத் திட்டம் இந்தியாவில் ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துகிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் தில்லி சேர்க்கப்பட்டது இந்திய சுகாதாரத் துறையின் மற்றொரு பெரிய வெற்றியாகும். அரசியல் காரணங்களால் தில்லி மக்கள் இந்தத் திட்டத்தின் பலன்களை முன்னர் பெறவில்லை. அதிகம் செலவாகும் தனியார் சிகிச்சையை நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆனால் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு இந்தத் திட்டத்தை தில்லிக்கும் விரிவுபடுத்தியது. இது இப்போது பொருளாதார ரீதியாக நலிவடைந்த மக்களுக்கு இலவசமான, நல்ல தரமான சிகிச்சையை உறுதி செய்துள்ளது.

சமூக அக்கறையுள்ள திட்டங்கள் நிலைமையை மாற்றியுள்ளன

ஆரோக்கியமான சிந்தனைக்கு ஆரோக்கியமான மனம் மிகவும் அவசியமாகும். ஆரோக்கியமற்ற சமூகம் அல்லது படிக்காத சமூகம் வளர்ச்சியடைந்த பாரதத்தின் பயணத்திற்கு மிகப்பெரிய தடையாக இருக்கக்கூடும். 21-ம் நூற்றாண்டு இந்தியாவில், கனவுகளை நிறைவேற்றும் திறன் தனிநபர் மற்றும் குடும்பத்திலிருந்து தொடங்குகிறது. ஆனால் மக்கள் தொகை கல்வியறிவு பெறவில்லை என்றால், ஆரோக்கியமாக இல்லை என்றால், அந்த வீடு மகிழ்ச்சியாகவோ அல்லது நாடு மகிழ்ச்சியாகவோ இருக்காது. எனவே, மத்திய அரசு சுகாதாரம் தொடர்பான சமூக அக்கறையுள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. அனைவருக்கும் சொந்தமாக கான்கிரீட் வீடு இருக்க வேண்டும். அதற்காக இன்று வீட்டுவசதி திட்டம் உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் மின்சாரம், ஒவ்வொரு சமையலறையிலும் உஜ்வாலா திட்டத்தின் மூலம் இலவச சமையல் எரிவாயு எதார்த்தமாக்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா இயக்கத்தின்

## கொவிட் சவால்

# இப்படித்தான் தேசம் போராடியது



*2020-ம் ஆண்டில், கொவிட்-19 பெருந்தொற்று ஒரு சவாலை முன்வைத்தது மட்டுமின்றி, எதிர்காலச் சிரமங்களை சமாளிக்கும் திறனையும் அளித்தது. இந்தப் பெருந்தொற்று உலகம் முழுவதும் பரவி வந்தபோது, இந்தியாவிலும் அதன் சுகாதார உள்கட்டமைப்பில் ஒரு தீவிர மாற்றத்தைத் தொடங்கிவைத்தது. இந்தியா இந்தச் சவாலை எதிர்த்துப் போராடியது மட்டுமின்றி, உள்நாட்டு தடுப்பூசி மூலம் உலகின் மிகப்பெரிய தடுப்பூசி இயக்கத்தை நடத்தி உலகளாவிய தலைவராகவும் உருவெடுத்தது...*

### மிகப்பெரிய சாதனை

**220.67+**

கோடி தடுப்பூசி டோஸ்கள் இந்தியாவில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டன

- 2021 செப்டம்பர் 17 அன்று பிரதமர் மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு ஒரே நாளில் 2.50 கோடிக்கும் அதிகமான டோஸ்கள் செலுத்தப்பட்டன. இது ஒரு நாளில் செலுத்தப்பட்ட அதிகபட்ச டோஸ்களின் சாதனை.
- தடுப்பூசி தோழமை திட்டத்தின் கீழ், இந்தியா உலகின் பிற நாடுகளுக்கு 'வசுதைவ குடும்பகம்' (உலகம் ஒரு குடும்பம்), ஒரே பூமி - ஒரே ஆரோக்கியம் என்ற மந்திரத்துடன் 30 கோடி தடுப்பூசி டோஸ்களை வழங்கியது.

### உள்கட்டமைப்பில் வரலாற்று முன்னேற்றம்

**பரிசோதனை ஆய்வகம்**

**14** மார்ச் 2020 | **3,400** இப்போது 3,400

**ஐசியு படுக்கைகள்**

**2,168** மார்ச் 2020 | **1.45** லட்சம் 2023 நவம்பர்

**ஆக்ஸிஜன் படுக்கைகள்**

**50,583** மார்ச் 2020 | **5.5** லட்சம் நவம்பர் 2023

பிபிஇ உடை உற்பத்தி | 2020 மார்ச் **0** | இப்போது உற்பத்தி **தினசரி 4.5 லட்சம்**

- 1,500க்கும் அதிகமான பிஎஸ்ஏ ஆக்ஸிஜன் ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆலைகள் பிஎம் கேர்ஸ் மற்றும் பல்வேறு அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டன.
- 900 ஆக்ஸிஜன் ரயில்கள் மூலம் 36,840 டன்களுக்கும் அதிகமான திரவ மருத்துவ ஆக்ஸிஜன், கடுமையாக பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது.
- 4,176 ரயில் பெட்டிகள் முழுமையாக செயல்படும் தனிமைப்படுத்தல் இடங்களாக மாற்றப்பட்டன. விமானப்படை விமானம் மூலம் கிரையோஜெனிக் ஆக்ஸிஜன் டேங்கர்கள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் கொண்டு செல்லப்பட்டன.





மூலம் 12 கோடி கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ஜல் ஜீவன் இயக்கம் மூலம் சுமார் 16 கோடி கிராமப்புறக் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று, சுமார் 60 கோடி இந்தியர்களை உள்ளடக்கிய ஆயுஷ்மான் பாரத் திட்டம், ஏழைகள் மற்றும் புதிய நடுத்தர வர்க்கத்தினருக்கு உயர்தரமான மற்றும் குறைந்த செலவில் சுகாதார சேவையை உறுதி செய்து வருகிறது. உலகின் மிகவும் புகழ்பெற்ற சுகாதார இதழ்களில் ஒன்றான 'தி லான்செட்', ஆயுஷ்மான் பாரத் திட்டத்தைப் பாராட்டியுள்ளது. இந்தத் திட்டம் இந்தியாவில் சுகாதாரத் துறை தொடர்பான அதிருப்தியை நீக்குகிறது என்று கூறியுள்ளது. சமூக அக்கறையுள்ள இந்தத் திட்டங்கள் அனைத்தும் சுகாதாரச் சவாலை தோற்கடிப்பதில் மாற்றத்தை ஏற்படுத்தும் பங்கைக் கொண்டுள்ளன. ஆயுஷ்மான் பாரத் காரணமாக, புற்றுநோய் சிகிச்சையை சரியான நேரத்தில் தொடங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக 'தி லான்செட்' தனது ஆய்வு ஒன்றில் தெரிவித்துள்ளது. நோயாளிகள் 30 நாட்களுக்குள் புற்றுநோய் சிகிச்சைக்காக அணுகுவது 90 சதவீதம் அதிகரித்துள்ளது. இப்போது புதிய இந்தியா, தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் சுயராஜ்ஜியத்தின் கனவை நிறைவேற்றும் ஒரு இந்தியாவை உருவாக்குவோம் என்று தீர்மானித்துள்ளது.

**மக்கள் மருந்தகம்; 'குறைந்த விலை, சிறந்த மருந்து'**

பல நேரங்களில், சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்தை வீட்டிலேயே உட்கொள்ள வேண்டும்.

மலிவு விலையில் மருந்தகங்களிலும் மருந்துகள் கிடைக்கின்றன. பிரதமரின் மக்கள் மருந்தகத் திட்டம், நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் மருத்துவச் செலவு குறித்த கவலைகளை நீக்கியது மட்டுமின்றி, அவர்களின்

"

இந்தியாவின் சுகாதார சீர்திருத்தங்களின் மையமாக அனைவரையும் உள்ளடக்குதல் இருக்கிறது. உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை நாங்கள் செயல்படுத்துகிறோம். உலகின் ஆரோக்கியம், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை நாம் எவ்வளவு சிறப்பாகக் கவனித்துக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்ததாகும். வளரும் நாடுகள் குறிப்பாக சுகாதார சவால்களால் பாதிக்கப்படுகின்றன. இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை பிரதிபலிக்கக்கூடிய, அளவிடக்கூடிய மற்றும் நிலையான ஒரு மாதிரியை வழங்குகிறது.

நரேந்திர மோடி, பிரதமர்

# யோகா, ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவத்திற்கு உலக அங்கீகாரத்தை இந்தியா மீட்டுள்ளது

இன்று, யோகா, ஆயுர்வேதம், பாரம்பரிய மருத்துவம் ஆகியவை மீண்டும் ஒருமுறை உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. இதற்குப் பின்னால் பிரதமர் நரேந்திர மோடியின் சிந்தனை உள்ளது. இதன் மூலம் 2014–ம் ஆண்டு முதல்முறையாக அவற்றுக்காக ஒரு சிறப்பு ஆயுஷ் அமைச்சகம் உருவாக்கப்பட்டது. இப்போது ஆயுர்வேதம் மற்றும் யோகா மீதான அணுகுமுறை நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் மாறிவிட்டது, மேலும் அவற்றை ஏற்றுக்கொள்வதும் அதிகரித்துள்ளது

**7,51,768**

மருத்துவர்கள் ஆயுஷ் மருத்துவ அமைப்பில் தற்போது பதிவு செய்துள்ளனர்.

ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய மருத்துவத்தில் இந்தியா உலக அளவில் முன்னணி நாடாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. ஆயுஷ் ஆராய்ச்சித் தளம் இப்போது 43,000 -க்கும் அதிகமான ஆய்வுகளை நடத்தி வருகிறது.



- சர்வதேச யோகா தினம் முதல்முறையாக 2015 ஜூன் 21 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 2014 டிசம்பர் 11 அன்று, இந்தியாவின் முன்மொழிவின் பேரில் ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 21- ஐ சர்வதேச யோகா தினமாக அறிவித்தது.
- கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை கடந்த 60 ஆண்டுகளின் வெளியீடுகளை விட அதிகமாகும்.
- ஆயுஷ் துறை விரைவான பொருளாதார வளர்ச்சியைக் காட்டியுள்ளது. மேலும் அதன் உற்பத்திச் சந்தையின் அளவு 2014-ல் 2.85 பில்லியன் டாலர் என்பதில் இருந்து 2023-ல் 23 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. ஆயுஷ் துறை 200 பில்லியன் டாலரை நோக்கி வேகமாக முன்னேறுகிறது.
- ஆயுஷ் தொகுப்பின் கீழ் உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் செயற்கை நுண்ணறிவின் ஒருங்கிணைப்பில் புதிய கவனம் செலுத்தப்படுகிறது.
- ஒய்-பிரேக் யோகா போன்ற முழுமையான உள்ளடக்கத்தை வழங்குவதற்கான ஒரு தளமாக ஐ காட்(Igot) உள்ளது.
- யோகாவை ஊக்குவிக்க டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- குஜராத்தின் ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையம் நிறுவப்பட்டது ஒரு வரலாற்று சாதனையாகும். இது பாரம்பரிய மருத்துவத் துறையில் இந்தியாவின் தலைமையை வலுப்படுத்துகிறது.
- 2025 ஜனவரி 5 அன்று தில்லியின் ரோஹினியில் மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய கட்டிடத்திற்குப் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.
- கடந்த பத்தாண்டுகளில், ஆயுஷ் அமைப்பு 100-க்கும் அதிகமான நாடுகளுக்கு விரிவடைந்துள்ளது. பாரம்பரிய மருத்துவ முறையை விரிவுபடுத்துவதற்காக நாட்டில் 10 புதிய ஆயுஷ் நிறுவனங்கள் திறக்கப்படவுள்ளன.
- 'ஆயுஷ் முதலீட்டு சாரதி' தளத்தை 2025 மே 29 அன்று மத்திய அரசு அறிமுகம் செய்தது. இது ஓர் அர்ப்பணிப்புள்ள, முதலீட்டாளர்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் தளமாகும்.

வாழ்க்கையையும் எளிதாக்கியுள்ளது. இந்தத் திட்டம் சாமானிய மக்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் 12 லட்சத்திற்கும் அதிகமானோர், மக்கள் மருந்தக மையங்களிலிருந்து மருந்துகளை தினமும் வாங்குகின்றனர். இங்குக் கிடைக்கும் மருந்துகள் சந்தை விலையை விட 50 முதல் 90 சதவீதம் வரை மலிவானவை. இது மட்டுமின்றி, சிறுநீரக நோய் தீவிரமடையும் போது, டயாலிசிஸ் தொடர்ந்து செய்யப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இதற்காக வெகுதூரம் பயணிக்க வேண்டும். அதற்கு நிறைய செலவாகும். எனவே, மத்திய அரசு நாட்டின் 700-க்கும் அதிகமான மாவட்டங்களில் 1500-க்கும் அதிகமான டயாலிசிஸ் மையங்களைத் திறந்துள்ளது. இலவச டயாலிசிஸ் வசதியும் இங்கு கிடைக்கிறது.

கருணை சுகாதாரப் புரட்சியின் அடித்தளமாக மாறியது முன்னர், வீட்டில் யாராவது நோய்வாய்ப்பட்டால், முழு குடும்பமும் கஷ்டங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை பழைய தலைமுறை நன்கு அறிந்துள்ளது.

யாராவது ஏழையாக இருந்து நோய்வாய்ப்பட்டால், அந்தக் குடும்பமே கடுமையாக பாதிக்கப்பட்டது. அது குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் பாதித்தது. சிகிச்சை பெற மக்கள் தங்கள் வீடுகள், நிலங்கள், நகைகள் போன்றவற்றை விற்க வேண்டிய ஒரு காலம் இருந்தது. ஒரு கடுமையான நோய்க்கான சிகிச்சைக்கான செலவைக் கேள்விப்பட்டு ஏழைகள் மனமுடைந்து போவார்கள். வயதான தாய் தனக்கு சிகிச்சை பெறுவதா அல்லது பேரக்குழந்தைகளின் படிப்புக்கு செலவு செய்வதா என்று யோசிப்பார். வயதான தந்தை,



## பிரதமரின் டயாலிசிஸ் திட்டம் 8,000 கோடி ரூபாய் சேமிப்புக்கு வழிவகுத்துள்ளது

பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமார் 750 மாவட்டங்களில் உள்ள 1,674 மையங்களில் 11,757 ஹீமோ-டயாலிசிஸ் இயந்திரங்களைப் பயன்படுத்தி நோயாளிகள் டயாலிசிஸ் செய்யப்படுகின்றனர். 2025 ஜூன் 3 வரை, மொத்தம் 27.86 லட்சம் நோயாளிகள் டயாலிசிஸ் சேவையைப் பெற்றுள்ளனர். இந்தக் காலகட்டத்தில், மொத்தம் 342.25 லட்சம் ஹீமோ-டயாலிசிஸ் அமர்வுகள் நடத்தப்பட்டன. பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின் விளைவாக இதுவரை, நோயாளிகளால் மொத்தம் 8,000 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது.

தான் சிகிச்சை பெறுவதா அல்லது வீட்டுச் செலவுகளைப் பார்த்துக் கொள்வதா என்று யோசிப்பார். எனவே, ஏழைக் குடும்பத்தின் பெரியவர்கள் ஒரே ஒரு வழியை மட்டுமே காண முடியும். ஒன்று, பிரச்சனைகளை அமைதியாகத் தாங்கிக் கொள்ள வேண்டும். வலியைத் தாங்கிக் கொள்ள வேண்டும். மரணத்திற்காக அமைதியாகக் காத்திருக்கும் நிலை இருந்தது. பணப் பற்றாக்குறையால் சிகிச்சை பெற முடியாததால் ஏற்படும் இயலாமை ஏழைகளை நொறுக்கியது. உணர்திறன் மிக்க பிரதமர் நரேந்திர மோடி அந்த வலியை உணர்ந்தார். அந்த உணர்திறனில் இருந்துதான் ஆயுஷ்மான் பாரத் திட்டம் பிறந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஏழைகளின் 5 லட்சம் ரூபாய் வரையிலான செலவை அரசே ஏற்கும் என்று மத்திய அரசு முடிவு செய்தது. பிரதமர் நரேந்திர மோடியும் பொது மேடையில் பலமுறை, "எனது உடல்நலம் நாட்டிற்கு ஒரு சுமையாக மாறக்கூடாது என்று நான் விரும்புகிறேன். எனது கடைசி மூச்சு வரை ஆரோக்கியமான நபராக வாழ விரும்புகிறேன்" என்று கூறியுள்ளார். சுகாதாரம் மீதான விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் காரணமாக, எந்தவொரு அரசின் திட்டத்திலும், சுகாதாரம் முதல்முறையாக முன்னுரிமையாக மாறியுள்ளது. நீண்ட காலமாக, பரம ஏழைகளைக் கூட கவனித்துக் கொள்ளும் ஒரு நவீன சுகாதார அமைப்பு நாட்டில் இருக்க வேண்டும் என்பது நாட்டின் விருப்பமாக இருந்து வருகிறது. ஏழைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்ட, ஏழைகளை நோய்களிலிருந்து பாதுகாக்கும், அவர்கள் நோய்வாய்ப்பட்டால், அவர்களுக்கு சிறந்த சிகிச்சையை வழங்கும் ஒரு சுகாதார அமைப்பு தேவை. ஒரு நல்ல சுகாதார வசதி அமைப்பு என்பது வெறுமனே கட்டடங்கள் கட்டுவதல்ல. எந்தவொரு நாட்டின் சுகாதார அமைப்பும் எல்லா வகையிலும் தீர்வுகளை வழங்கும்போது, ஒவ்வொரு படியிலும் ஆதரிக்கும்போது மட்டுமே வலுவாக மாறும். எனவே, கடந்த 11 ஆண்டுகளில், முழுமையான சுகாதாரப் பராமரிப்பு நாட்டில் முதன்மையான முன்னுரிமையாக வைக்கப்பட்டுள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவில் சுகாதாரத் துறையில் செய்யப்பட்ட பணிகள் கடந்த 70 ஆண்டுகளில் கூட செய்யப்படவில்லை. ஒரு நாட்டின் குடிமக்கள் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறார்களோ, அந்த நாட்டின் முன்னேற்றத்தின் வேகம் அவ்வளவு வேகமாக இருக்கும். இந்தச் சிந்தனையுடன், அதன் குடிமக்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

இந்தச் சிந்தனையுடன், நாட்டு மக்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளித்து, 2017 - ம் ஆண்டின் சுகாதாரக் கொள்கையுடன் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு என்ற புதிய முயற்சியை மத்திய அரசு தொடங்கியது. இன்று, மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்கும் வகையில் நாடு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் சாதனை முதலீட்டில் ஒன்றல்ல, ஆறு



***"கடந்த 11 ஆண்டுகளில், சுகாதாரத் துறை ஒரு புதிய வரலாறு படைத்துள்ளது. சாதனை எண்ணிக்கையிலான எய்ம்ஸ் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டு, சுகாதார நடவடிக்கைகள் மீதான சுமை குறைந்துள்ளதுடன், வசதிகளும் பாதுகாப்பும் அதிகரித்துள்ளது.***




முனைகளில் செயல்பட்டு வருகிறது.

- தடுப்பூசி தோழமை திட்டத்தின் கீழ், இந்தியா உலகின் பிற நாடுகளுக்கு 'வசுதைவ குடும்பகம்' (உலகம் ஒரு குடும்பம்), ஒரே பூமி - ஒரே ஆரோக்கியம் என்ற மந்திரத்துடன் 30 கோடி டோஸ்களை வழங்கியது.
- இரண்டாவது முனை - ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய மற்றும் நவீன மருத்துவமனைகளைத் திறப்பது.
- மூன்றாவது முனை - நகர்ப்புறங்களில் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களைத் திறப்பது.
- நான்காவது முனை - நாடு முழுவதும் மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது.
- ஐந்தாவது முனை - நோயாளிகளுக்கு மலிவு விலையில் மருந்துகள் மற்றும் உபகரணங்களை வழங்குவது.
- ஆறாவது முனை - தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நோயாளிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் களைவது.

சிகிச்சை மட்டுமின்றி, வறுமைக் கோட்டிலிருந்து வெளியே வந்தவர்கள் எந்த வகையிலும் மீண்டும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் செல்லாமல் இருக்க, சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து வெளியே வந்த பின் தேவைப்படும் வசதிகளையும் அரசு கவனித்துக் கொள்கிறது. இதற்கென, இலவச உணவுதானிய விநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசின் இத்தகைய முயற்சிகளின் விளைவாக 25 கோடி மக்கள் வறுமை நிலையிலிருந்து மீண்டுள்ளதுடன், ஒரு புதிய நடுத்தர வர்க்கமும் உருவாக்கப்பட்டுள்ளது.

## சுகாதாரப் பாதுகாப்பிற்கு உலகளாவிய தடுப்பூசியின் பங்களிப்பு

கடந்த 11 ஆண்டுகளில், இந்தியாவில் மிகவும் மாற்றத்தை ஏற்படுத்தும் துறைகளில் ஒன்றாக சுகாதாரப் பாதுகாப்பு மாற்றம் கண்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் வலுவான தலைமையின் கீழ், தடுப்பூசி மற்றும் நோய் ஒழிப்பில் நாடு நிலையான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. பழங்குடியின கிராமங்களில் பிறந்த குழந்தைகள் முதல் நகரங்களில் உள்ள பள்ளிக் குழந்தைகள் வரை, ஒருவரையும் விட்டுவிடாமல், நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் சென்றடையும் வகையில் அரசு இலக்கு நிணயித்துள்ளது. 2014-ம் ஆண்டுக்கு முன், தடுப்பூசி செலுத்தும் எண்ணிக்கை குறைவாக இருப்பது, உயர் விகிதத்தில் காச நோயால் பாதிப்பு, பரவலாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்பட்ட தட்டம்மை, ரூபெல்லா, மலேரியா போன்ற நோய்கள் அடிக்கடி பரவுவது போன்ற சவால்களை இந்தியா எதிர்கொண்டது. இன்று, 2025-ம் ஆண்டில், இந்தச் சூழல் மாறிவிட்டது. இந்தியா உலகின் மிகவும் வெற்றிகரமான, இலக்குடன் கூடிய சுகாதாரப் பணிகளைக் கொண்டுள்ளது. பிரதமர் மோடியின் மக்களை மையமாகக் கொண்ட நிர்வாக நடவடிக்கைகள், சேவை, அர்ப்பணிப்பு மற்றும் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் உணர்வைத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

முன்பு, கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு உயிர்காக்கும் தடுப்பூசிகள் இல்லாத நிலை இருந்ததால், அதனைக் கருத்தில் கொண்டு 2014-ம் ஆண்டில் இந்திரதனுஷ் தடுப்பூசி இயக்கம் தொடங்கப்பட்டது. அதே நேரத்தில், தடுப்பூசி செலுத்துவதில் ஒருவரும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் யு - வின் இணையதளம் அக்டோபர் 2024 - ல் தொடங்கப்பட்டது. தற்போது தடுப்பூசி செலுத்தப்படும் முழு விபரங்களும் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்படுகிறது. நேரடித் தகவல்பலகை மற்றும் குறுஞ்செய்தி எச்சரிக்கைகளின் உதவியுடன், தடுப்பூசிகள் செலுத்தப்படாத நிலை தற்போது வெகுவாக குறைந்துள்ளன. ஆதார் எண் மூலம் அடையாளத்தை வெளிப்படையாகவும், அனைத்து நடவடிக்கைகளுடன் இணைத்தும் செயல்படுத்துவது போலவே, தடுப்பூசி செலுத்துவதையும் எளிதாகவும், வெளிப்படையாகவும், அனைவராலும் எளிதாக அணுகக்கூடிய வகையிலும் உருவாக்க யு - வின் இணையதளம் செயல்படுகிறது.

## இந்திய ஆயுஷ் மருத்துவத்தின் உலகளாவிய எல்லை

இந்தியா நீண்ட காலமாக முழுமையான சுகாதாரப் பராமரிப்பின் முன்னோடி மையமாக இருந்து வருகிறது. ஆயுர்வேதம், யோகா போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகள், அதன் பண்டைய நாகரிகம் மற்றும் நுட்பமான அறிவுசார் மரபில் ஆழமாக வேரூன்றியுள்ளன. இருப்பினும், பல தசாப்தங்களாக, இந்த விலைமதிப்பற்ற ஞானம் அடுத்தடுத்த அரசுகளால் புறக்கணிக்கப்பட்டு வந்ததன் காரணமாக, மதிப்புமிக்கதாக கருதப்படுவதற்குப் மாறாக

காலாவதியான முறையாகக் கருதப்பட்டது.

ஆனால் தற்போதைய மத்திய அரசின் அணுகுமுறை அதை முற்றிலுமாக மாற்றியமைத்துள்ளது. இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ மரபுகளை பெருமையுடனும், அதன் குறிக்கோளுடனும் அரசு மீட்டெடுத்துள்ளது. 2014, டிசம்பர் 11 அன்று ஐ.நா. பொதுச் சபையில் இந்தியா வரலாறு படைத்த சிறப்பான தருணம் வந்தது - இந்த நாளில், 177 நாடுகள் ஒன்றிணைந்து ஜூன் 21-ஐ சர்வதேச யோகா தினமாக அறிவிக்கும் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தன. இது யோகாவின் உலகளாவிய அங்கீகாரம் மட்டுமின்றி, இந்தியா தனது கலாச்சார மற்றும் ஆன்மீகப் பாரம்பரியத்தை மீண்டும் ஏற்றுக்கொண்டு முழு உலகிற்கும் பெருமையுடன் அர்ப்பணித்த தருணத்தைக் குறித்தது.

**ஒரே பூமி - ஒரே ஆரோக்கியம் என்ற உலகளாவிய இயக்கம்**

சுகாதாரம் என்பது நமது நாட்டின் பகிரப்பட்ட முன்னுரிமைகளின் மற்றொரு தூணாகும். இந்தியாவின் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் - ஆயுஷ்மான் பாரத் — ஏறத்தாழ 60 கோடி மக்களைச் சென்றடைந்துள்ளது. ஆனால், இந்தியாவின் சுகாதாரம் தொடர்பான அக்கறை இந்தியர்களுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் "ஒரே பூமி, ஒரே ஆரோக்கியம்" என்ற இயக்கத்தை சுகாதாரப் பராமரிப்பில் பகிரப்பட்ட உலகளாவிய பொறுப்பாகக் கருதுகிறது. கொவிட் நோய்த்தொற்று பரவலின் போது இந்தியா ஆப்பிரிக்காவுக்குத் துணை நின்றது. அந்த நேரத்தில், தடுப்பூசிகளும் மருந்துகளும் கிடைப்பது உறுதி செய்யப்பட்டன. ‘ஆரோக்கிய மைத்ரி’ திட்டத்தின் கீழ், இந்தியா ஆப்பிரிக்காவிற்கு பயிற்சி, மருத்துவமனை உபகரணங்கள் மற்றும் மருந்துகள் மூலம் ஆதரவளித்தது. மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்காக நமீபியாவிற்கு பாபட்ரான் கதிரியக்க சிகிச்சை இயந்திரத்தை இந்தியா வழங்க உள்ளது. இந்தியாவில் உருவாக்கப்பட்ட இந்த இயந்திரம், 15 நாடுகளில் தற்போது பயன்பாட்டில் உள்ளது. இந்த இயந்திரம் பல்வேறு நாடுகளில் சுமார் ஐந்து லட்சம் தீவிரப் புற்று நோயாளிகளுக்கு உதவியுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கை நோக்கிய சுகாதாரப் புரட்சியாகும். உண்மையில், சிறந்த சுகாதாரப் பராமரிப்பு காரணமாக ஓராண்டு ஆயுட்காலம் அதிகரிப்பது கூட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதம் வரை அதிகரிக்க வழிவகுக்கிறது என்று ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆயுஷ்மான் பாரத் திட்டம் அதன் எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் போது, எந்தவொரு இந்தியரும் சுகாதார நெருக்கடியில் தனித்து விடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதிக மக்கள் தொகையுடன் பன்முகத்தன்மை கொண்ட நாட்டில், இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இன்று, நாடும் அதன் தலைமையும் அதிகம் செலவாகும் சுகாதார சிகிச்சையின் சுமையிலிருந்து நாட்டின் ஏழை, நடுத்தரப் பிரிவு மக்களை விடுவிப்பதில் உறுதியாக உள்ளன. இன்று, இந்தப் பாதையில் விரைவான முன்னேற்றம் காணப்படுகிறது. ஆயுஷ்மான் பாரத், அனைவரையும் உள்ளடக்கிய, உலகளாவிய சுகாதாரப் பராமரிப்பின் மாதிரியை உருவாக்கியுள்ளது. இதனால் தேசம் ஆயுஷ்மான் பவ என்று கூறுகிறது.

“2014–ம் ஆண்டிற்கு முன்பு, சுகாதாரப் பராமரிப்பு புறக்கணிக்கப்பட்ட துறையாக இருந்தது. இன்று, நீங்கள் வசதியானவராக இருந்தாலும் அல்லது ஏழையாக இருந்தாலும், தொலைதூரக் கிராமப் பகுதியில் வசித்தாலும் பெருநகரத்தில் வசித்தாலும், தரமான சுகாதாரப் பராமரிப்பை உறுதி செய்யும் அமைப்பின் ஒரு அங்கமாக இருக்கிறீர்கள். இது பிரதமர் மோடி தலைமையின் கீழ் உள்ள புதிய இந்தியா. இது அனைவருக்கும் சுகாதாரப் பராமரிப்பு அளிக்கும் ‘வளர்ச்சியடைந்த இந்தியா’ என்ற வகையில் விரைவாக முன்னேறி வருகிறது.

– ஜே.பி. நட்டா, மத்திய சுகாதார அமைச்சர்



# பீகார் மாநிலத்தின் மகத்துவத்தை கௌரவிப்பதன் மூலம் முன்னேற்றத்திற்கான செய்தி



கயா இந்தியா குறித்த நம்பிக்கையின் சின்னமாகவும், ஆன்மீக மற்றும் கலாச்சார பாரம்பரியத்தின் வாழும் உதாரணமாகவும் திகழ்கிறது. பகவான் விஷ்ணுவின் ஆசிகளால், இது கருணையின் பூமி என்று அழைக்கப்படுகிறது. மேலும் புத்தர் இங்கு ஞானம் பெற்றார். இந்தப் புனித பூமியின் மகத்துவத்தை நினைவுகூரும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் 22 அன்று புனித பூமியான பீகார் மாநிலம் கயாவில் ரூ.12,000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார், முடிவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்தார்

பாரம்பரியத்துடன் கூடிய வளர்ச்சி என்பது வளர்ந்து வரும் புதிய இந்தியாவின் தாரக மந்திரமாக மாறியுள்ளது. நவீன உள்கட்டமைப்பு வசதிகள் அதன் அடையாளமாக அமைந்துள்ளன. வளர்ச்சியடைந்த இந்தியாவை அடையும் நோக்கில், பிரதமர் நரேந்திர மோடி இந்தத் தொடர் பயணத்தில் கயா நகரின் புனித பூமிக்குப் புதிய அத்தியாயத்தை இணைத்துள்ளார். இந்தியாவின் வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தின் அடையாளமாகத் திகழும் கயாவில் ரூ. 12,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அவர், எரிசக்தி, சுகாதாரம், நகர்ப்புற மேம்பாட்டு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் பீகார் மாநிலத்தின் தொழில்துறையை வலுப்படுத்துவதுடன், இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும் என்று கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு வளர்ச்சியடைந்த பீகாரின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிரதமர் மோடி, கடந்த 11 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி விவரித்தார். ஏழைகளின் வாழ்க்கையில் உள்ள சிரமங்களைக் களைவதற்கும், பெண்களின் வாழ்க்கையை எளிதாக்குவதற்கும் உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். பிரதமர் மோடி ஆற்றிய உரையின் ஐந்து முக்கிய அம்சங்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. இந்தப்

### 1. வசதி, பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கான உத்தரவாதம்

கடந்த 11 ஆண்டுகளில், ஏழைகளுக்கு 4 கோடி கான்க்ரீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பீகார் மாநிலத்தில் மட்டும் 38 லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கயா மாவட்டத்தில் 2 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் சொந்தமாக கான்க்ரீட் வீடுகளைப் பெற்றுள்ளன என்று குறிப்பிட்ட பிரதமர் மோடி, இவை வெறும் வீடுகள் அல்ல, ஏழை மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையின் அடையாளங்கள் என்பதை சுட்டிக்காட்டினார். இந்த வீடுகள் மின்சாரம், தண்ணீர், கழிப்பறைகள், சமையல் எரிவாயு இணைப்பு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். இதன் பொருள், ஏழைக் குடும்பங்களுக்கு வசதி, பாதுகாப்பு மற்றும் கண்ணியமான வாழ்க்கை உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

### 2. பீகார் மாநிலத்திலிருந்து ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின், மதுபனியில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில், தமது உரையை நினைவுகூர்ந்த பிரதமர் மோடி, சந்திரகுப்த மௌரியர் மற்றும் சாணக்கியரின் நிலம் பீகார் என்று கூறினார். எதிரிகள் இந்தியாவிற்கு சவால் விடும் போதெல்லாம், நாட்டின் கேடயமாக நின்று பீகார் பாதுகாத்துள்ளது. பஹல்காமில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்தபோது, அப்பாவி குடிமக்கள் அவர்கள் சார்ந்துள்ள மதம் பற்றிக் கேட்டறிந்த பின் கொல்லப்பட்டனர். பயங்கரவாதத்தை ஒழிப்பதாக பீகார் மாநிலத்திலிருந்து தாம் சபதம் செய்ததாகவும், அந்த உறுதிமொழி நிறைவேறுவதை இன்று உலக நாடுகள் கண்டு வருகின்றன என்றும் தெரிவித்த பிரதமர், இந்தியாவின் பாதுகாப்பு உத்தியில் ஆபரேஷன் சிந்தூர் ஒரு புதிய நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளது என்றார்.




### 3. ஊழலை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது

ஊழலுக்கு எதிரான தமது போராட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், 2014 முதல் பிரதமராகப் பொறுப்பு வகிக்கும் காலத்தில் ஊழல் கறை எதுவும் இல்லை என்று பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்தார். அரசியல் சட்டம் ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியிடமிருந்தும் நேர்மையையும், வெளிப்படைத்தன்மையையும் எதிர்பார்க்கிறது என்று அவர் கூறினார்.



### 4. பீகார் தற்போது விரிவான வளர்ச்சிப் பாதையில் செல்கிறது

பிகார் மாநில வளர்ச்சிப் பயணத்தின் வரைபடத்தை மக்களுக்குப் பிரதமர் மோடி நினைவூட்டினார். ஒரு காலத்தில் கல்வியறிவின்மை, வேலைவாய்ப்பின்மை காரணமாக இடப்பெயர்விற்கான வலியை அனுபவித்து வந்த இம்மாநிலம், தற்போது வளர்ச்சிக்கான புதிய பாதையில் செல்கிறது. பீகார் மாநில மக்களைத் தனது மாநிலத்திற்குள் நுழைய அனுமதிக்க மாட்டேன் என்று ஒரு முதலமைச்சர் பொது நிகழ்ச்சியில் தெரிவித்திருந்ததை அவர் சுட்டிக்காட்டினார். பீகார் மாநில வளர்ச்சி மூலம் இதுபோன்ற சவால்களுக்கு அரசு தற்போது தீர்வுகண்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில், பழைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் கண்டறியப்பட்டுள்ளன. முன்னேற்றத்திற்கான புதிய பாதைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. பீகாரின் மகன்களும் மகள்களும் இங்கு வாய்ப்புகளையும், மரியாதைக்குரிய வாழ்க்கையையும் பெறுவதன் மூலம் அவர்களின் பெற்றோரை கவனித்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் அரசு செயல்படுகிறது என்று அவர் கூறினார்.

ஊழலுக்கு எதிராக பிரதமர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களையும் உள்ளடக்கிய கடுமையான சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருகிறது. எவராவது சிறைக்குச் சென்றால், அவர்கள் 30 நாட்களுக்குள் பிணை பெற வேண்டும், அவ்வாறு பிணை பெறாவிட்டால், அவர்கள் 31-வது நாளில் பதவியைத் துறக்க வேண்டியிருக்கும். தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படி சிறிய பணியில் உள்ள அரசு ஊழியரை 50 மணி நேரம் காவலில் வைத்திருந்தால், அவர் உடனடியாக இடைநீக்கம் செய்யப்படும் நிலை உள்ளது. ஆனால், ஒருவர் முதலமைச்சராகவோ, அமைச்சராகவோ அல்லது பிரதமராகவோ இருந்தால் சிறையில் இருக்கும் போது கூட அவர் அதிகாரத்தை அனுபவிக்க முடியும். இது எவ்வாறு சாத்தியமாகும்?

### 5. இந்தியாவின் வசதிகளை அனுபவிக்க இந்திய மக்களுக்கு உரிமை உள்ளது

நாட்டின் மக்கள்தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் குறிப்பிட்ட பிரதமர் மோடி, இந்த அச்சுறுத்தல் பீகார் மாநிலத்திற்கும் உள்ளது என்று கூறினார். நாட்டில் அதிகரித்து வரும் ஊடுருவல்காரர்களின் எண்ணிக்கை கவலைக்குரியதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார். பீகார் மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் மக்கள்தொகை வேகமாக மாற்றம் கண்டு வருகிறது. எனவே, நாட்டின் எதிர்காலம் ஊடுருவல்காரர்களால் தீர்மானிக்கபடக் கூடாது என தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது. பீகார் மாநில இளைஞர்களிடமிருந்து வேலை வாய்ப்புகளைப் பறித்துச் செல்ல ஊடுருவல்காரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்திய மக்களுக்கு உரிமையாக உள்ள வசதிகளை கொள்ளையடிக்க ஊடுருவல்காரர்கள் அனுமதிக்கப்ப்பட மாட்டார்கள். இத்தகைய அச்சுறுத்தலை சமாளிக்க ஏதுவாக, மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணியைத் தொடங்குவது குறித்து எனது கருத்தைத் தெரிவித்துள்ளேன். மிக விரைவில், இதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, நாட்டிலிருந்து ஊடுருவல்காரர்கள் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்று தெரிவித்தார்.





# பீகாரின் செழிப்புக்கு உத்வேகம்: ஆன்டா–சிமாரியா பாலம் உட்பட பல பரிசுகள்

**₹1,870** கோடி ரூபாய்க்கு மேல் கட்டுமானத்திற்கு செலவிடப்பட்டுள்ளது

**8.15** கி.மீ நீளமுள்ள பாலம்

- மொகாமாவின் அவுண்டா - பெகுசராயின் சிமாரியா இடையேயான புதிய பாலத்தின் கட்டுமானப் பணிகள், தெற்கு பீகாரின் ஷேக்புரா, நவாடா, லக்கிசராய் ஆகிய பகுதிகளுடன், மதுபனி, சுபால், அராரியா, பெகுசராய் பகுதிகளுக்கு சிறந்த சாலைப் போக்குவரத்து இணைப்பை வழங்கும். இதில் கங்கை நதியின் மீது கட்டப்பட்டுள்ள 1.86 கி.மீ நீளமுள்ள 6 வழிப் பாலமும் அடங்கும்.

- பழைய ராஜேந்திர பாலம் கனரக வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டது. இதன் காரணமாக 100 கி.மீ வரை தூரம் அதிகரித்துள்ளது. தற்போது இந்தத் தொலைவை 8 கி. மீ-லேயே அடைய முடியும். போக்குவரத்து நெரிசலில் இருந்து நிவாரணம் கிடைக்கும். உள்ளூர் தொழில்கள், வேளாண் துறை, பராவுனி அனல் மின் நிலையம், சுத்திகரிப்பு நிலையம், சுதா பால்பண்ணை ஆகியவற்றிற்கும் உத்வேகம் அளிக்கும்.

- கயா- தில்லி இடையே அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ், வைஷாலி- கோடெர்மா இடையே புத்தமத சுற்றுப்பாதை ரயில் சேவை கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது. இது நவீன வசதிகள், பாதுகாப்பு போன்ற அம்சங்களில் உலக அளவிலான கலாச்சார பாரம்பரியத்திற்கு ஒரு புதிய அடையாளத்தை அளிக்கிறது.

- பக்சரில் ரூ. 6,900 கோடி மதிப்புள்ள 1,320 மெகாவாட் அனல் மின் திட்டத்தில் 660 மெகாவாட் திறன் கொண்ட முதல் அலகின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இது வேலைவாய்ப்புகள், தொழில்துறை மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும்

- முசாபர்பூரில் ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. நவீன புற்றுநோயியல் வெளிப்புற நோயாளிகள் பிரிவு, உட்புற நோயாளிகளுக்கான பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, நவீன ஆய்வகம், ரத்த வங்கி, 24 படுக்கை வசதியுடன் கூடிய அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் நோயாளிகளுக்கான உயர் பராமரிப்பு பிரிவு ஆகியவை இதில் அடங்கும்

- அதிநவீன வசதிகளைக் கொண்ட இந்த மருத்துவமனை பீகார் மற்றும் கிழக்கு மாநிலங்களில் உள்ள நோயாளிகளுக்கும் புதிய நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக உருவெடுக்கும். இது அடித்தள மற்றும் நடுத்தரக் குடும்பங்களுக்கு மருத்துவ வசதிக்கான ஆதாரமாகத் திகழும்.



பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 1,600 குடும்பங்கள் வீடுகளைப் பெற்றுள்ளன.

| நகர்ப்புறம் | கிராமப்புறம் |
|---|---|
| 4,260 | 12,000 |

பயனாளிகளின் புதுமனை புகுவிழா

அடையாளமாக 5 முதன்மைப் பயனாளிகளுக்கு வீடுகளின் சாவிகள் ஒப்படைக்கப்பட்டன.

**நீர் திட்டங்கள்**

முன்கேரில் நமாமி கங்கை திட்டத்தின் கீழ், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகள் அவுரங்காபாத், புத்த கயா, ஜெஹனாபாத் ஆகிய இடங்களில் குடிநீர் விநியோக திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

- பக்தியார்பூரில் இருந்து மொகாமா வரையிலான தேசிய நெடுஞ்சாலை 31-ல் நான்கு வழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது

புதிய இந்தியாவில் நவீன உள்கட்டமைப்பு கட்டுமானப் பணிகளில் புதிய தரநிலைகளை நிர்ணயிப்பதும், அந்த்யோதயா என்ற கருத்தாக்கத்தின் கீழ், ஏழைகள், பெண்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு கண்ணியத்துடனும், பெருமையுடனும் வாழும் உரிமையை வழங்குவதும் இதன் நோக்கமாகும். பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் தீர்மானத்துடன் புதிய விஷயங்களைக் கட்டமைக்கும் திறனும் இதில் இணைந்துள்ளது. நாட்டின் வளர்ச்சியில் ஒவ்வொரு மாநிலத்தின் முறையான பங்கேற்புடன் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதையே இலக்காகக் கொண்டு இன்று, பீகார் மாநிலமும், பிரதமர் நரேந்திர மோடியின் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையுடன் முன்னேறி வருகிறது. அதனால்தான் பீகார் மாநில இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்றும் வகையிலும், மக்களின் விருப்பங்களுக்குப் புதிய வாய்ப்புகளை வழங்கும் வகையிலும் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# குஜராத் தற்சார்பு இந்தியாவின் வேகத்தை அதிகரிக்கிறது



*உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள், தொழில்துறைக்கு ஏற்ற சட்ட விதிகள் மற்றும் வலுவான சரக்குப் போக்குவரத்துக்கான கட்டமைப்பின் மூலம் குஜராத் மாநிலம் இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சிக்கான என்ஜினாக உருவெடுத்துள்ளதுடன், கடந்த முப்பது ஆண்டுகளாக வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு உகந்த இடமாக மாறியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், குஜராத் மாநிலம் பெரு நிறுவனங்களை ஈர்த்திருப்பது மட்டுமின்றி, உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, புத்தொழில் போன்றவற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் முதலீடுகளையும் பெற்றுள்ளது. இதனை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் வகையில், பாபுவின் மண்ணில் இருந்து, பிரதமர் நரேந்திர மோடி ரூ. 5,400 கோடிக்கும் அதிக மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கிவைத்தார், அடிக்கல் நாட்டினார்..*



**ஏழைகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் நடுத்தர வகுப்பு மக்களிடையே வாழ்ந்தவர்களால் — அவர்களின் போராட்டங்களில் பங்கேற்றவர்களால் மட்டுமே அவர்களின் வலியை உண்மையில் உணர முடியும். வாட்நகர் என்ற சிறு நகரத்திலிருந்து குஜராத் மாநில முதலமைச்சராகவும், பின்னர் இந்தியாவின் பிரதமராகவும் உயர்ந்த நரேந்திர மோடி, தனது கடந்த காலத்தில் எதிர்கொண்ட இன்னல்கள் மற்றும் சவால்களால்தான் தொலைநோக்குப் பார்வையுடன் உறுதியாக வடிவமைக்கப்பட்ட வளர்ச்சியடைந்த இந்தியாவை வழிநடத்தி செல்கிறார்.**

**2001-ல் பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கத்திற்குப் பின், குஜராத் மாநிலத்தை மீட்டெடுப்பதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்மாதிரி மாநிலமாக நிலைநிறுத்த, அம்மாநில**

முதலமைச்சராக அவர் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் அவரது தொலைநோக்குப் பார்வையை விரிவாக எடுத்துரைக்கிறது.

2001-ல் பேரழிவை ஏற்படுத்திய பூகம்பத்திற்குப் பின், சின்னாபின்னமான நிலையில் இருந்த குஜராத்தை அதிலிருந்து மீட்டு, நாட்டின் வளர்ச்சியில் ஒரு முன் மாதிரி மாநிலமாக நிலைநிறுத்த அந்த மாநில முதலமைச்சராக அவர் மேற்கொண்ட உறுதியான முயற்சிகளே அவரது தொலைநோக்குப் பார்வை பற்றி சொல்வதற்குப் போதுமானவையாகும். குஜராத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களும், ஒட்டு மொத்த தேசத்துடன் சேர்த்து குஜராத்தையும் மேம்படுத்துவதற்கான பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையும் 2025 ஆகஸ்ட் 25, 26 ஆகிய தேதிகளில் அவர் மேற்கொண்ட இரண்டு நாள் குஜராத் பயணத்தின் போது வெளிப்பட்டது. குஜராத் எனக்குக் கற்றுக் கொடுத்தவை நாட்டின் வளர்ச்சிக்காக இப்போது பயன்படுத்தப்படுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். தமது பயணத்தின் முதல் நாளில், அகமதாபாதில் 5,400 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்துப் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இதில் 1,400 கோடி ரூபாய் மதிப்புள்ள ரயில்வே தொடர்பான திட்டங்களும் அடங்கும். இரண்டாவது நாளில், ஹன்சல்பூரில் பசுமை இயக்க முன்முயற்சியின் கீழ் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட சுசுகி நிறுவனத்தின் முதலாவது மின்சாரக் காரை அவர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். மேலும் டிடிஎஸ்ஜி லித்தியம்-அயன் பேட்டரி தொழிற்சாலையில் ஹைப்ரிட் பேட்டரி மின்முனைகளின் (எலெக்ட்ரோட்) உற்பத்தியைத் தொடங்கி வைத்தார்.

தொழில்துறை வளர்ச்சியுடன், தன்னம்பிக்கை கொண்ட இந்தியாவை உருவாக்க குஜராத் அளித்த பங்களிப்பு பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் நரேந்திர மோடி, ஒரு காலத்தில், இந்த மாநிலத்திடம் எதுவும் இல்லை என்று மக்கள் கேலி செய்தனர். ஆனால் இப்போது குஜராத்தில் அனைத்து வகையான தொழில்களும் விரிவடைந்து வருகின்றன என்றார். தாஹோத் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் சக்திவாய்ந்த மின்சார என்ஜின்கள் தயாரிக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில் பெட்டிகள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மோட்டார் சைக்கிள்கள், கார்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விமான பாகங்கள் தயாரிக்கப்பட்டு அவை ஏற்றுமதி செய்யப்படும் நிலையில், இப்போது போக்குவரத்து விமானங்களை உருவாக்கும் பணி வதோதராவில் தொடங்கியுள்ளது. இந்தியாவின் சூரிய சக்தி, காற்றாலை, அணுசக்தி ஆகிய அனைத்திலும் குஜராத் பெரும் பங்கு வகிக்கிறது. குஜராத் மாநிலம், மின்சார வாகன உற்பத்திக்கான பெரிய மையமாக மாறி வருகிறது. குஜராத்தின் கெவாடியாவில் ஒற்றுமை சிலையாக அமைக்கப்பட்டுள்ள சர்தார் வல்லபாய் படேலின் பிரமாண்டமான நினைவுச்சின்னம் நாட்டிற்கும் உலகிற்கும் உத்வேகம் அளிக்கும் மையமாக மாறியுள்ளது. வறண்ட வடிகாலாக இருந்த அகமதாபாதில் உள்ள சபர்மதி ஆறு, இப்போது பொலிவுமிக்க நதிக்கரைப் பகுதியாகத் திகழ்கிறது.

அகமதாபாதில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தின் புகழ்மிக்க வரலாற்றை நினைவு கூர்ந்தார். இந்த நிலம் இரண்டு மோகன்களின் நிலம் என்ற செய்தியை அவர் எடுத்துரைத்தார். ஒருவர் சுதர்சன சக்ரதாரி மோகன், அதாவது துவாரகையின் மன்னன் ஸ்ரீ கிருஷ்ணர், மற்றொருவர் சர்க்காதாரி (ராட்டை) மோகன் எனப்படும் சபர்மதியின் மகான் நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி என்று பிரதமர் கூறினார். சுதர்சன சக்கரதாரி மோகனான ஸ்ரீ கிருஷ்ணர் நாட்டையும்




## மகாத்மா காந்தியின் பூமியிலிருந்து மீண்டும் சுதேசி குறித்த செய்தி

**இந்தப் பண்டிகைக் காலத்தில் சுதேசிப் பொருள்களை மட்டுமே வாங்குமாறு பிரதமர் கூறினார்**

வரவிருக்கும் நவராத்திரி, விஜயதசமி, தந்தேராஸ், தீபாவளி ஆகிய பண்டிகைகள் பற்றி குறிப்பிட்ட பிரதமர் நரேந்திர மோடி, உங்கள் வாழ்க்கையில் ஒரு மந்திரத்தை உருவாக்குங்கள் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்... நாம் எதை வாங்கினாலும் அது இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாக, அதாவது சுதேசி பொருளாக இருக்க வேண்டும். இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் நீங்கள் பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும் என்று நான் வணிகர்களிடம் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் முடிவு செய்யுங்கள். வெளிநாட்டுப் பொருட்களை விற்பதில்லை என்று முடிவெடுங்கள். சுதேசிப் பொருள்கள் என் கடையில் விற்கப்படுகிறது என்ற அறிவிப்புப் பலகையை மிகுந்த பெருமிதத்துடன் வையுங்கள் என்று வலியுறுத்திக் கூறினார்.

## ‘பெண் குழந்தைகளைக் காப்போம் – பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்’ திட்டத்துக்கான விதைகள் குஜராத்தில் விதைக்கப்பட்டன

சர்தார்தாம் பெண்கள் விடுதியின் இரண்டாம் கட்டத் திட்டப் பணிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். குஜராத் மாநில முதலமைச்சராகத் தாம் பதவிவகித்த காலத்தில் மகளிர் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்பட்ட சாதனைத் திட்டங்களை ஒரு காணொலிப் பதிவின் மூலம் அவர் நினைவுகூர்ந்தார். அந்த திட்டங்களே பின்னர் பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் என்ற தேசிய அளவிலான இயக்கத்தின் அடித்தளமாக மாறியது. அந்தக் காலகட்டத்தில், குஜராத் மாநிலத்தில் பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாதது, பெண் குழந்தைகளின் பள்ளி இடைநிற்றல் விகிதம் மிக அதிகமாக இருந்தது போன்ற சவால்கள் அதிகம் இருந்தன என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். அவர் முதலமைச்சராக இருந்தபோது பள்ளிகளில் உள்கட்டமைப்பு முதல் அனைத்து வசதிகளையும் அதிகரித்தார். பெண் சிசுக்கொலையை ஒழிப்பதற்கான இயக்கத்தைத் தொடங்கினார். குஜராத்தில், சக்தி வழிபாடு செய்பவராகத் திகழ்ந்த பிரதமர், ‘மகளும் மகனும் சமம்’ என்ற இயக்கத்தை வலுப்படுத்தினார். குஜராத்தில் விதைக்கப்பட்ட இந்த விதை இன்று ‘பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்’ என்ற வடிவத்தில் நாட்டில் ஒரு பெரிய மக்கள் இயக்கமாக மாறியுள்ளது.






## இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் புதிய அத்தியாயம்...

### குஜராத்திலிருந்து நூற்றுக்கும் அதிகமான நாடுகளுக்கு மின்சார வாகனங்கள் ஏற்றுமதி செய்யப்படும்

'இந்தியாவில் தயாரிப்போம் – உலகுக்குத் தயாரிப்போம்' என்ற இந்தியாவின் பயணத்தில் மற்றொரு புதிய அத்தியாயமாக 2025 ஆகஸ்ட் 26 அன்று பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தின் ஹன்சல்பூரில் சுசுகி நிறுவனத்தின் முதலாவது பேட்டரி மின்சார வாகனமான 'இ–விடாரா'–வைக் (e VITARA) கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்தியாவில் தயாரிக்கப்படும் இந்தக் கார்கள், ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் சந்தைகள் உட்பட நூற்றுக்கும் அதிகமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இந்தச் சாதனையின் மூலம், இந்தியா இப்போது சுசுகி நிறுவன மின்சார வாகனங்களின் உலகளாவிய உற்பத்தி மையமாக மாறுகிறது. இந்த உற்பத்தித் தொழிற்சாலைக்கு பிரதமர் நரேந்திர மோடி 2012–ல் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது அடிக்கல் நாட்டினார். ஜனநாயகத்தின் வலிமை, பெரிய மக்கள்தொகையின் நன்மை, திறமையான பணியாளர்களின் மிகப்பெரிய தொகுப்பு ஆகியவற்றை இந்தியா கொண்டுள்ளது என்றும் இது ஒவ்வொரு தரப்பினருக்கும் பயனளிக்கும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி இந்த நிகழ்ச்சியில் கூறினார். சுசுகி நிறுவனம் இந்தியாவில் உற்பத்தி செய்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது இந்தியா–ஜப்பான் உறவுகளின் வலிமையை மட்டுமின்றி, இந்தியா மீது உலகளாவிய நிறுவனங்கள் வைத்துள்ள வலுவான நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

பிரதமர் பங்கேற்ற இந்த முழு நிகழ்ச்சியையும் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

- பிரதமர், டிடிஎஸ்ஜி லித்தியம்-அயன் பேட்டரி தொழிற்சாலையில் ஹைப்ரிட் பேட்டரி மின்முனைகளின் (எலெக்ட்ரோட்) உள்ளூர் உற்பத்தியைத் தொடங்கி வைத்ததன் மூலம் இந்தியாவின் பேட்டரி சூழல் அமைப்பின் அடுத்த கட்ட முன்னேற்றத்தையும் தொடங்கி வைத்தார்.
- இது தோஷிபா, டென்சோ, சுசுகி ஆகிய மூன்று நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும்.
- மின்சார வாகனச் சூழல் அமைப்பில் பேட்டரிகள் மிக முக்கியப் பகுதியாகும்.
- சில ஆண்டுகளுக்கு முன் வரை, இந்தியா பேட்டரிகளை முழுமையாக இறக்குமதி செய்து வந்தது. மின்சார வாகன உற்பத்தியை வலுப்படுத்த, இந்தியாவிலேயே அவற்றை உற்பத்தி செய்வது அவசியம்.
- இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன், டிடிஎஸ்ஜி பேட்டரி தொழிற்சாலைக்கு 2017-ல் இங்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இப்போது 3 ஜப்பானிய நிறுவனங்கள் முதல்முறையாக இந்தியாவில் கூட்டாக பேட்டரிகளை உற்பத்தி செய்யவுள்ளன.
- பேட்டரி செல் மின்முனைகள் இந்தியாவில், உள்ளூரிலேயே தயாரிக்கப்படும்.
- இது இந்தியாவின் தற்சார்புக்குப் புதிய பலத்தை அளிக்கும். இது ஹைப்ரிட் மின்சார வாகனங்களின் வணிகத்தை மேலும் அதிகப்படுத்தும்.

**சமூகத்தையும் எவ்வாறு பாதுகாப்பது என்பதைக் கற்றுக் கொடுத்துள்ளார் என்று பிரதமர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் இந்திய ராணுவத்தின் வீரம், சுதர்சன சக்கரதாரி மோகனான கிருஷ்ணரின் மன உறுதி ஆகியவற்றின் அடையாளமாக மாறியுள்ளது. அதேபோல், சர்க்காதாரி மோகனான மகாத்மா காந்தி, சுதேசிக் கொள்கை மூலம் இந்தியாவின் செழிப்புக்கான பாதையைக் காட்டியுள்ளார். எனவே, உலகம் பொருளாதாரத் தற்சார்பு அரசியல் சகாப்தத்தைக் கடந்து செல்லும் நிலையில், சுதேசிக் கொள்கையைப் பின்பற்ற மகாத்மா காந்தியின் மண்ணிலிருந்து பிரதமர் மீண்டும் அழைப்பு விடுத்தார். சிறு தொழில்முனைவோர், சிறு கடைக்காரர்கள், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோரை பாதிக்கும் எந்த நடவடிக்கையையும் மத்திய அரசு மேற்கொள்ளாது என்று அவர் உறுதியளித்தார். எவ்வளவு அழுத்தம் வந்தாலும், அதைத் தாங்கி வலுவாக நிற்கும் வலிமையை நாம் பெறுவோம் என்று பிரதமர் கூறினார்.**

பிரதமர் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியை முழுமையாக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



# கொல்கத்தாவின் வளர்ச்சிக்கு மெட்ரோ திட்டம் புதிய வேகத்தைத் தரும்

*மேற்கு வங்கம் இந்தியாவின் பொற்கால வரலாற்றின் தொட்டில் மட்டுமல்ல, அதன் வளமான எதிர்காலத்தின் அடித்தளமும் கூட. நாட்டின் கிழக்குப் பகுதியிலிருந்து இந்தியாவின் எழுச்சிக்கான மத்திய அரசின் முன்முயற்சிகளுக்கான தீர்மானத்தில், 'வளர்ச்சியடைந்த மேற்கு வங்கம்' என்ற தொலைநோக்குப் பார்வை இணைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் இதுதான். இந்தத் தொலைநோக்குப் பார்வையுடன், கடந்த 11 ஆண்டுகளில், மேற்கு வங்கத்தில் நவீன உள்கட்டமைப்பு, போக்குவரத்து இணைப்பு ஆகியவற்றில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. 2025 ஆகஸ்ட் 22 அன்று கொல்கத்தா மெட்ரோ ரயில் திட்டத்தின் மூன்று புதிய பிரிவுகள் உட்பட 5,200 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்பாட்டுப் பரிசுகளைப் பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்...*

தலைநகர் தில்லியின் பரபரப்பான மெட்ரோ நடைமேடைகள் முதல் சூரத், போபால் போன்ற நகரங்களின் மெட்ரோ ரயில் கட்டமைப்புகள் வரை, மெட்ரோ அமைதியாக ஒரு புதிய இந்தியாவுக்கான கட்டமைப்பை வடிவமைக்கிறது. இது வேகமான போக்குவரத்து முறை என்பதுடன் சுற்றுச் சூழலுக்கும் ஏற்றதாகும். இது எதிர்கால இந்தியாவின் உயிர்நாடியாகும். இதனைப் பொதுப் போக்குவரத்தின் முதுகெலும்பாக மாற்ற நாடு முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தியாவில் மெட்ரோ கட்டமைப்பைப் பெற்ற முதல் மாநிலமான மேற்கு வங்கம், இப்போது மெட்ரோவை அதன் பொதுப் போக்குவரத்தின் முதுகெலும்பாக மாற்றத் தயாராகி வருகிறது. கொல்கத்தா மெட்ரோவின் 3 புதிய பிரிவுகளைப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். 7 புதிய நிலையங்களை இணைக்கும் இந்தப் பிரிவுகளின் மொத்த நீளம் 13.61 கிலோ மீட்டர் ஆகும். ஹௌரா நிலையத்துடன் இணைக்கப்பட்ட சுரங்கப்பாதையைத் திறந்து வைத்ததுடன், உயர்மட்ட ஆறுவழிச் சாலையான கோனா விரைவுச்சாலைக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

நவீனப் போக்குவரத்து இணைப்பை ஊக்குவிப்பதற்காக மேற்கு வங்கத்திற்கு வழங்கப்பட்ட இந்தத் திட்டங்களுடன், புதிய இந்தியாவைக் கட்டமைப்பதில் உள்கட்டமைப்பின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் நரேந்திர மோடி, 2030-க்குள், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும் இலக்கை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாகக் கூறினார். இதில், கொல்கத்தா போன்ற நகரங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. இன்றைய இந்தியா தனது நகரங்களை எவ்வாறு மாற்றுகிறது என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு சான்றாகும். உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ கட்டமைப்பைக் கொண்ட நாடாக இப்போது



**கொல்கத்தாவில் மெட்ரோ ரயில் பாதை 7 மடங்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது**

## ரயில்வே–நெடுஞ்சாலைத் திட்டங்கள் வேகமெடுக்கின்றன

கொல்கத்தாவில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் 1972-ல் தொடங்கின. 1984-ல், முதல் முறையாக 3.4 கிலோ மீட்டர் தூரப் பாதையில் மெட்ரோ ரயில் சேவைகள் தொடங்கப்பட்டன. அதன் பின், சுமார் 70 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் பாதை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2027-க்குள் கொல்கத்தாவில் 130 கிலோ மீட்டர் நீளத்துக்கு மெட்ரோ ரயில் வழித்தடத்தைக் கட்டமைத்து, பணிகளை நிறைவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




- கடந்த பத்து ஆண்டுகளில், மேற்கு வங்கத்தில் முழுமையாக அல்லது பகுதியளவில் சுமார் 68 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் 4,400 கிலோ மீட்டருக்கும் அதிகமான 42 ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில், 1702 கிலோ மீட்டர் நீளத்திலான ரயில் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.
- மேற்கு வங்கத்தில் 286 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 34 திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் செலவு சுமார் 10,900 கோடி ரூபாய் ஆகும்.

சாலை, ரயில், விமான, நீர்வழிப் போக்குவரத்து இணைப்புகள் அதிகரிப்பு

| பிரிவு | இப்போது(2025–26) | 2013–14–ம் ஆண்டுக்கு முன் |
|---|---|---|
| மெட்ரோ | 24 நகரங்கள் - 1,050 கி.மீ நீளம் | 5 நகரங்கள் - 248 கி.மீ நீளம் |
| மெட்ரோ கட்டுமானம் | மாதந்தோறும் 6 கி.மீ | மாதந்தோறும் 680 மீட்டர் |
| மெட்ரோ பயணிகள் | தினமும் 1.12 கோடி | தினமும் 28 லட்சம் |
| ரயில் பாதை | 40,000 கி.மீ-க்கும் அதிகமாக | 20,000 கி. மீ |
| விமான நிலையங்கள் | 160 | 74 |
| நீர்வழிப் பாதைகள் | 30 | 3 |



### நவீனப் போக்குவரத்து இணைப்புக்கான உயிர்நாடி

- கொல்கத்தா மெட்ரோவுக்கு வழங்கப்பட்ட 3 புதிய பிரிவுகளில் எஸ்பிளனேட்-சீல்டா இடையே 2.45 கிலோ மீட்டர், நோபராவை ஜெய் ஹிந்த் விமான நிலையத்துடன் இணைக்கும் 6.77 கிலோ மீட்டர் நீளப் பிரிவு, ரூபி-பெலேகாட்டா இடையே 4.39 கிலோ மீட்டர் நீளப் பிரிவு ஆகியவை அடங்கும்.
- நோபரா-ஜெய் ஹிந்த் விமான நிலையப் பிரிவு வழியாக, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சர்வதேச விமான நிலையம் முதல்முறையாக மெட்ரோ சேவையுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. முன்பு சாலை வழியாகப் பயணிக்க 45 நிமிடங்கள் முதல் 1 மணி நேரம் வரை ஆன நிலையில் இந்தப் புதிய மெட்ரோ வழித்தடங்கள் மூலம் விரைந்து சென்றடைய முடியும்.
- 1,200 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் கட்டப்பட உள்ள 7.2 கிலோ மீட்டர் நீளமுள்ள உயர்மட்ட ஆறு வழிச்சாலையான கோனா விரைவுச்சாலை, ஹவுரா, அதைச் சுற்றியுள்ள கிராமப்புறங்கள், கொல்கத்தா ஆகிய இடங்களுக்கு இடையே போக்குவரத்து இணைப்பை அதிகரிக்கும்.

### இந்தியாவின் இளைஞர்களுக்கு நாட்டின் வளங்களில் உரிமை உண்டு

மக்கள்தொகை சவால், ஊடுருவல்காரர்கள் ஆகியவை குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி தமது கவலையை வெளிப்படுத்தினார். இன்று, வளர்ச்சியடைந்த நாடுகள் என்று அழைக்கப்படும் வளங்களுக்குப் பஞ்சமில்லாத நாடுகளில், ஊடுருவல்காரர்களுக்கு எதிரான இயக்கம் நடந்து வருவதாக அவர் கூறினார். "இந்தியாவில் குறைந்த வளங்கள் மட்டுமே உள்ளன. நமது இளைஞர்களுக்கு நாம் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும். நமது இளைஞர்களிடமிருந்து வேலைவாய்ப்பைப் பறித்து, நமது சகோதரிகளையும் மகள்களையும் சித்ரவதை செய்யும் ஊடுருவல்காரர்களை நமது நாட்டில் அனுமதிக்க மாட்டோம்" என்று பிரதமர் கூறினார்.

இந்தியா உள்ளது என்பது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை தரும் செய்தியாகும்.

21-ம் நூற்றாண்டு இந்தியாவில், 21-ம் நூற்றாண்டுக்கு ஏற்ற போக்குவரத்து அமைப்பு தேவை என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். எனவே, இப்போது நாட்டில் ரயில் முதல் சாலை வரை, மெட்ரோ முதல் விமான நிலையம் வரை அதிநவீனப் போக்குவரத்து வசதிகளை உருவாக்கி அவற்றை இணைத்து வருவதாக அவர் கூறினார்.

100 சதவீத மின்மயமாக்கப்பட்ட ரயில் பாதைகள் கொண்ட மாநிலங்களில் மேற்கு வங்கமும் இப்போது இணைந்துள்ளது. புருலியா - ஹவுரா இடையேயான மெமு ரயிலுக்கான நீண்டகால கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. மேற்கு வங்கத்தின் பல்வேறு வழித்தடங்களில் 9 வந்தே பாரத் ரயில்களும், 2 அம்ரித் பாரத் ரயில்களும் இயக்கப்படுகின்றன. கொல்கத்தாவில் நடைபெற்ற மற்றொரு பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, மேற்கு வங்கத்தின் ஆற்றல் பெருகும் வரை வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடையும் பயணம் முழுமை அடையாது என்று கூறினார். நாங்கள், 'வங்கத்தின் எழுச்சியே வளர்ச்சியடைந்த பாரதத்தின் வெற்றி' என்று சொல்கிறோம்! அதனால்தான், கடந்த 11 ஆண்டுகளில், மத்திய அரசு இங்கு வளர்ச்சிக்கான அனைத்து உதவிகளையும் வழங்கியுள்ளது என பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியை முழுமையாக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

# தற்சார்பு இந்தியா என்பது வளர்ச்சியடைந்த தேசத்தின் அடித்தளம்



"சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம் என்ற மந்திரத்தின் மூலமாக, மெதுவான வளர்ச்சியிலிருந்து உலகம் மீள்வதற்கு உதவும் நிலையில் பாரதம் இப்போது உள்ளது.

–நரேந்திர மோடி, பிரதமர்

**இந்தியாவின் பொருளாதாரம் இப்போது உலக அரங்கில் ஒரு வலுவான தூணாக உள்ளது. உலகின் பல நாடுகள் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்தியா குறிப்பிடத்தக்க நிலைத்தன்மையுடன் வேகமாக முன்னேறி வருகிறது. இந்த உறுதித்தன்மையும் மீள்தன்மையும் கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசால் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும் தொலைநோக்குத் திட்டங்களின் விளைவாகும். உலக வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு விரைவில் 20 சதவீதத்தை எட்டக்கூடும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். இது உலகப் பொருளாதாரத்தில் அதன் அதிகரித்து வரும் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது. 2025 ஆகஸ்ட் 23 அன்று நடைபெற்ற எகனாமிக் டைம்ஸ் (ET) உலகத் தலைவர்கள் மன்றக் கூட்டத்தில், சீர்திருத்தம், செயல்திறன், மாற்றம் என்ற மந்திரத்துடன் வளர்ந்துவரும் இந்தியா, காலத்தின் போக்கை வளைக்கும் சக்தியைக் கொண்டுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.**

உலகப் பொருளாதாரத்தின் தற்போதைய நிலையைப் பார்க்கும்போது இந்தியப் பொருளாதாரத்தின் வலிமை இன்னும் தெளிவாகத் தெரிகிறது. இந்தியா தற்போது உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாக உள்ளதுடன் விரைவில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதை நோக்கி முன்னேறி வருகிறது. 2025 ஆகஸ்ட் 23 அன்று தில்லியில் நடைபெற்ற எகனாமிக் டைம்ஸ் உலகத் தலைவர்கள் மன்றக் கூட்டத்தில், பொருளாதாரத்தின் அடிப்படைகள் வலுவாக இருக்கும்போது, அதன் விளைவு அனைத்துத் துறைகளிலும் தெரியும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்து வருவதால், வேலைவாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. புள்ளிவிவரங்களிலிருந்து இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்... ஜூன் மாதத்தில், ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (இபிஎஃப்ஓ) தரவுத்தளத்தில் 22 லட்சம் முறையான பதிவுகள் சேர்க்கப்பட்டன. இது ஒரே மாதத்தில் இதற்கு முன் இல்லாத அளவிலான மிகப்பெரிய எண்ணிக்கையாகும். இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் 2017-க்குப் பின் மிகக் குறைந்த அளவில் உள்ளதுடன் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு இதுவரை இல்லாத அளவுக்கு உச்சத்தை எட்டியுள்ளது.

இந்தியாவின் சூரிய சக்தி மின் உற்பத்தித் திறன் 2014-ல் சுமார் 2.5 ஜிகா வாட்டாக இருந்தது. தற்போது அது 100 ஜிகாவாட்டை எட்டியுள்ளது. தில்லி விமான நிலையம்

உலகளாவிய விமான நிலையங்களின் உயர் நிலையான ‘ஹன்ட்ரெட் மில்லியன் பிளஸ் கிளப்’ என்ற தர நிலைக் குழுவில் நுழைந்துள்ளது. அதாவது இப்போது, இந்த விமான நிலையத்தின் பயணிகள் கையாளும் திறன் ஆண்டுக்கு 10 கோடிக்கும் அதிகமாக உள்ளது. உலகில் ஆறு விமான நிலையங்கள் மட்டுமே இந்தச் சிறப்புக் குழுவில் ஒரு பகுதியாக உள்ளன.

‘வாய்ப்புகளைத் தவறவிடுதல்’ என்ற பொதுவான வாசகம் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் நரேந்திர மோடி, வாய்ப்புகள் சாதகமாகப் பயன்படுத்தப்படாவிட்டால், அவை நழுவிவிடும் என்று கூறினார். இந்தியாவின் முந்தைய அரசுகள் தொழில்நுட்பம், தொழில்துறை ஆகியவற்றில் பல வாய்ப்புகளைத் தவறவிட்டன என்று அவர் கூறினார். இது யாரையும் விமர்சிப்பதாக அர்த்தமல்ல என்றும், ஜனநாயகத்தில் ஒப்பீட்டுப் பகுப்பாய்வானது, நிலைமையை மிகவும் திறம்படத் தெளிவுபடுத்த உதவுகிறது என்றும் அவர் கூறினார். 2014-ம் ஆண்டுக்குப் பின், இந்தியா தனது அணுகுமுறையை மாற்றியது. இப்போது எந்த வாய்ப்பையும் தவறவிடக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது. இந்தியாவில் உருவாக்கப்பட்ட 5ஜி சேவையை நாடு அறிமுகம் செய்தது மட்டுமின்றி, நாடு முழுவதும் அதனை மிக வேகமாக செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது. இப்போது இந்தியாவில் உருவாக்கப்படும் 6ஜி தொழில்நுட்பம் தொடர்பாக இந்தியா வேகமாக செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் இப்போது செமிகண்டக்டர் (குறைக்கடத்தி) தொடர்பான தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. இந்தியாவின் இலக்கு பெரிய அளவில் விரைந்து முன்னேறுவதே ஆகும். இந்தியாவில் சீர்திருத்தங்கள் எந்தவொரு கட்டாயத்தாலோ அல்லது எந்த நெருக்கடியாலோ மேற்கொள்ளப்படுவதில்லை. சீர்திருத்தங்கள் இந்தியாவின் அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். தேவையற்ற சட்டங்களை ரத்து செய்தல், விதிகளையும் நடைமுறைகளையும் எளிதாக்குதல் போன்ற முக்கிய நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்ட அவர், செயல்முறைகள், ஒப்புதல்கள் போன்றவை டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார். பல விதிகள் குற்றமற்றவையாக மாற்றப்பட்டுள்ளன. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) முறையை எளிமையாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பலவற்றின் விலைகளைக் குறைக்கும்.

2047-க்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான அடித்தளம், தற்சார்புடன் கூடிய இந்தியா என்பதாகும். இது மூன்று அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும்... அவை வேகம், அளவு, வாய்ப்பு. உலகளாவிய பெருந்தொற்றுக் காலத்தின்போது இந்த மூன்று நிலைகளிலும் இந்தியா சிறப்பாக செயல்பட்டது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தேவை திடீரென அதிகரித்து, உலகளாவிய விநியோகம் பாதிக்கப்பட்ட அந்த நேரத்தில், அத்தியாவசியப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய இந்தியா பல தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. எரிசக்தித் துறையில் இந்தியாவின் வேகம், அளவு, வாய்ப்பு ஆகியவை குறித்து உலகம் கவனம் செலுத்தி வருகிறது. 2030-க்குள் புதைபடிவம் அல்லாத எரிபொருள்களிலிருந்து மொத்த மின் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தை எட்ட இந்தியா இலக்கு நிர்ணயித்தது. அந்த இலக்கு திட்டமிடப்பட்டதை விட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே எட்டப்பட்டுள்ளது.

பிரதமர் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியை முழுமையாக் காண இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

## இந்தியா தற்சார்பின் மூலம் உலகளாவிய தேவைகளைப் பூர்த்தி செய்கிறது

### இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி



சுதந்திரத்திற்குப் பின் 65 ஆண்டுகளில் சுமார் ₹ 35,000 கோடி ரூபாயாக இருந்தது.

அது இப்போது ₹ 3.25 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

### இந்தியாவின் வாகனங்கள் ஏற்றுமதி



முன்பு ஆண்டுக்கு சுமார் ₹ 50,000 கோடி ரூபாய்.

இப்போது இது ஆண்டுக்கு ₹ 1.5 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

- 100 நாடுகளுக்கு மின்சார வாகனங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இந்தியா மற்றொரு மைல்கல்லை அடைய உள்ளது.
- 2014-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டுக்குமான நிதி ஒதுக்கீடு இரு மடங்கிற்கும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தாக்கல் செய்யப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை 17 மடங்கு அதிகரித்துள்ளது.
- இந்தியா தற்சார்புடன் உலகளாவிய தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.
- 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆராய்ச்சி, மேம்பாடு, புதியகண்டுபிடிப்புகள் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு, இந்தியா 4 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்தது.
- கடந்த ஆண்டு, இந்தியா 4 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்தது.

### இந்தியாவின் விண்வெளிப் பயணங்கள்



1979 முதல் 2014 வரை 42 விண்வெளிப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன

கடந்த 11 ஆண்டுகளில் 60-க்கும் அதிகமான விண்வெளிப் பயணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன

இந்தியாவில் 2014- ல் ஒரே ஒரு விண்வெளிப் புத்தொழில் நிறுவனம் மட்டுமே இருந்த நிலையில் இப்போது 300-க்கும் அதிகமான நிறுவனங்கள் உள்ளன

**300**




**லிம்கா சாதனைகள் புத்தகம்:** 2023 ஜனவரி 13 அன்று, பிரதமர் நரேந்திர மோடி எம்வி கங்கா விலாஸ் கப்பல் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இது வாரணாசியில் இருந்து திப்ரூகர் வரை இந்தியாவின் 5 மாநிலங்கள் மற்றும் பங்களாதேஷின் 27 ஆறுகள் வாயிலாக 3,200 கிலோமீட்டர் தொலைவுக்கு உலகின் நீளமான ஆற்றுப் பயணமாகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

# இந்தியாவில், சொகுசுக் கப்பல்

## சுற்றுலா வளர்ச்சியடைகிறது

**சுமார் 7500 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரை மற்றும் 20 ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள நீர் வழிபாதைக் கட்டமைப்புடனான திறனையும் அத்திறனை விரைவான வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்தும் அம்சத்தையும் இந்தியா கொண்டுள்ளது. இந்த நோக்கத்துடன், தேசிய– சர்வதேச இணைப்பு, உலகத்தரம் வாய்ந்த விருந்தோம்பல் வசதிகள், பொழுதுபோக்கு, சொகுசுக் கப்பல் சுற்றுலா இணைப்பு மூலம் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற 5 ஆண்டு இலக்குடன் ' சொகுசுக் கப்பல் சுற்றுலா பாரத் இயக்கம்' தொடங்கப்பட்டது. இது ஒரு காலத்தில் சாதாரண மனிதரால் ஆடம்பரமான செலவு என்று கருதப்பட்டது.**

*இந்த செப்டம்பர் 30- உடன் ' சொகுசுக் கப்பல் சுற்றுலா பாரத் இயக்கத்தின்' ஓராண்டு நிறைவடைகிறது. இந்தப் பின்னணியில், இந்தியாவில் சொகுசுக் கப்பல் சுற்றுலாவின் புதிய சகாப்தம் எவ்வாறு உத்வேகம் அடைகிறது என்பதை நாம் தெரிந்துகொள்வோம்..*

ஒரு காலத்தில் நமது நாட்டின் ஆறுகளில் பெரிய கப்பல்கள் சென்று கொண்டிருந்த நிலையில், சுதந்திரத்திற்குப் பின், இத்துறையில் கவனம் செலுத்தப்படவில்லை. தற்போது பத்து ஆண்டுகளுக்குப் பின், வளர்ச்சியுடன் பாரம்பரியத்தை இணைப்பது என்ற புதிய அணுகுமுறை மூலம் இந்தியா மறுமலர்ச்சியின் புதிய சகாப்தத்தைப் படைக்கிறது. கடந்த 11 ஆண்டுகளில், சாலைகள், ரயில், விமானப் போக்குவரத்து போன்று நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தும் வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அதன் முழு திறனையும் பயன்படுத்தி, சொகுசுக் கப்பல் சுற்றாலா பாரத் இயக்கத்தைத் தொடங்கி இருப்பது, இந்தியாவின் அழகான இடங்களைக் காண்பதை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டை உலகளாவிய சொகுசுக் கப்பல் சுற்றுலா மையமாக மாற்றியுள்ளது. ஐந்து ஆண்டுகளில் 10 கடல் சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்கள், 100 ஆற்று சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்கள், 5 சுற்றுலா படகுத் துறைகள் ஆகியவற்றை அமைப்பது இந்த இயக்கத்தின் இலக்காகும். கடந்த பத்தாண்டுகளுடன் நாம் ஒப்பிட்டால், கடல் சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சுமார் 400 சதவீதம் அதிகரித்துள்ளது. 2047-க்குள் இந்த எண்ணிக்கை 50 லட்சத்தை எட்டும் என்று மத்திய அரசு நம்புகிறது.

இதுவரை 9 மாநிலங்களில் 13 தேசிய நீர்வழிப் பாதைகளில் 15 ஆற்று சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இந்த இயக்கம் 14 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் 51 ஆற்று வழி சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்களைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது. சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளுடன், கவரக்கூடிய சொகுசுக் கப்பல் சுற்றுலா மையமாக இந்தியாவைத் திகழச் செய்வது இதன் நோக்கமாகும்.

அதனால், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்களை இந்தியாவிற்கு ஈர்க்க முடியும்.




## சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணங்கள் பிரபலம் அடைகிறது

சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2015-க்கும் 2025-க்கும் இடையே சுமார் 400 சதவீதம் அதிகரித்துள்ளது. இது மட்டுமின்றி, 2013- 14-ல் மூன்று நீர்வழிப் பாதைகளில் வெறும் 5 கப்பல்கள் மட்டும் இயக்கப்பட்ட நிலையில், 2024- 25- ம் ஆண்டில், 13 தேசிய நீர்வழிப் பாதைகளில் 25 கப்பல்கள் இயக்கப்பட்டு ஆற்று வழி சொகுசுக் கப்பல்களின் சுற்றுலா செயல்பாடு விரைவாக வளர்ச்சி அடைந்துவருகிறது. 2014-ல் நீர்வழிப் பாதைகளின் எண்ணிக்கை 25 மட்டுமே இருந்த நிலையில், 24 மாநிலங்களில் 111 தேசிய நீர்வழிப் பாதைகளை உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## சொகுசுக் கப்பல் சுற்றுலா பாரத் இயக்கத்தின் 2029 இலக்குகள்

**4** லட்சம் வேலை வாய்ப்புகள் சொகுசுக் கப்பல் சுற்றுலா துறையில் உருவாக்கப்பட உள்ளன. முதற்கட்ட இலக்கு: 1 லட்சம்.

**10** லட்சம் என்பது எதிர்காலத்தில் கடல் வழி சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இலக்காகும். தற்போதைய 5 லட்சம் என்பதிலிருந்து சீரான அதிகரிப்பு.

**15** லட்சம் பயணிகள் என்பது ஆற்று வழி சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணிகளில் தற்போதைய 5 லட்சம் என்பதிலிருந்து எதிர்காலத்திற்கான இலக்கு

- 10 சர்வதேச சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்கள் அமைக்கப்படும்; தற்போது 2 உள்ளது.
- எதிர்காலத்தில் 100 ஆற்று வழி சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்கள் அமைக்கப்படும்; தற்போது 50 உள்ளது.

> *நீர்வழிப் பாதைகள் சுற்றுச்சூழலை பாதுகாக்கச் சிறந்தது என்பது மட்டுமின்றி, அதனால் பணமும் சேமிக்கப்படுகிறது. ஓர் ஆய்வின்படி, நீர்வழிப் பாதைகள் மூலமான போக்குவரத்து செலவு சாலை வழிகளை விட இரண்டரை மடங்கு குறைவாகும். அதேபோல் ரயில் வழிகளைவிட மூன்றில் ஒரு மடங்கு குறைவாகும். நீர்வழிப் பாதைகள் மூலம் எவ்வளவு எரிவாயு, எவ்வளவு பணம் சேமிக்கப்படுகிறது என்பதை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்.*
>
> நரேந்திர மோடி, பிரதமர்

### சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணங்கள் பிரபலம்

- கட்டம் 1 (2024 அக்டோபர் முதல் 2025 செப்டம்பர் வரை): சந்தை ஆராய்ச்சி, பெரும் திட்டம், மற்றும் அண்டை நாடுகளுடன் சொகுசுக் கப்பல் சுற்றுலா திட்ட கூட்டாண்மைகளுடன் தற்போதைய முனையங்களை நவீனப்படுத்துதல்.
- கட்டம் 2 (2025 அக்டோபர் முதல் 2027 மார்ச் வரை):சுற்றுலா வாய்ப்புகள் குறித்து முழுமையாக கவனம் செலுத்தி புதிய சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்களை அமைத்தல்.
- கட்டம் 3 ( 2027 ஏப்ரல் முதல் 2029 மார்ச் வரை):இந்திய துணைக் கண்டம் முழுவதும் சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்களை இணைத்தல்.

### சொகுசுக் கப்பல் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- துறைமுகங்களில் தளங்கள் அமைக்க முன்னுரிமை
- நியாயமான துறைமுக மற்றும் பயணிகள் கட்டணம். துறைமுகக் கட்டணத்தில் 10% முதல் 30% வரை தள்ளுபடி.
- உள்நாட்டு கப்பல்களை மட்டுமே அனுமதிக்கும் காபோடேஜ் என்னும் சட்டவிதி நீக்கப்பட்டு ஒரு இந்திய துறைமுகத்திலிருந்து மற்ற துறைமுகத்திற்கு வெளிநாட்டு சொகுசு சுற்றுலா கப்பல்களும் அனுமதிக்கப்படுகின்றன.
- இ- விசா, வருகை விசா ஆகிய வசதிகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.
- இ- தரையிறங்குதல் அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது சொகுசுக் கப்பல் சுற்றுலா பயணத்திட்டத்தில் அனைத்துத் துறைமுகங்களுக்கும் செல்லுபடியாகும்.
- நியாயமான சொகுசுக் கப்பல் சுற்றுலா கட்டணம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

அத்துடன், சொகுசுக் கப்பல் சுற்றுலா இந்திய சுற்றுலா பயணிகள் இடையே பிரபலமாகும்.

வாரணாசி முதல் ஹால்டியா வரை தேசிய நீர்வழிப் பாதை எண்- ஒன்றில் ( 1,390 கிமீ ) உள்நாட்டுக் கப்பல்கள் போக்குவரத்து இந்திய உள்நாட்டு நீர்வழிப் பாதைகள் ஆணையம் மூலம் தொடங்கப்பட்டது. கடந்த நிதியாண்டில், உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் வழியாக இந்த நீர்வழிப் பாதைகளில் 4,229 கப்பல்கள் கடந்து சென்றன.

### நாட்டின் 6 பெரிய துறைமுகங்களில் சொகுசுக் கப்பல் சுற்றுலா முனையங்கள்

தற்போது, நாட்டில் 6 பெரிய துறைமுகங்கள் உள்ளன. அவை, மகாராஷ்டிராவில் மும்பை, கோவாவில் மர்கோவா, கேரளாவில் கொச்சி, தமிழ்நாட்டில் சென்னை, கர்நாடகாவில் புதிய மங்களூர், ஆந்திரப் பிரதேசத்தில் விசாகப்பட்டினம் ஆகியவை. அத்துடன், புதுச்சேரி, லட்சத்தீவு, அந்தமான் நிக்கோபர் தீவுகளில் ஸ்ரீ விஜயபுரம் ஆகிய பகுதிகளில் சொகுசு சுற்றுலா கப்பல் வசதிகள் உள்ளன. அதே நேரத்தில், 2024- 25- ம் நிதி ஆண்டில் 11 மாநிலங்களில் 29 தேசிய நீர்வழிப் பாதைகள் செயல்பாட்டில் இருந்தன. அவற்றில் 3 தேசிய நீர்வழிப் பாதைகள் சொகுசுக் கப்பல் சுற்றுலா போக்குவரத்திற்குத் தனியாக அர்ப்பணிக்கப்பட்டவை.



### பிரதமரின் ஜன் தன் திட்டம்

# வறுமைக்கு எதிராக எளியோருக்கு அதிகாரம் அளிக்கிறது

*“ஜன் தன் கணக்குகள் தொடங்கப்பட்ட போது, அது வெறும் வங்கி கணக்காக இல்லை. அது ஏழை மக்களுக்கு சுயமரியாதையை அளித்து, வங்கிக் கதவுகள் அவர்களுக்காகவும் திறக்கப்பட்டது. அவர்களும் வங்கிகளுக்குச் சென்று மேசையில் தங்களின் கைகளை வைத்து பேச முடிந்தது; நாங்கள் இந்த தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளோம். ”*



***இந்த வார்த்தைகள் 79– வது சுதந்திர தினத்தின் போது, செங்கோட்டை கொத்தளத்தில் பிரதமர் நரேந்திர மோடி வெளிப்படுத்தியவை. இதன் மூலம் மக்கள் தங்களின் வங்கிக் கணக்குகளால் பெற்றுள்ள சுயமரியாதையைப் புரிந்து கொள்ளப் போதுமானதாகும். 2014–ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஜன் தன் திட்டத்தின் மூலம், இதுவரை 56 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, கோடிக்கணக்கான இந்தியக் குடிமக்களுக்கு வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளையும், பொருளாதார அதிகாரம் அளித்தலுக்கான புதிய கதவுகளையும் திறந்துள்ளது...***

பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறான கொள்கைகள் காரணமாக ஏழைகள் தாழ்வு மனப்பான்மையுடன் இருந்தனர். ஏழைகளை நோக்கமாகக் கொண்டு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. ஆனால், நாட்டின் மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு வங்கிக் கதவுகள் மூடப்பட்டன. ஒவ்வொரு கடினமான தருணத்திலும் உதவியை நாடியும், ஒவ்வொரு தேவைக்கும் மற்றவர்களை சார்ந்தும் இருந்த நிலையில் அது அரசின் கடமை என்று சமூகம் கண்டுகொள்ளாமல் இருந்தது. வங்கிக் கணக்குகள், கடன் அட்டைகள், காப்பீடு, ஓய்வூதியங்கள் போன்றவை செல்வந்தர்களுக்கானது என்றும், ஏழைகளுக்கானது அல்ல என்றும் கருதப்பட்டது. ஆனால், ஆழ்ந்த இருளில் மூழ்கியிருந்தவர்களுக்கு பிரதமரின் ஜன் தன் திட்டத்தின் மூலம் பிரதமர் மோடி நம்பிக்கையூட்டினார். அதனால் ஏழை மக்களின் கனவு நனவாக தொடங்கியது. வங்கி நண்பர்கள், வங்கித் தோழி ஆகிய திட்டங்கள் நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள ஏழைகளை சென்றடைகின்றன. குறைந்தபட்ச வைப்புத் தொகை இல்லாமல் ஏழைகள், ஜன் தன் கணக்கை தொடங்கிய போது அவர்களின் வாழ்க்கைச் சூழல் மாறியது. ஜன் தன் திட்டத்தின் பாஸ்புத்தகத்தை ஒப்படைத்ததன் மூலம் வறுமைக்கு எதிரான போரில் ஏழைகள் மற்றும் விளிம்பு நிலை மக்களை பிரதமர் மோடி வீரர்களாக மாற்றினார்.

ஜன் தன் கணக்குடன் ஏழைகள் ரூபே அட்டையையும் பெற்றனர். அடல் ஓய்வூதியத் திட்டம் மூத்தக் குடிமக்களின் ஓய்வூதியத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறது. காப்பீடு என்பது செல்வந்தர்களுக்கான சலுகை அல்ல. பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம், பிரதமரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஆகியவை ஏழைக் குடும்பங்களுக்கு காப்பீடு பாதுகாப்பை உறுதி செய்து கடினமான தருணங்களில் உதவுகிறது.

ஜன் தன் திட்டம் நாட்டின் உண்மையான பொது நலனுக்கு உதாரணமாகும்.

# ஒரு வங்கி கணக்கு, பல்வேறு வசதிகளை அதிகரித்தது

- தற்போது பணம் சமையலறை பாத்திரங்களில் மறைத்து வைக்கப்படுவதில்லை; வங்கியில் பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. நிதி பாதுகாப்பு, வசதி ஆகிய இரண்டையும் ரூபே அட்டை வழங்கியுள்ளது. கடன் தருவோர் பிடியிலிருந்து தற்போது சுதந்திரம் கிடைத்துள்ளது.
- 'வங்கி நண்பன்' திட்டத்தின் மூலம் வங்கிச் சேவைகள் அனைத்து வீடுகளையும் சென்றடைகின்றன. இதன் மூலம் மக்கள் எந்த சிரமமும் இன்றி நிதி உதவி பெறுகின்றனர்.
- தற்போது பரிவர்த்தனைக்குப் பணம் தேவையில்லை; செல்பேசி போதுமானது. பரிவர்த்தனையை யுபிஐ எளிதானதாகவும் பாதுகாப்பானதாகவும் மாற்றியுள்ளது.
- சேமிப்புகளில் அதிகரிப்பு: வங்கியில் சேமிக்கப்படும் பணம் மற்றும் அரசின் நேரடிப் பயன் பரிமாற்றம் காரணமாக வீட்டு சேமிப்பும் அதிகரித்துள்ளது.
- நிதி உள்ளடக்கம்: கணக்கு வைத்திருக்கும் மகளிர் + அருகில் உள்ள வங்கி மையம் ஆகியவை அடித்தள நிலையில் மகளிர்க்கு அதிகாரம் அளித்துள்ளன.
- சிறந்த நிர்வாகத்தில் நம்பிக்கை: ஜன் தன் திட்டப் புரட்சியில், அனைவருக்கும் வங்கிக் கணக்கு+ ஆதாருடன் இணைப்பு+ செல்பேசி அணுகல் ஆகியவற்றின் மூலம் நாட்டின் கடைக்கோடியில் உள்ளவர்களையும் வங்கி வசதிகள் சென்றடைந்துள்ளன.
- ஜன் தன் திட்டம் இடைத்தரகர்களின் தலையீட்டை நீக்கி, 320-க்கும் அதிகமான திட்டங்களின் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு 45 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை நேரடியாகப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடு 4.3 லட்சம் கோடி ரூபாய் சேமித்துள்ளது.

## வங்கிகளை அணுகல்

வங்கி நண்பன் + மின்னணு வங்கிப் பிரிவு = அனைத்து கிராமங்களிலும் வங்கி வசதிகள்.

- 21.6 லட்சம் வங்கிக் கிளைகளுடன், 6 லட்சத்திற்கும் அதிகமான கிராமங்களில் 5 கிமீ தொலைவிற்குள், அதாவது 99.9% , வங்கி வசதியை இந்தியா கொண்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் மொத்த மக்கள் தொகையை விட அதிகமான கணக்குகள்

**56.21**
கோடி ஜன் தன் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

**38.71**
கோடி ரூபே பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஊரக மற்றும் சிறிய நகர்ப்புற வங்கிகளில் 67%- க்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.
- நகர்ப்புற பகுதிகளில் 18.69 கோடி பயனாளிகள் உள்ளனர்.
- ஜன் தன் திட்டத்தில் 31.33 கோடி பேர், அதாவது, சுமார் 56% பெண்கள் ஆவர்.





(குறிப்பு: 2025 ஆகஸ்ட் 20 நிலவரப்படி)

> *நிதி விலக்கல் முதல் அதிகாரம் அளித்தல் வரை!*
>
> *பிரதமரின் ஜன் தன் திட்டம் இந்திய மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. விளிம்பு நிலை மக்கள் நிதி ரீதியாக இணைக்கப்படும் போது, முழு தேசமும் ஒருங்கிணைந்து முன்னேறுகிறது. இந்தச் சாதனையைத்தான் பிரதமரின் ஜன் தன் திட்டம் அடைந்துள்ளது. இது மக்களின் கண்ணியத்தை மேம்படுத்தி, தங்களின் சொந்த முடிவை மேற்கொள்வதற்கான அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கியுள்ளது.*
>
> *– நரேந்திர மோடி, பிரதமர்.*

நாட்டின் இந்த வெற்றிகரமான திட்டம் சாதி, மதம், சமூகம் போன்ற அனைத்துப் பாகுபாடுகளையும் களைந்து 'அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம் ' என்ற கருத்தை உண்மையில் எதார்த்தமாக்கியுள்ளது. பல ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டவர்கள், சுரண்டப்பட்டவர்கள் தங்களின் உரிமைகளைப் பெற்றுள்ளனர். நாட்டில் புதிய தன்னம்பிக்கை ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் தற்போது ஐந்து கிலோ மீட்டர் தொலைவிற்குள் வங்கிச் சேவைகள் சென்றடைகின்றன. மக்கள் ரூபே அட்டையை எளிதாகப் பயன்படுத்துகின்றனர். தற்போது அனைத்து கிராமங்களிலும் மின்னணுப் பரிவர்த்தனைகள் அதிகரித்துள்ளன. இந்தப் பயனைத் தொடர்ந்து பெறுவதற்கு, ஜன் தன் திட்டத்தில் கணக்கு வைத்துள்ள அனைவரும் தங்களின் 'வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்' (கேஒய்சி) விவரங்களை மீண்டும் புதுப்பிக்குமாறு தாம் வலியுறுத்துவதாகப் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

# பெரிய அணுசக்தி வல்லமையாக இந்தியா உருவாகி வருகிறது.

அதிகரித்து வரும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடி, சுற்றுச்சூழல் சவால்களுக்கிடையே, இதை எதிர்கொள்வதற்கு இந்தியா விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, அணு சக்தியை நீடித்த வளர்ச்சியின் சக்திமிக்க மாற்றாகக் கருதுகிறது. உள்நாட்டுத் தொழில்நுட்ப வளர்ச்சி முதல் சர்வதேச ஒத்துழைப்பு வரை, இந்தியா தற்போது தற்சார்புடையதாக மட்டுமின்றி உலகளாவிய அணுசக்தி வரைபடத்தில் முக்கிய நாடாகவும் உருவாகிவருகிறது. 2047– ம் ஆண்டிற்குள் 100 ஜிகா வாட் அணுசக்தி திறனை எட்ட வேண்டும் என்ற லட்சிய இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது...

இந்தியாவின் பல்வகை எரிசக்தியில், அணுசக்தியை முக்கியத் தூணாக நிலைநிறுத்துவதை நோக்கி முன்னேறும் இந்தியா, 2047-ம் ஆண்டிற்குள் அணுசக்தி திறனில் ஓர் இலக்கைக் கொண்டுள்ளது. இது எரிசக்தி நம்பகத்தன்மையை உறுதிசெய்து புதைபடிம எரிபொருட்களை சார்ந்திருப்பதைக் குறைக்க உதவும். இந்த இலக்கை அடைய, உள்நாட்டு அணு தொழில்நுட்பம், அரசு - தனியார் கூட்டமைப்பில் உத்திசார்ந்த கொள்கை மாற்றங்களுடன் உள்கட்டமைப்பில் முதலீடு செய்யப்படுகிறது. எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் நீடித்தத் தன்மையை அடைய அணுசக்தியை முக்கியப் பிரிவாகக் கருதி, வளர்ச்சியடைந்த இந்தியாவுக்காக அணுசக்தி இயக்கத்தை அரசு தொடங்கியுள்ளது. உள்நாட்டு அணுசக்தித் திறனை மேம்படுத்துதல், தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல், சிறிய அணு உலை போன்ற மேம்பட்ட அணு தொழில்நுட்பங்களை விரைவுபடுத்துதல் ஆகியவற்றை இந்த முன்முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

2025- 26- ம் நிதியாண்டு பட்ஜெட்டில், அணுசக்தி இயக்கத்தை அரசு தொடங்கியது. இது சிறிய அணு உலைகளின் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சியில் கவனம்



செலுத்துகிறது.

2025-26-ம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில், அரசு தொடங்கியுள்ளஅணுசக்தி இயக்கம், சிறிய அணு உலைகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது. இந்த முயற்சிக்காக அரசு ரூ. 20,000 கோடி ஒதுக்கியுள்ளது. இது 2033-ம் ஆண்டுக்குள், உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் செயல்படும் சிறிய அளவிலான 5 அணு உலைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் 2047-ம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணுசக்தித் திறனை எட்டுவதற்கான நாட்டின் உறுதிப்பாட்டுடன் ஒத்துப்போகிறது. இது கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதிலும் எதிர்கால எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் ஒரு மைல்கல்லாக இருப்பதை நிரூபிக்கும். அது மட்டுமின்றி, அணுசக்தி இயக்கத்தை செயல்படுத்துவதற்கு ஏற்ப அணுசக்தி சட்டம் மற்றும் அணுசக்தி சேதத்திற்கான குடிமக்கள் பொறுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் பற்றி பரிசீலிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திருத்தங்களால் அணுசக்தித் திட்டங்களில் தனியார் துறை முதலீடு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இலக்குகளை எட்ட தனியார் துறையினருடன் கூட்டு

- இந்தியாவின் சிறிய அணு உலைகளை நிறுவுதல்.
- இந்தியாவின் சிறிய அளவிலான அணு உலையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு.
- அணுசக்திக்கான புதிய தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு.

டாக்டர் ஹோமி பாபாவால் தொடங்கப்பட்ட இந்தியாவின் அணுசக்திப் பயணம், சர்வதேசக் கட்டுப்பாடுகள், அணு ஆயுதப் பரவல் குறித்த தவறான அச்சங்கள் காரணமாக உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் அடிக்கடி சந்தேகங்களை எதிர்கொண்டதாக அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் கூறினார். இருப்பினும், 2014-ம் ஆண்டு முதல், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியா பெருமளவிலான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளதால், அதன் அணுசக்தித் திட்டம் துய்மையான மற்றும் நிலையான மின் உற்பத்தியின் முக்கிய அங்கமாக அதிக அளவு வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த காலங்களைப் போலன்றி, 100 ஜிகாவாட் அணுசக்தி இலக்கு அறிவிப்பானது,

## அணுசக்தித் துறையில் அண்மைக்கால முன்னேற்றங்கள்...

- இந்தியாவின் பழமை வாய்ந்த யுரேனியம் சுரங்கமான ஜடுகோடா சுரங்கங்கள்: தற்போதுள்ள சுரங்கக் குத்தகைப் பகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புதிய இருப்புக்கான குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு. இது சுரங்கத்தின் ஆயுளை 50 ஆண்டுகளுக்கும் கூடுதலாக அதிகரிக்கும்.
- 700 மெகாவாட் அழுத்தப்பட்ட கன நீர் உலையின் (பிஎச்டபிள்யூஆர்) முதல் இரண்டு அலகுகள்: வர்த்தக ரீதியிலான இவற்றின் செயல்பாடு 2023-24-ம் நிதியாண்டில் தொடங்கியது.
- நாட்டின் முதலாவது முன்மாதிரி விரைவு ஈனுலை (பிஎஃப்பிஆர் 500 மெகாவாட்): 2024ம் ஆண்டில் பல மைல்கற்கள் எட்டப்பட்டன. அவற்றில் முக்கியமானவை திரவ சோடியத்தை நிரப்புதல், நிரப்பப்பட்ட சோடியத்தை சுத்திகரித்தல் மற்றும் நான்கு சோடியம் பம்புகளையும் (2 திரவ சோடியம் பம்புகள் மற்றும் 2 இரண்டாம் நிலை சோடியம் பம்புகள்) இயக்குதல்.
- இந்திய அணுமின் கழகம் (என்பிசிஐஎல்) மற்றும் தேசிய அனல் மின் நிறுவனம் (என்டிபிசி): நாட்டில் அணுசக்தி அமைப்புகளை மேம்படுத்துவதற்கான தனியார் துறை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இதன் விளைவாக, ராஜஸ்தானில் 4 X 700 மெகாவாட் திறனுள்ள அழுத்தப்பட்ட கன நீர் உலை கொண்ட (பிஎச்டபிள்யூஆர்) மஹி-பன்ஸ்வாரா அணுமின் திட்டம் உட்பட அணுமின் நிலையங்களின் கட்டுமானம், உரிமை மற்றும் செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது.



# புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் சிறப்பம்சங்கள்

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேர்க்கைகளில் சாதனை

**234.24**

ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் (8.78 ஜிகாவாட் அணுசக்தி நீங்கலாக) எட்டப்பட்டுள்ளது- 12, ஆகஸ்ட் 2025 நிலவரப்படி

**500**

ஜிகாவாட் புதைபடிவமற்ற மின் உற்பத்தி திறன் 2030-க்குள் என்பது இந்தியாவின் இலக்காகும்.

- **புனல்மின் திறன்:** 12, ஆகஸ்ட் 2025 நிலவரப்படி பெரிய புனல்மின் உற்பத்தித் திறன் 49.62 ஜிகாவாட், சிறிய புனல்மின் உற்பத்தித் திறன் 5.10 ஜிகாவாட்.
- **காற்றாலை மின் உற்பத்தித் திறன்:** 12, ஆகஸ்ட் 2025 நிலவரப்படி 51.67 ஜிகாவாட்.

### சர்வதேச உற்பத்தித் திறன்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் மற்றும் காற்றாலை மின்உற்பத்தித் திறனில் இந்தியா உலக அளவில் நான்காவது இடத்திலும், சூரிய சக்தி மின் உற்பத்தித் திறனில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.



### அணுசக்தித் துறையில்

12, ஆகஸ்ட் 2025 நிலவரப்படி 116.24 ஜிகாவாட். இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் சூரிய சக்தி மின் உற்பத்தித் திறனின் பங்களிப்பு மட்டும் 48%.

### பிரதமரின் சூரிய வீட்டுக் கூரை இலவச மின்சாரத் திட்டம்

ஒரு கோடி குடும்பங்களுக்கு. 75,021 கோடி ரூபாய் செலவில் பிரதமரின் சூரிய வீட்டுக் கூரை இலவச மின்சாரத் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் கீழ் 14, ஆகஸ்ட் 2025 வரை 58.81 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தம் 17.24 லட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 9,841.77 கோடி ரூபாய் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### வருடாந்தர அணு மின் உற்பத்தியில் 60% அதிகரிப்பு

2014-15
**35,592**
மில்லியன் யூனிட்

2024-25
**56,681**
மில்லியன் யூனிட்

### நிறுவப்பட்ட அணுசக்தித் திறன்

இந்திய அணுமின் கழகத்தால் இயக்கப்படும் 25 அணு உலைகளில், 2014–ல் 4,780 மெகாவாட்டாக இருந்த உற்பத்தி 2025–ல் 8,780 மெகாவாட்டாக 71% அதிகரித்துள்ளது.

உலக அணுசக்தி சமூகத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் நம்பகத்தன்மையையும், அணுசக்தி மேம்பாட்டிற்கான அதன் பொறுப்பான மற்றும் வெளிப்படையான அணுகுமுறையை அங்கீகரிப்பதையும் பிரதிபலிப்பதுடன் எந்தவித எதிர்மறையான தாக்கத்தையும் காட்டவில்லை என்று டாக்டர் சிங் சுட்டிக்காட்டினார்.

### அணுசக்தி திறனை அதிகரிப்பதற்கான முன்முயற்சிகள்

வளர்ந்து வரும் எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சுற்றுச்சூழல் இலக்குகளை எட்டுவதற்கும் இந்தியா அதன் அணுசக்தித் திறனை வேகமாக அதிகரித்து வருகிறது. 2031-32-ம் ஆண்டுக்குள் அதன் அணுசக்தித் திறனை 8,180 மெகாவாட்டில் இருந்து 22,480 மெகாவாட்டாக அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை எட்டுவதில் குஜராத், ராஜஸ்தான், தமிழ்நாடு, ஹரியானா, கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசத்தில் மொத்தம் 8,000 மெகாவாட் திறன் கொண்ட 10 அணு உலைகளை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

இது தவிர, ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள கோவாடாவில் அமெரிக்காவுடன் இணைந்து 6 X 1208 மெகாவாட் அணுமின் நிலையத்தை அமைக்க அரசு கொள்கை அளவில் ஒப்புதல்




அளித்துள்ளது. இது மட்டுமின்றி, வேறு சில அணு உலைகளிலும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் அணு மின் நிலையங்கள் பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் சர்வதேச கண்காணிப்புடன் செயல்படுகின்றன. இந்திய அணு மின் நிலையங்களில் கதிர்வீச்சு அளவுகள் தொடர்ந்து உலகத் தரத்தைவிட மிகக் குறைவாகவே உள்ளன. இது சேமிப்பு மற்றும் நிலையான அணுசக்தித் திறனுக்கான நாட்டின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

எரிசக்தித் துறையில் நாடு தற்சார்பை அடைய அரசு பல்வேறு பயனுள்ள, தொலைநோக்கு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக, சூரிய மின் சக்தி 30 மடங்கு அதிகரித்துள்ளது. ஹைட்ரஜன் பசுமை திட்டத்திற்கு இந்தியா ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடு செய்கிறது. உண்மையில், 2047-ம் ஆண்டுக்குள் அணுசக்தித் திறனை 10 மடங்குக்கும் அதிகமாக அதிகரிக்கும் உறுதியுடன் இந்தியா முன்னேறி வருகிறது. மத்திய அரசின் கொள்கைகள் விளைவாக, 2025-ம் ஆண்டிலேயே நாடு 50% தூய்மையான எரிசக்தி இலக்கை எட்டியுள்ளது. இது 2030-ம் ஆண்டுக்கான இலக்கை விட 5 ஆண்டுகளுக்கு முன்பே எட்டப்பட்டுள்ளது.



**சிவில் அணுசக்தி எதிர்காலத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை உறுதி செய்யும்.**

*–நரேந்திர மோடி பிரதமர்*



விட்டல்பாய் படேல் இந்திய நாடாளுமன்றத்தின் முதலாவது சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் 100 ஆண்டுகள்

# நாடாளுமன்றம் ஜனநாயகத்தை இயக்கும் என்ஜினாக உள்ளது

**ஆரோக்கியமான மரபுகள் நிறுவப்படுவது, நாட்டின் நலனுக்காக கொள்கைகள் வகுக்கப்படுவது, சட்டங்கள் வரையப்படுவது, நாடு எந்தத் திசையில் பயணிக்கிறது என்பது இயல்பாகவே தெளிவாதல் ஆகியவற்றில் நாடாளுமன்றம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதில், அவைத்தலைவரின் பங்கு மிகவும் முக்கியமானது. பாரபட்சமின்றி, நியாயமான முறையில் செயல்படுவதில்தான் அவைத்தலைவரின் கண்ணியம் வெளிப்படுகிறது. விட்டல்பாய் படேல் இந்திய நாடாளுமன்றத்தின் முதலாவது சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் 100 ஆண்டுகளையொட்டி தில்லி நாடாளுமன்றத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்ற அகில இந்திய அவைத்தலைவர்கள் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார்…**

விட்டல்பாய் படேலின் பதவிக்காலத்தில், மத்தியிலும் அனைத்து மாநிலங்களிலும் சட்டமன்றத் துறை மற்றும் சட்டமன்றச் செயலகம் நிறுவப்பட்டன. அந்தக் கால கட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் கட்டுப்பாட்டில் எந்த சட்டமன்றமும் செயல்பட முடியாது என்று விட்டல்பாய் குறிப்பிட்டிருந்தார். சட்டமன்றத்திற்குள் நடைபெறும் விவாதங்களின் அர்த்தத்தை உறுதி செய்வதற்கு, அவை சுதந்திரமாக செயல்பட வேண்டுமென்ற கருத்துகளை நினைவு கூர்ந்த மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, ஆகஸ்ட் 24 அன்று நடந்த மாநாட்டில், இது நம் அனைவருக்கும் முக்கியமானதொரு நிகழ்வு என்று கூறினார். சட்டமன்றங்களில் சபாநாயகர் பதவியின் கண்ணியத்தை அதிகரிக்க நாம் பாடுபட வேண்டும். நமது மாநில மக்களின் குரலுக்கு பாரபட்சமற்ற தளம் ஒன்றை நிறுவ வேண்டும். ஆளும் கட்சிகளின் மற்றும் எதிர்க்கட்சிகளின் நியாயமான விவாதத்தை உறுதிப்படுத்துங்கள். மேலும், சட்டமன்றம், மக்களவை மற்றும் மாநிலங்களவை விதிகளின்படி, அவை நடவடிக்கைகள் இருப்பதை உறுதி செய்யுங்கள். ஜனநாயகத்தில் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு விவாதத்தைப் பயன்படுத்துவது சிறந்த வழியாகும். சட்டமன்றங்கள் அவற்றின் கண்ணியத்தை இழந்தபோதெல்லாம், நாம் மிகவும் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நாட்டின் நலனுக்காக மக்களின் குரலை வெளிப்படுத்தும் ஊடகமாக அவை மாறும் வகையில் சபைகளின் கண்ணியம் இருக்க வேண்டும் என்றார்.

இந்தியாவில், அவைத்தலைவருக்கு ஒரு நிர்வாக அமைப்பின்



## வலுவான ஜனநாயகம்

- மகத்தான சுதந்திரப் போராட்ட வீரர் விட்டல்பாய் படேல், ஆகஸ்ட் 1925 -ல் மத்திய சட்டமன்றத்தின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது இந்தியர்களின் சட்டமன்ற வரலாற்றின் தொடக்கமாகும்.
- விட்டல்பாய் படேல், இந்திய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு நாடு ஜனநாயகமாக இயங்குவதற்கான அடித்தளத்தை அமைத்தார்.
- மத்திய அரசிலும் அனைத்து மாநிலங்களிலும் சட்டத் துறை மற்றும் சட்டமன்றச் செயலகத்தை அமைக்க வேண்டும் என்று விட்டல்பாய் படேல் முடிவு செய்தார். இதனை அரசியல் நிர்ணய சபையும் ஏற்றுக்கொண்டது.
- விட்டல்பாய் படேல் பல பாரம்பரியங்களை உருவாக்கினார். குறிப்பாக சட்டமன்றப் பணிகள் மற்றும் சபாநாயகர் கடமைகளுக்கான பாரம்பரியங்கள் இன்னும் ஒளிமயமான விளக்கைப் போல் வழிகாட்டுகின்றன.
- விட்டல்பாய் படேல் பல நேரங்களில் பல சவால்களை சந்தித்தார், ஆனால் அவற்றை அவர் வெற்றிகொண்டார்.
- அவைத்தலைவரின் கவுரவத்தை குறைக்கவோ நாட்டின் குரலை அடக்கவோ சட்டமன்றத்தை அவர் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. சட்டமன்றப் பணிகளில் ஆதிக்கம் செலுத்தும் அந்நாளைய பிரிட்டிஷ் மனநிலையையும் அவர் அனுமதிக்கவில்லை.

“

சட்டமன்றப் பாரம்பரியங்களுக்கான அடித்தளத்தை அமைப்பதன் மூலம் இந்திய ஜனநாயகத்தை விட்டல்பாய் படேல் வலுப்படுத்தினார். சட்டமன்ற சபாநாயகராக இருந்தபோது, அவர் சபையின் கண்ணியத்தை மட்டுமின்றி, ஒவ்வொரு உறுப்பினருக்கும் முழுமையான உரிமையுடன் பேச வாய்ப்பு வழங்கி, ஜனநாயக மாண்புக்கான சிறந்த முன்னுதாரணத்தை ஏற்படுத்தினார். அவர் அனைத்து சட்டமன்ற சபாநாயர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தார். இன்று, நாட்டின் அனைத்து தரப்பினரின் நலன்களும் பாதுகாக்கப்படுவதற்காக, ஒவ்வொரு சபாநாயகரும் நியாயமான, நேர்மையான மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களை ஊக்குவிப்பது கடமையாகும்.

அமித் ஷா

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்

## மத்திய சட்டமன்றம் செயல்பட தில்லி சட்டமன்ற வளாகத்தைப் பயன்படுத்தியது

**1919 சட்டத்தின் கீழ், பிரிட்டிஷ் ஆட்சியின்போது மத்திய சட்டமன்றம் இரு அவைகள் கொண்ட நடைமுறையாக விரிவாக்கப்பட்டது. அதன்படி, சட்டமன்றத்தில் மக்களவை மற்றும் மாநிலங்களவை உருவாக்கப்பட்டன. மத்திய சட்டமன்ற மக்களவையில் 144 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 104 பேர் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், 40 பேர் நியமிக்கப்பட்டவர்கள். மத்திய சட்டமன்றம், தற்போதுள்ள தில்லி சட்டமன்றக் கட்டடத்தில் இயங்கியது. ஆகஸ்ட் 1925-ல், மகத்தான சுதந்திரப் போராட்ட வீரர் விட்டல்பாய் படேல், மத்திய சட்டமன்றத்தின் முதலாவது இந்திய சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தின் முன்னணி தலைவர்கள், இந்திய மக்களின் சுதந்திரக் கனவுகளை சட்டமன்றத்தில் வெளிப்படுத்தியும், மக்களின் விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தியும் செயல்பட்டனர். மத்திய சட்டமன்றம் மற்றும் மாநிலங்களவையின் செயல்பாடுகள் 1947 ஆகஸ்ட் 14 அன்று நிறுத்தப்பட்டன.**

அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. சட்டசபையில் மிகவும் கடினமான பங்கு யாருக்கு இருக்கிறதென்றால், அது சபாநாயகருக்கே. அவர்கள் ஓர் அரசியல் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் பதவிப் பிரமாணம் எடுத்தவுடன், அவர்கள் ஒரு நடுநிலையான நடுவராக செயல்படுகிறார்கள். ஏறத்தாழ 80 ஆண்டுகளில், நாம் ஜனநாயகத்தின் அடித்தளத்தை ஆழமாக வலுப்படுத்தியுள்ளோம். இதன் மூலம், ஜனநாயகம் இந்திய மக்களின் இயல்பிலும், உள்ளார்ந்த ஆன்மாவிலும் பதிந்திருப்பதை நிரூபித்துள்ளோம். சுதந்திரத்திற்குப் பின், இந்தியாவில் பல முறை ஆட்சிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் ஒரு துளி ரத்தமும் சிந்தாமல் அமைதியாக அதிகார மாற்றங்கள் நடந்துள்ளன. இதற்கான அடிப்படைக் காரணம், நமது சட்டமன்ற நடைமுறையை நன்றாகப் பேணிப் பாதுகாத்ததும், காலத்தின் தேவைக்கேற்ப அதில் மாற்றங்களைச் செய்திருப்பதுமாகும் என்று மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா கூறினார். நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் அவைகளில் ஆக்கப்பூர்வமான விவாதம் நடைபெறாவிட்டால், அவை உயிரற்ற கட்டடங்களாக மட்டுமே இருக்கும் என்று மத்திய அமைச்சர் அமித் ஷா மேலும் கூறினார். அரசியல் நலனுக்காக நாடாளுமன்றத்தையும், சட்டமன்றத்தையும் இயங்கவிடாமல் செய்வது விவாதமல்ல. போராட்டம் கட்டுப்பாடுடனும் நெறிப்படுத்தப்பட்டும் இருக்க வேண்டும். அடையாளப் போராட்டங்களுக்கு இடம் உண்டு. ஆனால், போராட்டம் என்ற பெயரில் அவையின் பணிகளை நாள்தோறும், முழு கூட்டத் தொடரையும் முடக்கும் புதிய மரபு உருவாகி வருகிறது. இதைப் பற்றி பொதுமக்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் சிந்திக்க வேண்டியது அவசியம்.



# பீகார் அரசியலின் முன்னுதாரணம்



பிறப்பு : 21 செப்டம்பர் 1914
மறைவு : 9 செப்டம்பர் 1984

உண்மை, நம்பிக்கை, எளிமை, தியாகம் ஆகியவற்றின் சின்னமாக விளங்கிய போலா பாஸ்வான் சாஸ்திரியின் மரபு இன்றும் பொருத்தமானதாக விளங்குகிறது. மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்த அவர், எளிய பின்னணியிலிருந்து உயர்ந்த நிலைகளை அடைந்ததால் பீகார் அரசியலின் முன்னுதாரணம் என அழைக்கப்படுகிறார். மேல் சாதியினரின் மொழி எனக் கருதப்பட்ட சமஸ்கிருதத்தை அவர் கற்றார். சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறை சென்ற சாஸ்திரி, மூன்று முறை மாநில முதலமைச்சராகப் பணியாற்றினார். ஆனால் தனது வாழ்நாள் முழுவதும் வறுமையிலேயே வாழ்ந்த அவர், தனது நேர்மைக்கும், நாணயத்திற்கும் களங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொண்டார்.

பீகார் மண்ணின் மைந்தராக விளங்கிய போலா பாஸ்வான் சாஸ்திரி, எளிமையும், நேர்மையும் கொண்ட தலைவராகவும், மாநிலத்தின் முதலாவது தலித் முதலமைச்சராகும் பெருமையையும் பெற்றவர். விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலனுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த அவர், எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும் எளிமையை விட்டு விலகவில்லை. அமைச்சர் மற்றும் முதலமைச்சராக இருந்த காலத்திலும் கூட பலமுறை மரத்தின் கீழ் அமர்ந்து பணிகளை செய்தவர். தரையில் பரப்பிய போர்வையில் அமர்ந்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி பிரச்சனைகளைத் தீர்த்தவர் என்றும் கூறப்படுகிறது. உலக வாழ்க்கை நிலையைத் துறந்து, நாட்டுக்கும், சமூகத்திற்கும் மட்டுமே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

நாடு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில், சுதந்திரத்திற்காக ஏங்கிய மக்களின் நடுவே, பூர்னியா மாவட்டம், பெயர்கச்சி என்ற கிராமத்தில் பிறந்த போலா பாஸ்வான் சாஸ்திரி, தேசத்தந்தை மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் கொண்டு அவர் வாரணாசிக்கு சென்று சமஸ்கிருதம் பயின்று ‘சாஸ்திரி’ பட்டம் பெற்றார். அப்போதிருந்து ‘சாஸ்திரி’ அவரது பெயருடன் இணைந்தது. அறிவாற்றலிலும், கல்வியிலும் வல்லவராக இருந்த அவர், அனைவரையும் கவர்ந்தார். பின்னர், டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் சிந்தனைகளாலும் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

போலா பாஸ்வான் சாஸ்திரி முதல்முதலாக 1968-ம் ஆண்டு பீகார் மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். ஆனால், அவர் அந்தப் பொறுப்பில் மூன்று மாதங்கள் மட்டுமே இருந்தார். பின்னர், 1969-ல் 13 நாட்களும், 1971-ல் ஏழு மாதங்களும் முதலமைச்சராக இருந்தார். மத்திய, மாநில அரசியலிலும் அவர் தீவிரமாக செயல்பட்டார். பல்வேறு பதவிகளை வகித்தபோதும், அவர் ஊதியத்தைத் தவிர வேறு எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. அவருக்கு சொந்தமாக ஆடம்பர பங்களாவோ காரோ இல்லை. குடிசையில் பிறந்து, குடிசையிலேயே தனது வாழ்நாளின் இறுதிக் காலத்தைக் கழித்தார். மேலும், 1984 செப்டம்பர் 9 அன்று அவர் மரணமடைந்தபோது, இறுதிச்சடங்குகளை நடத்தக் கூட அவரது குடும்பத்திடம் போதிய பணம் இல்லை என்று கூறப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி, குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தபோது, 2014, மார்ச் 10 அன்று போலா பாஸ்வான் சாஸ்திரியை நினைவு கூர்ந்து, பூர்னியாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தினார். அதேபோன்று, 2022, செப்டம்பர் 23 அன்று பீகார் மாநிலம் பூர்னியாவில் நடைபெற்ற ‘ஜன் பாவ்னா மகாசபா’வில் உரையாற்றிய மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, போலா பாஸ்வான் சாஸ்திரியை நினைவு கூர்ந்தார். பீகார் மாநிலத்தின் முதலாவது தலித் முதலமைச்சரை வழங்கிய மாவட்டம் பூர்னியாதான் என்று அவர் குறிப்பிட்டார்.



**PMO India** @PMOIndia

त्योहारों में हम जो भी खरीदारी करें, जो भी गिफ्ट दें...घर की साज-सज्जा के लिए जो भी सामान लाएं...वो मेड इन इंडिया हो।






**Rajnath Singh** @rajnathsingh

This fusion of technology and surprise is making warfare more complex and unpredictable than ever before. That is why we must not only master existing technologies but also ensure that we are constantly prepared for new innovations and unforeseen challenges.



**Amit Shah** @AmitShah

मोदी जी ने 130वें संविधान संशोधन बिल में CM और मंत्रियों के साथ प्रधानमंत्री भी हो, यह खुद से डलवाया है।

एक CM जेल में रहे और सचिव, DGP, चीफ सेक्रेटरी आदेश लेने जेल जाए, यह हमारे लोकतंत्र को शोभा नहीं देता।

जब संविधान बना था, तब संविधान निर्माताओं ने इस निर्लज्जता की कभी कल्पना भी नहीं की थी कि भविष्य में ऐसे नेता भी आएँगे, जो जेल में रहकर सरकार चलाएँगे।



**Nitin Gadkari** @nitin_gadkari

11 years ago, Hon'ble PM Shri @narendramodi Ji sowed the seed of financial empowerment through Jan Dhan Yojana. Today, with 56+ crore accounts, women leading the way, and villages linked to the nation's economic pulse, PMJDY is more than banking—it is trust in action, dignity in every wallet, and empowerment in every household. A vision that once began as inclusion, now shines as India's financial revolution.

#11YearsOfJanDhan



**Jagat Prakash Nadda** @JPNadda

आदरणीय प्रधानमंत्री श्री @narendramodi जी के नेतृत्व में नई हेल्थ पॉलिसी बनी, जो holistic health policy है।
इस health policy में हम लोगों ने पहली बार जोर दिया कि इसमें prevention होना चाहिए, preventive, promotive और curative etc. हेल्थकेयर होना चाहिए। यानी, पहले तो व्यक्ति बीमार ही न हो, इसकी हमें चिंता करनी है।



**Dr Jitendra Singh** @DrJitendraSingh

#ISRO successfully conducts the first Integrated Air Drop Test (IADT-01), showcasing the parachute-based deceleration system for #Gaganyaan.

A proud joint effort of ISRO, IAF, DRDO, Indian Navy & Coast Guard.

# India, China committed to fair resolution of border issue: Modi

After PM meets the Chinese President, MEA says ready for 'reasonable and mutually acceptable' solution on border; Xi says border issues should not define overall relations; Foreign Secretary says India, China economies can stabilise world trade

**Vighnesh P. Venkitesh**
TIANJIN



**Improved ties:** Prime Minister Narendra Modi with Chinese President Xi Jinping during a meeting on the sidelines of the Shanghai Cooperation Organisation summit in the Chinese city of Tianjin. PMO

Prime Minister Narendra Modi, at his meeting with Chinese President Xi Jinping on Sunday, underlined the importance of peace and tranquillity on the India-China border for continued development of bilateral relations.

Meeting on the sidelines of the Shanghai Cooperation Organisation summit in the northern Chinese city of Tianjin, the two leaders agreed on the need to strengthen people-to-people ties through direct flights and visa facilitation, building on the resumption of the Kailash Mansarovar Yatra and tourist visas, amid an improving relationship between the neighbours. Mr. Xi said the border issue should not define overall relations.

"The two leaders noted with satisfaction the successful disengagement last year and the maintenance of peace and tranquillity along the border areas since then. They expressed commitment to a fair, reasonable, and mutually acceptable resolution of the boundary question," the Ministry of External Affairs said in a statement following the meeting.

Mr. Modi called for mutual support in combating terrorism, Foreign Secretary Vikram Misri said at a press briefing on Sunday night.

CONTINUED ON » PAGE 10

# Indians must follow 'vocal for local' mantra, says PM

In his monthly broadcast *Mann Ki Baat*, Modi calls for a self-reliant India, amid trade turmoil due to the U.S. tariffs; expresses anguish at the havoc caused by natural disasters in the country

**The Hindu Bureau**
NEW DELHI



Say with pride, this is swadeshi... the only mantra is vocal for local, the only path is Aatmanirbhar Bharat, the only goal is developed India

NARENDRA MODI
Prime Minister

Prime Minister Narendra Modi on Sunday urged Indians to take pride in "swadeshi (made in India)" products as the festival season approaches. In his monthly radio address *Mann Ki Baat*, he stressed that India should follow one mantra, "Vocal for Local"; one path, "Atmanirbhar Bharat (self-reliant India)"; and one goal, "developed India".

Everything that is needed in life should be swadeshi, he said, reiterating his recent appeal for the country to become self-reliant after U.S. President Donald Trump imposed a 50% tariff on Indian goods.

As different parts of the country celebrate Ganesh Chathurthi, and as Durga Puja and Deepavali approach, he said that people should not forget about swadeshi products during the festivals, while purchasing gifts, clothes, or decor items.

"Say with pride, 'This is swadeshi'," he said, repeating the phrase thrice. "The only mantra is vocal for local, the only path is Aatmanirbhar Bharat, the only goal is developed India," he said in the concluding remarks of his monthly broadcast.

He also expressed his anguish at the havoc that natural disasters had wreaked during the rainy season. "This monsoon season, natural disasters are testing the country," Mr. Modi said.

"At places, homes were destroyed; at others, fields were submerged; families were ruined in large numbers. Elsewhere, bridges were swept away by gushing water; roads were washed away; people's lives were enmeshed in danger. These incidents have saddened every Indian," he said.

The Prime Minister added that national and State emergency forces had toiled day and night to help people. Modern technology and resources, such as thermal cameras, life detectors, sniffer dogs and drone surveillance, have been deployed in rescue and relief efforts, he said, adding that security forces, local populations, social workers, doctors, and the administration had made every possible effort in this hour of crisis.

**J&K sports events**

He highlighted two major events in Jammu and Kashmir amid the devastating natural calamity – the first day-night cricket match in Pulwama and a water sports festival in Srinagar.

"Not many people noticed these. But you will be happy to know about those achievements. A record number of people gathered in a stadium in Pulwama... Pulwama's first day-night cricket match was played here. Earlier this was impossible, but now my country is changing," he said. "The second event that caught attention was the country's first 'Khelo India Water Sports Festival', and that too held at Dal Lake in Srinagar. Truly, what a special place to host a festival like this." Speaking to Mohsin Ali, who is from Jammu and Kashmir and won a gold medal, he said the youth of the region can bring glory to the country as they have so much potential.

Mr. Modi said love for the Ramayana and Indian culture was now reaching every corner of the world, noting that a 51-foot statue of Lord Ram was unveiled at Mississauga in Canada earlier this month.

A unique exhibition was held in Vladivostok, a very cold region of Russia, this month, in which paintings made by Russian children on different themes of the Ramayana were showcased. "It is indeed heartening to see the growing awareness of Indian culture in different parts of the world," Mr. Modi said.

# PMJDY hits 560 mn accounts, ₹2.68 lakh cr deposits in 11 yrs

**Rajeev Jayaswal**
letters@hindustantimes.com



Prime Minister Narendra Modi. PTI

**NEW DELHI:** Prime Minister Narendra Modi on Thursday said the Pradhan Mantri Jan Dhan Yojana (PMJDY) has enhanced dignity and empowered underserved citizens as the world's biggest financial inclusion scheme achieved over 560 million bank accounts in the last 11 years with deposits exceeding ₹2.68 lakh crore.

"When the last mile is financially connected, the entire nation moves forward together. That is exactly what the PM Jan Dhan Yojana achieved. It enhanced dignity and gave people the power to script their own destiny," he said in a post on X as the central scheme completes 11 years. PMJDY was launched by Modi on August 28, 2014.

PMJDY ensures that every unbanked adult has access to a basic bank account with zero balance requirements and no maintenance charges. Each account comes with a free RuPay debit card, offering an accident insurance cover of ₹2 lakh, encouraging digital transactions and financial security. Account holders are also eligible for an overdraft facility of up to ₹10,000, providing a safety net during emergencies. According to government data, the average deposit per PMJDY account is ₹4,768 as on August 13.

On this occasion, Union finance minister Nirmala Sitharaman called it a key driver of economic growth and development. "Universal access to bank accounts enables the poor and marginalised to participate fully in the formal economy and benefit from its opportunities," she said in a statement.

"PMJDY has been one of t[he] major channels for deliveri[ng] benefits under various schem[es] using Direct Benefit Transf[er] (DBT), providing credit faciliti[es], social security, and enhanci[ng] savings and investments," s[he] said. More than 380 million fr[ee]-of-cost RuPay cards have be[en] issued, facilitating digital tran[s]actions, she added.

It is noteworthy that und[er] PMJDY, 67% of the accounts a[re] opened in rural or semi-urb[an] areas, and 56% of the accoun[ts] are opened by women, indica[t]ing how underprivileged indiv[id]uals living in far-flung areas [of] the country have been broug[ht] into the formal financial secto[r], the FM said. PMJDY accoun[ts] have no restriction of balanc[e] or amount of transactions if fu[lly] KYC compliant. It is a Basic Sa[v]ings Bank Deposit Accou[nt] (BSBD) account and provid[es] free of cost facilities for t[he] deposit of cash at bank branch[es] as well as ATMs, receipt a[nd] credit of money through a[ny] electronic channel or by mea[ns] of deposit and collection [of] cheques drawn by governme[nt] agencies and departments.

WAYS TO BALANCE BILATERAL TRADE DISCUSSED

# We're partners, not rivals, say Modi, Xi

**SHUBHAJIT ROY**
Tianjin, August 31



Prime Minister Narendra Modi with Russian President Vladimi[r] Putin (centre) and Chinese President Xi Jinping at the SCO Summit in Tianjin on Sunday X/RUSSIANE...

**UNDERLINING THE MOVE** to repair India-China bilateral ties — after a five-year military standoff along the Line of Actual Control (LAC) in eastern Ladakh — Prime Minister Narendra Modi and Chinese President Xi Jinping emphasised on Sunday that the two countries were "partners, not rivals". While they agreed on a "fair, reasonable and mutually acceptable resolution" of the border issue, they flagged the importance of a multipolar world and "role of their two economies to stabilise world trade".

The meeting — their second in the last 10 months — comes in the backdrop of the deepening trust deficit between India and the United States over the 50% tariffs imposed by the Donald Trump administration. Significantly, the Ministry of External Affairs (MEA) statement said Modi noted that "India and China both pursue strategic autonomy, and their relations should not be seen through a third country lens."

Xi said the two countries should strengthen "multilateral cooperation to safeguard common interests", and should "not let the border issue define the overall China-India relationship", according

The bilateral meeting, on the sidelines of the Shanghai Cooperation Organisation (SCO) Summit here, lasted for about an hour. This is Modi's

the sidelines of the BRICS lea[d]ers' summit in Russia's Kaz[an] last October, when their tal[ks] resulted in disengagement [of] troops from two key frictio[n] points in eastern Ladakh.

"Last year in Kazan, we h[ad] very productive discussio[ns] which gave a positive directi[on] to our relations," Modi told [...] on Sunday. "After the dise[n]gagement at the border, [an] atmosphere of peace and st[a]bility is now in place," he sai[d].

# India, Japan talk semiconductors

Japanese chip makers plan to tie up with India

PRESS TRUST OF INDIA
Tokyo, August 30





Prime Minister Narendra Modi and Japanese Prime Minister Shigeru Ishiba at a semiconductor plant (top); they travel on board a bullet train (above) on Saturday PTI

**PRIME MINISTER NARENDRA** Modi on Saturday visited a semiconductor plant at Sendai in the Japanese prefecture of Miyagi, a day after New Delhi and Tokyo resolved to deepen cooperation in the critical technology sector.

Modi, accompanied by his Japanese counterpart Shigeru Ishiba, travelled in a bullet train to Sendai, situated at a distance of over 300 km from Tokyo.Prime Minister Ishiba hosted a lunch in honour of Modi in Sendai that was joined by the governor of Miyagi prefecture and other dignitaries.PM Modi's visit to the Tokyo Electron Miyagi Ltd (TEL Miyagi) in Sendai highlighted the complementarity between India's growing semiconductor manufacturing ecosystem and Japan's strengths in the sector, an Indian readout said.

TEL Miyagi, a leading Japanese company in the semiconductor sector, has plans for collaborations with India.Modi was briefed about TEL's role in the global semiconductor value chain, its advanced manufacturing capabilities and its ongoing and planned collaborations

semiconductor supply chain partnership as well as ongoing partnerships under the India–Japan Industrial Competitiveness Partnership and Economic Security Dialogue," it said. It said the joint visit by Modi and Ishiba to the facility also underscored the shared vision of India and Japan to develop robust, resilient and trusted semiconductor supply chains.

"Prime Minister Modi conveyed his appreciation to Prime Minister Ishiba for joining him in this visit and reaffirmed India's readiness to work closely with Japan in this strategic domain," the MEA said. On Saturday, Modi met governors of 16 Japanese

# Japan vows $68bn investment as PM, Ishiba chart future path

**Rezaul H Laskar**
letters@hindustantimes.com



**NEW DELHI:** Japan on Friday set a target of 10 trillion yen ($68 billion) in private investments in India over a decade as Prime Minister Narendra Modi and his counterpart Shigeru Ishiba finalised a 10-year roadmap to deepen economic cooperation in vital areas such as technology, digitalisation and rare earths against the backdrop of uncertainty created by the trade policies of the US administration.

Modi and Ishiba launched an Economic Security Initiative at their annual bilateral summit in Tokyo to ensure supply chain resilience in strategic sectors such as semiconductors, telecom, pharmaceuticals and emerging technologies, and also

# உடல் பருமனிலிருந்து விடுதலை

## செங்கோட்டையிலிருந்து ஓர் அழைப்பு

உடல் பருமன் என்பது ஒரு பெரிய சிக்கலாகவும், பல்வேறு நோய்களின் அடிப்படைக் காரணமாகவும் உள்ளது. நாட்டு மக்களைத் தனது குடும்பமாகக் கருதும் பிரதமர் நரேந்திர மோடி, அதிகரித்து வரும் உடல் பருமன் பிரச்சனையிலிருந்து விடுபட வேண்டும் என செங்கோட்டைக் கொத்தளத்தில் இருந்து அழைப்பு விடுத்தார். தூய்மை, தற்சார்பு இந்தியா போன்ற முழக்கங்களின் மூலம் நாட்டில் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்திய பிரதமர் மோடி, இப்போது அதை மேலும் ஒரு படி முன்னேற்றியுள்ளார். ஒவ்வொரு குடும்பமும் உணவில் எண்ணெய் பயன்பாட்டை 10% குறைக்க வேண்டும் என வலியுறுத்தினார். இந்த அழைப்பு, தேசத்திற்கான முக்கிய நடவடிக்கையாகும். ஏனெனில் ஆரோக்கிய இந்தியா திட்டம் என்பது



- ஓர் ஆய்வின்படி, நமது நாட்டில் இன்று எட்டு பேரில் ஒருவருக்கு உடல் பருமன் பிரச்சனை உள்ளது. வரவிருக்கும் ஆண்டுகளில், ஒவ்வொரு மூன்றாவது நபரும் அதிக எடையுடன் இருப்பார்.
- தேசிய குடும்ப சுகாதார ஆய்வு-5 மதிப்பீட்டின்படி, பெண்களில் 24% மற்றும் ஆண்களில் 23% பேர் அதிக எடையுடன் அல்லது பருமனுடன் இருக்கின்றனர்.
- உலக சுகாதார அமைப்பு தரவின்படி, 2022-ம் ஆண்டு உலக அளவில் சுமார் 250 கோடி மக்கள், தேவையை விட அதிக எடையுடன் இருக்கின்றனர்.



" நமது திறனை உயர்த்த வேண்டுமென்றால், முதலில் நமது உடல் ஆரோக்கியம் மற்றும் நலனில் கவனம் செலுத்த வேண்டும். உடல்நலத்திற்கும் எடை குறைப்பதற்கும் நான் கூறிய ஓர் ஆலோசனை நினைவிருக்கிறதா? உணவில் எண்ணெய் பயன்பாட்டை 10 சதவீதம் குறையுங்கள், எடையும் குறையும். நீங்கள் ஆரோக்கியமாக இருந்தால், உங்கள் வாழ்க்கையும் சிறப்பாகும்."

— நரேந்திர மோடி, பிரதமர்

NEW INDIA
SAMACHAR
FORTNIGHTLY

RNI NO.: DELTAM/2020/78809 September 16-30 2025

RNI Registered No DELTAM/2020/78809, Delhi Postal License No DL(S)-1/3551/2023-25, WPP NO U(S)-99/2023-25, posting at BPC, Market Road, New Delhi-110001 on 13-17 advance Fortnightly (Publishing Date: September 02, 2025, Pages-52)

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHED & PRINTED BY:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003

Printed at
Kaveri Print Process Pvt. Ltd.
A-104 Sector-65,
Noida-201301 U.P.

Tamil
Vol-6 Issue-6